உதயன்



www.onlineuthayan.com

28பக்கங்கள் சுடர் 28 கதிர் 052 வள்ளுவர் ஆண்டு 2044 தை 04 வியாழக்கிழமை (17/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

# மீண்டும் போராளிக்குழு உருவாகும் விரைவில்

## சிறுபான்மையினருடன் பேச்சு நடத்த எதிராக இருந்தவர் மஹிந்த ஒருவரே என்றார் சந்திரிகா

கொழும்பு, ஜனவரி 17

அரசு தனது மூலோபாயத்தின் படியே தொடர்ந்து நடக்குமேயானால், இன்னும் சில ஆண்டுகளில் இன்னொரு போராளிக்குழு உருவாகும்.

மஹிந்த ஒருவரே எனது அமைச்சரவையில் சிறுபான்மையினருடனான பேச்சுகளுக்கு எதிராக இருந்தார். அவரது தேவை அவர்களைக் கொல்ல வேண்டும் என்பதாகவே இருந்தது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அடிப்படைவாத போகோ ஹராம் குழுவின் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நைஜீரியாவின் தலைநகர் லாகோசில் இருந்து வெளியாகும்'அஜோ ஒகுலஜா' இதழுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சந்திரிகா வழங்கிய செவ்வியின் சுருக்கம் வருமாறு:–

தமிழ்ப் புலிகளுக்கு எதிரான மஹிந்த ராஜபக்ஷவின் தாக்குதல் இப்போது அனைத்துலக சமூகத்தில் மிகப் பெரிய விவகாரமாக உள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபை அதை இன்னமும் விசாரித்துக் கொண்டிருக்கிறது.

நாம் போரை முடிவுக்குக் பார்க்க பக்கம் 04



## மௌனமாக இருப்பதும் கூட இராஜதந்திர வழிமுறை தான்

### இந்தியத் துணைத் தூதுவர் கூறுகிறார்.

யாழ்ப்பாணம், ஜன.17

இந்தியா மௌனமாக இருப்பதால் எதையும் செய்யவில்லை என்று நினைக்க வேண்டாம். மௌனம் இராஜதந்திர வழி முறைதான். இந்தியா மௌனமாக இருந்தாலும் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருக்கின்றது.

இவ்வாறு இந்தியத்துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

யாழ்.கச்சேரியடியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில், பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டுள்ளனர். அதைவிட வேறுபல கைதுகளும் இடம்பெற்று வருகின்றன. இந்த குழப்ப நிலைமை தொடர்பில் இந்திய அரசு ஏன் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றது என்று ஊடகவியலாளர்கள் தூதுவரிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த துணைத் தூதுவர்,

மௌனமாக இருத்தல் என்பது கூட இராஜதந்திர வழிமுறைதான். எல்லாவற்றையும் பிரபல்யப்படுத்திச் செய்ய வேண்டும் என்பதில்லை. ஊடகங்கள் வாயிலாக அவற்றை வெளிப்படுத்தி செய்யவேண்டிய பார்க்க பக்கம் 04

## பளை – காங்கேசன் ரயில் பாதை புனரமைப்பு செப்ரெம்பரில் பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஜன.17

இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துடன் காங்கேசன்துறை வரையான ரயில் பாதைப் புனரமைப்பு பணிகள் பூர்த்தியாகும். நவீன முறைகளைப் பயன்படுத்தியே ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

150 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் பளை முதல் காங்கேசன்துறை வரையான 56 கிலோமீற்றர் ரயில் பாதைப் புனரமைப்பு இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவுபெறும்.

நாவற்குழி பாலம் மற்றும் ஆனையிறவுப் பகுதிகளில் ரயில் பாதைப் புனரமைப்பில் சில தாமதங்கள் இருக்கின்றன. ஆனையிறவில் கூட விரைவில் ரயில் பாதை அமைக்கப்பட்டு விடும். நாவற்குழி பாலத்துக்குரிய ரயில் பாதைப் புனரமைப்புக்கான பொருள்கள் தயார் செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட வேண்டும்.

தற்போது நவீன தொழில் பார்க்க பக்கம் 04

## பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைதானவர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.17

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் யாழ்.மேல் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. அதனையடுத்து அவர் நிரபராதி என இனங்காணப்பட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்ற பார்க்க பக்கம் 04

## அவசரமாக டில்லி விரைகிறார் பீரிஸ்

### நீதித்துறைச் சர்ச்சை குறித்து விளக்குவார்

கொழும்பு, ஜன.17

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடுத்தவாரம் டில்லிக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த பயணத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித்துடன் அமைச்சர் பீரிஸ் பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகார மற்றும் சட்டவாக்கத் துறைக்கும் இடையிலான மோதல் சர்ச்சை மற்றும் பிரதம நீதியரசர் பதவிநீக்க விவகாரம் ஆகியவை குறித்து அமைச்சர் பீரிஸ் விளக்கமளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில், பிரதம நீதியரசர் பதவி நீக்க விவகாரம் சர்வதேச நாடு பார்க்க பக்கம் 04

## மொஹானை எதிர்த்துப் போராட எதிரணி அழைப்பு

கொழும்பு, ஜன.17

புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது எனக் கோரிக்கை விடுத்துள்ளது அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவ பார்க்க பக்கம் 04

## அரசமைப்பை மாற்றுங்கள்; அதிகாரங்களை பகிருங்கள்

### தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜன.17

''எல்லா அதிகாரங்களும் ஒரு தனி மனிதரிடம் குவிந்திருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையுடைய இந்த அரசமைப்புச் சட்டம் நீக்கப்படவேண்டும்; மாற்றப்படவேண்டும். புதிய அரசமைப்புச் சட்டத்தினூடாக இன, மத பேதமின்றி அனைவருக்கும் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டு அனைவரும் சமவுரிமையுடன் வாழ வேண்டும்.''



– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கோரிக்கை விடுத்தது.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் பார்க்க பக்கம் 04

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கு முன்னுரிமை

### புதிய பிரதம நீதியரசர் கூறுகிறார்

கொழும்பு, ஜன.17

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் முன்னுரிமையளித்து செயற்படப்போவதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்று உறுதியாகத் தெரிவித்தார்.

புதிய பிரதம நீதியரசராகப் பதவியேற்ற கையோடு 'உதயனி'டம் கருத்து வெளியிட்ட மொஹான் பீரிஸ், தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் பாராமுகமாக இருந்துவிட முடியாதென்றும் குறிப்பிட்டார்.

''நாடு சமாதானத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. பல பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகாண வேண்டும். அதில் தமிழ் அரசியல் கைதிகளின் விடயமும் முக்கியமானது. அவர்களின் வழக்குகள் துரித விசாரணைக்கு உட்படுத்தப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து நான் முன்னுரிமையளித்து செயற்படத் தீர்மானித்துள்ளேன்'' – என்றார் மொஹான் பீரிஸ்.

நீதித்துறையின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்படும் செயற்றிட்டங்கள் உள்ளனவா என்று கேட்டபோது பதிலளித்த அவர், ''நிச்சயமாக, நீதித்துறையினூடாக அனைத்து மக்களுக்கும் நேர்மையான சேவையை மேற்கொள்ள என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்'' என்றார் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ்.

இதேவேளை, புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் வடக்கு,கிழக்குக்கான பயண பார்க்க பக்கம் 04

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

இன்னும் 1 நாள்

Gold Sponsor

dimo TECHNOLOGY

குழந்தையின்மையை போக்குவதற்கான (மலட்டுத்தன்மை நீக்குவதற்கான) இலவசக் கருத்தரங்கு

யாழ். மக்களின் நன்மை கருதி பிரார்த்தனா வள நிலையம் ஏற்பாடு செய்யும் மலட்டுத்தன்மை நீக்குவதற்கான இலவசக் கருத்தரங்கு நாளை (18.01.2013) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நாவலர் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. Dr.K.சிவனேசன் (Gynaccologist and Specialist) அவர்களால் நடத்தப்படும் இக் கருத்தரங்கிற்கு அனைவரையும் அழைக்கின்றோம்.

(Prarthana Golden Key Reproductive Health Ltd)

(c/6937)(e/11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி மாணவர்களுக்கு இந்தியாவின் புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், ஜன.17

இந்திய அரசினால் வட பகுதி மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு புலமைப்பரிசில் திட்டங்கள் வழங்கப்படவுள்ளதாக இந்திய துணைத் தூதரக அதிகாரி மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்திய துணைத்தூதரகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

ஐ.சி.சி.ஆர். புலமைப்பரிசில்கள் இளமாணிப் பட்டப்படிப்புகள், மருத்துவத்துறை, பொறியியல்துறை ஆகியவற்றில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஐ.சி.சி.ஆர். புலமைப்பரிசில்களின் கீழ் நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தினால் மருத்துவம் தவிர்ந்த பொறியியல், விஞ்ஞானம், வணிகம், பொருளியல்,வர்த்தகம் மானிடவியல் மற்றும் கலை ஆகிய துறைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இந்தப் புலமைப்பரிசில்களுக்கான இறுதித் திகதி பெப்ரவரி 10 ஆம் திகதி ஆகும்.

மௌலானா ஆசாத் புலமைப்பரிசில் திட்டம் பொறியியல், விஞ்ஞானம், பொருளியல்,வர்த்தகம் மானிடவியல் மற்றும் கலைத்துறைகளுக்கான முதுமாணி பட்டப் படிப்புக்கானது. இந்தப் புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களை பெப்ரவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.

ராஜீவ்காந்தி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்பத்துக்கான இளமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்களை பெப்ரவரி 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

ஐ.சி.சி.ஆர். புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தின் ஒரு பிரதியை இந்தியத் துணைத் தூதரகம், 14, மருதடிலேன், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப் படிவத்தை மட்டுமே அனுப்பமுடியும்.

இளமாணிப் பட்டப்படிப்புகளுக்கான பொதுத் தகைமைகளாக க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். முக்கிய பாடங்களில் 'பி' சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் 'பி' சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி முழு நேரமாக எந்தஒரு பல்கலைக்கழகத்திலோ அல்லது உயர் கல்வி நிலையத்திலோ இளமாணிப் பட்டப்படிப்பு மாணவராகக் கல்வியைத் தொடர்பவராக இருக்கக்கூடாது.

விண்ணப்ப முடிவுத் திகதி அன்று விண்ணப்பதாரி 22 வயதுக்கு குறைந்தவராக இருப்பதுடன் இலங்கைப் பிரஜையாகவும் இருத்தல் வேண்டும்.

ஏனைய புலமைப்பரிசில்களாக ஐ.ஓ.ஆர்.-ஏ.ஆர்.சி. புலமைப்பரிசில்களில் சுதேச வைத்தீய்த்துறை உட்பட அனைத்துக் கற்கை நெறிகளுக்கான முதுமாணிப் பட்டப் படிப்புகள், பொதுநலவாயப் புலமைப்பரிசில் திட்டத்தில் மருத்துவம் தவிர்ந்த அனைத்துப் பாடங்களுக்கான முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்புகள், 'சார்க்' புலமைப்பரிசில் திட்டத்தில் மருத்துவம் தவிர்ந்த அனைத்துப் பாடநெறிகளுக்குமான முதுமாணிப் பட்டப்படிப்புக்கள் ஆகியவற்றுக்கு உயர்கல்வி அமைச்சு தகைமை வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

முழுமையாகப் பூர்த்தியாக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதிக்கு முன்னரும் முதுமாணிப் பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதிக்கு முன்னரும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மருத்துவத்துறை, பொறியியல்துறைகளுக்கான கற்கைநெறிகளுக்கு நுழைவுப் பரீட்சைகள் நடைபெறும்- என்றார்.

(த-5-13)

## கொள்ளைக் குற்றத்துக்கு 12 மாதங்களே கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஜன. 17

கொலை அச்சுறுத்தல் விடுத்து நகைகளைக் கொள்ளையடித்தவருக்கு அபராதமும் கடூழிய சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. சில வருடங்களுக்கு முன்னர் இந்தக் கொள்ளை இடம்பெற்றது. சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டவர் மீது 3 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. அத்துமீறி வீட்டினுள் புகுந்தமை, அங்கிருந்தவர்களுக்கு அடித்துக் காயம் ஏற்படுத்தியமை, கொலை அச்சுறுத்தல் விடுத்துப் பெறும திமிக்க நகைகளைக் கொள்ளையடித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. விசாரணை நிறைவில் சந்தேக நபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார்.

முதல் இரண்டு குற்றங்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் 3 ஆயிரம் ரூபா அபராதமும், அபராதம் செலுத்தத் தவறின் 2 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அத்துடன் கொலை அச்சுறுத்தல் விடுத்து, நகைகளைக் கொள்ளையடித்த குற்றத்துக்காக 12 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவற்றில் 8 மாதங்கள் கட்டாயம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பதாகும். மிகுதி நான்கு மாதங்கள் ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

நேற்றைய உதயனின் இரண்டாம் பக்கத்தில் ''கொள்ளைக் குற்றத்துக்கு 12 வருடக் கடூழியச் சிறை'' என்ற தலைப்பில் மேற்குறித்த விடயம் தொடர்பாக பிரசுரமான செய்தியில் 12 மாதங்கள் கடூழியச் சிறை என்பதற்குப் பதிலாக, 12 வருடங்கள் எனத் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டு விட்டது. தவறுக்கு வருந்துகிறோம். ஆசிரியர்

## வர்த்தக நிலையங்களுக்கு ஞாயிறு விடுமுறை தினமாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களைப் பூட்டி பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு அனைத்து வர்த்தகர்களையும் யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது. இது தொடர்பில் வணிகர்கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களது நலன் பேணப்பட வேண்டும். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஏனைய தரப்பினரது நலன் பேணப்பட வேண்டும்.

இவை தொடர்பில் தொழில் திணைக்களம் தொடர்ச்சியான அறிவுறுத்தலை வழங்கிவருகிறது. எனவே வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி அனைத்துத் தரப்பினருக்கும் முற்றுமுழுதாக விடுமுறை வழங்குமாறு கேட்கப்படுகின்றனர்.

**வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி முற்று முழுதாக விடுமுறை**

மருந்துக் கடைகள், உணவகங்கள் இதற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இதனை நடைமுறைப்படுத்துமாறு அனைத்து வர்த்தகர்களையும் கேட்டுக் கொள்கின்றோம் என்று யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (ஐ-4)

## சிறுமி மீது துஷ்பிரயோகம் ஆலயப் பூசகர் கைதானார்

பாடசாலை சென்ற பதின்ம வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் மீசாலையைச் சேர்ந்த பூசகர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரஸ்தாப சிறுமி வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள கோயில் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குறித்த பூசகர் மீசாலையிலிருந்து கோயிலுக்குச் சென்றுவருபவர்.

பிரஸ்தாபச் சிறுமி அங்கிருந்து தப்பிச் சென்று பெற்றோருக்குச் சம்பவம் தொடர்பில் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அயலவர் ஒன்றுகூடி பூசகரைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தனர். அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.(த-4-9)

## நீதியரசர் விவகாரத்தில் அனைவரையும் காட்டிக்கொடுத்து விட்டது ஐ.தே.கட்சி

கொழும்பு, ஜன.17

அரசை வீழ்த்துவதற்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்த பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அனைவரையும் அரசிடம் காட்டிக்கொடுத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு செய்தால் 2014 இல் மட்டுமல்ல 2054 ஆம் ஆண்டில் கூட அதற்கு ஆட்சி அமைக்க முடியாது என்று புதிய சிஹல உறுமய கட்சித் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்தார்.

நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தால் 90 நாள்களில் அரசை வீழ்த்துவேன். முடியாவிட்டால் அப்பதவியிலிருந்து விலகுவேன்.

பகலும் இரவும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருக்க கூடாது எதற்கும் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவதற்கான அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டதை தெரிவித்தார்.

**அரசை வீழ்த்த வேண்டுமெனில் நாம் எதற்கும் தயாராக இருக்க வேணடும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியும்.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை நடவடிக்கையில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான விஜேதாஸ ராஜபக்ஷ முழு நீதித்துறையையும் காட்டிக்கொடுத்து விட்டார். அது மட்டுமன்றி ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசின் காலடியில் விழுந்து அனைவரையும் காட்டிக்கொடுக்கிறது.

இப்படியானவர்களுடன் இணைந்து நாம் எப்படி அரசை விரட்டும் நடவடிக்கையில் ஈடுபடுவது?

ஐக்கிய தேசியக் கட்சியினர் காலையில் ஒரு கதையையும், இரவில் வேறு கதையையும் கூறுகின்றனர். இவற்றின் காட்டிக் கொடுப்பினாலும், ஸ்திரமற்ற தன்மையினாலும் அரசு வலுவுடன் காணப்படுகிறது.

அரசை வீழ்த்த வேண்டுமெனில் நாம் எதற்கும் தயாராக இருக்க வேணடும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பது எனக்குத் தெரியும்.

இந்த அரசை ஆட்சியிலிருந்து விரட்டுவதற்காக உருவாக்கப்பட்டது தான் பொது எதிர்க்கட்சி. எனவே, பொது கொள்கையின் அடிப்படையில் நாம் உண்மையாக செயற்பட வேண்டும் என்றார் சரத் மனமேந்திர.(த-சி)

## கோண்டாவில் கொலை வழக்கு சந்தேகநபர்கள் இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜன.17

கோண்டாவிலில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார் என்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் இரண்டுபேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது.

கடந்த 2011 மார்ச் 20 ஆம் திகதி கோண்டாவில் கிழக்கு, கொட்டைக்காடுப் பகுதியில் சபாரத்தினம் ஜெயச்சந்திரன் என்பவரது வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தி பொருள்களுக்குச் சேதம் விளைவித்தனர். இதன் போதே சபாரத்தினம் ஜெயச்சந்திரன் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் அதே இடத்தைச் சேர்ந்த தம்பு இளங்கோ, ரட்ணசபாபதி, மகாலட்சுமி, ஜெகநாதன் ஜெயச்செல்வம், புஸ்பராணி அன்ரனி நித்தியராஜ், ஜெயராசா சுரேஸ்குமார் ஆகியோர் சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இந்த நிலையிலேயே 3 ஆம், 4 ஆம் சந்தேக நபர்களைப் பிணையில் விடுவிக்கக்கோரி பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த ஆணையாளர் பிணை அனுமதி வழங்கினார்.

இரண்டு சந்தேகநபர்களும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். தவிர கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மாதந்தோறும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் முற்பகல் 9 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் இடையே ஒப்பம் [illegible] நிபந்தனை விதித்தது.

(ஐ-4)

## கைத்தொழில் முயற்சியாளருக்கு கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் சிறிய, நடுத்தர மற்றும் பாரம்பரிய கைத்தொழிற்துறையின் தற்போதைய நிலை, எதிர் காலத்தில் அதனை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நாளை நடை பெறவுள்ளது.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை மதியம் ஒரு மணிக்கு நடை பெறவுள்ளது.இந்தக் கலந்துரையாடலில் பங்குச் சந்தையில் எவ்வாறு முதலீடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையத் தினரால் விளக்கவுரைகளும் நிகழ்த்தப்படவுள்ளன.(2-4)

## குழு மோதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### ஜெயந்தி நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 17

குழுமோதலில் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் நேற்றுக் காலை உயிரிழந்தார். கடந்த 14 ஆம் திகதி கிளிநொச்சி ஜெயந்திநகரில் திருமணத் தகராறினால் இரு குழுக்கள் தமக்கிடையே மோதிக்கொண்டன.

இந்த மோதலில் படுகாயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த கணபதி செல்வரத்தினம் (வயது -45), கிளிநொச்சி மாவட்ட ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஜெயந்திநகரில் மேலும் பதற்ற நிலை அதிகரித்துள்ளதாகவும் இதனால் பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-16-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கால்கோள் விழாக்கள்

தென்மராட்சி,ஜன.17
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களை இணைக்கும் கால்கோள் விழா நாளை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

வலயத்தின் வைபவ ரீதியான கால்கோள் விழா கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் இடம் பெறும்

வித்தியாலய அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும். ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ண குமார் கலந்து கொள்வர்.

ஏனைய பாடசாலைகளில் நடைபெறும் கால்கோள் விழா நிகழ்வுகளுக்கு வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

★ ★ ★

நெல்லியடி ஜன.17
கரணவாய் வேதாரணியம் வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள்விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை கலையரங்கில் அதிபர் ரி.பாலகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலய முறைசாரக்கல்வி உதவிப் பணிப்பாளர் திருமதி வே.இராஜகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ம-253)

★ ★ ★

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் கால்கோள்விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் அதிபர்திருமதி ச.யோகேந்திரன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-253)

### சுன்னாகம் பொலிஸ் பிரிவில்

# போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 4,312 பேருக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.17

*சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த வருடம் 4 ஆயிரத்து 312 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.கங்கநாத் இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.*

**சுன்னாகம்பொலிஸ்பிரிவில் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 4,312 பேருக்கு எதிராக நடவடிக்கை**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் வீதி விபத்துக்களைத் தவிர்க்க முக்கிய சந்திகளில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த வருடம் 4 ஆயிரத்து 312 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் பொது மக்கள் உடனுக்குடன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதால் இயன்றளவு குற்றச்செயல்கள் தடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள சந்தேக நபர்களாக இருந்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் சமுகமளிக்காது தலைமறைவாக இருந்து பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 167 பேர் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றங்களால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 15 பேருமாக 182 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயைத் தடுக்கவும், சூழலைப் பாதுகாக்கவும் பொது சுகாதார பரிசோதகர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் பொது மக்களின் ஒத்துழைப்போடு விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த வருடம் டெங்கு பரவும் வகையில் செயற்பட்ட 116 பேருக்கும், பாதுகாப்பற்ற முறையில் குப்பை கூளங்களை வீசி இடையூறு எற்படுத்திய குற்றத்துக்காக 79 பேருக்கும் எதிராகவும், சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குற்ற செயல்களைக் கட்டுப்படுத்தவும், அவற்றை இல்லாது ஒழிப்பதற்கும் பொது மக்களின் ஒத்துழைப்பும் பொலிஸாருக்கு அவசியம்.

சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களைத் தடுத்து நிறுத்த சிறுவர் பெண்கள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகங்களைத் தடுப்பது தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறோம், என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

## உணவு செயற்றிட்டம் நாளை ஆரம்பம்

தென்மராட்சி,ஜன.17
பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவு நிகழ்ச்சித்திட்ட நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் பாடசாலை உணவுச் செயற்றிட்டம் நாளை அனைத்துப் பாடசாலைகளிலும் ஆரம்பமாகவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வு நாளை முற்பகல் 10.30 மணிக்கு மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம் பெறும்.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்சு.கிருஷ்ண குமாரும், சிறப்பு விருந்தினர்களாக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மா.சுந்தர சிவம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ம-9)



*யாழ்.முற்றவெளியில் கொட்டப்பட்ட கட்டட இடிபாடுகளில் காணப்படும் பழைய இரும்புகளை மக்கள் பொறுக்கி வருகின்றனர். வீதி அகலிப்புக்காக உடைக்கப்பட்ட இடிபாடுகளின் கழிவுக் கற்களும் இந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளன. (ம-17)*

## குருநகர் வடிகால்களைத் திருத்த பல தடவை கோரியும் பயனில்லை

**விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்**

குருநகர், ஜன.17
குருநகர் பிரதேசத்தில் உள்ள வடிகால்கள் மற்றும் மதகுகளைப் புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இது வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தின் அனேகமான வடிகால்கள் தூர்ந்து போன நிலையில் காணப்படுகின்றன.

இந்த வடிகால்கள் தூர்ந்து போன நிலையில் உள்ளதால் கழிவு நீர் வழிந்து ஓடுவதும் தடைப்பட்டுக் காணப்படுகின்றது.

அதனை விட வடிகால்வாய்க்கள் உரிய முறையில் துப்புரவு செய்யப்படுவதுமில்லை.

மக்கள் நெருக்கமாக வாழும் இந்தப் பிரதேசத்தில் சில வடிகால்களுக்கு மேலாக குடிமனைகளும் உள்ளன.

இந்த நிலையில் வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமையால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்தே காணப்படுகின்றன.

இவற்றைச் சீர் செய்து தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-17)

## பிரதேச சபைக் கூட்டங்களை மக்கள் பார்வையிட அனுமதிக்குக

**கரவெட்டி பிரதேச சபை ஆளுந்தரப்பு உறுப்பினர் கோரிக்கை**

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் கூட்டங்களை மக்கள் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என ஆளும் தரப்பு உறுப்பினர் பொ.குகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுப் பகல் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றது. இதன்போது இக்கோரிக்கையை அவர் விடுத்தார்.

பிரதேச சபையில் என்ன நடைபெறுகின்றது? உறுப்பினர்கள் என்ன செய்தார்கள்? வீதிகளைத் திருத்தினார்களா?, புதுவீதி அமைத்தார்களா?, தெருமின் விளக்குப் போட்டார்களா? என எமக்கு வாக்களித்த மக்கள் உறுப்பினராகிய என்னையும் ஏனைய உறுப்பினர்களையும் கேள்வி மேல் கேள்வி கேட்டு வருகின்றனர்.

கூட்டங்களில் என்ன நடைபெறுகின்றது. நாம் வாக்களித்த உறுப்பினர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் உண்மை நிலை உணரப்படும், மக்களும் புரிந்து கொள்வார்கள்.

ஒவ்வொரு கூட்டங்களுக்கும் தலா பத்து பொது மக்களை பார்வையாளர்களாக அனுமதித்து அவர்கள் சபை நடவடிக்கைகளை அவதானிக்க ஏற்பாடு செய்யவேண்டும் அவர் தனது கோரிக்கையாகக் கேட்டுக் கொண்டார். (ம-8)

## நிகழ்வுகள் இன்று

*திறப்பு விழா*

அலையன்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டின் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள பிராந்திய அலுவலகத்தின் திறப்பு விழா நிகழ்வு இன்று முற்பகல் 10.45 மணிக்கு 28, பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் இடம் பெறவுள்ளது. (ம)

*அறிவூட்டல் நிகழ்வு*

வறுமையற்றதோர் இலங்கை என்னும் தொனிப் பொருளில் அறிவூட்டும் நிகழ்வு நண்பகல் 12 மணிக்கு யாழ் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் மதத்தலைவர்கள், மாநகரசபை உறுப்பினர்கள் துறை சார் உத்தியோகத்தர்கள் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மருந்துக் கலவையாளர்

தென்மராட்சி,ஜன.17
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மருந்துக் கலவையாளர் இடமாற்றம் பெற்று வந்துள்ளதை அடுத்து நோயாளர்களின் கால தாமதம் குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

**வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் தினமும் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும், கிளினிக்குகளில் 300 இற்கு மேற்பட்ட நோயாளர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் தினமும் 600 இற்கு மேற்பட்ட நோயாளர்களும், கிளினிக்குகளில் 300 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரு இடங்களிலும் மருந்துக் கலவையாளர்கள் தினமும் பணியாற்றுவதால் நோயாளர்கள் நீண்ட வரிசையில் நின்று மருந்துகள் பெற வேண்டிய நிலை இருந்தது.

வெளிநோயாளர் பிரிவு மருந்தகத்தில் கடமை புரிந்த உத்தியோகர்த்தர் உயர்கல்விக்காக கொழும்பு சென்றுள்ளதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய மருந்துக் கலவையாளர் இடமாற்றம் பெற்று பொறுப்பேற்றுள்ளதால் நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவு நோயாளர்களும் விரைவில் மருந்து கலவைப் பெறமுடிகிறது என்று நோயாளர்கள் தெரிவித்தனர். (ம-9)



*யாழ்.குடாநாட்டுக்கு பாம்பாட்டிகள் மீண்டும் படையெடுத்துவர ஆரம்பித்துள்ளனர். இந்த பாம்பாட்டிகள் குடாநாட்டின் கிராமப் புறங்களுக்குச் சென்று தமது வளர்ப்புப் பாம்புகள் மற்றும் குரங்குகளை வைத்து வித்தைகளைக் காட்டி பணத்தைப் பெற்று வருகின்றனர். வீதியோரங்களில் வைத்து இந்த பாம்பாட்டிகள் வித்தைகளைக் காட்டுவதனால் போக்குவரத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸி.முகவருக்குப் பிணை

ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களை அழைத்துச் செல்லும் முகவராகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் கடந்த வருடம் கைது செய்யப்பட்டவர்களில் முதலாவது சந்தேக நபர் ஒருவர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்டபோது 51பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது 48 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய 3பேரும், யாழ்ப்பாணத்திலிருந்து சட்டவிரோதமாக ஆள்களை ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல முகவராகச் செயற்பட்ட குற்றச்சாட்டில் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் முதலாவது சந்தேக நபரான கிளிநொச்சி மருதநகரைச் சேர்ந்த நவரட்ணம் கோபிநாத் என்பவர் சார்பாக சட்டத்தரணியால் யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் சந்தேகநபரைப் பிணையில் விடுவித்தார்.

இதற்கென 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையும் தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணைகளும் விதிக்கப்பட்டன. மாதாந்தம் முதலாம், 15ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கும் ந.ப.12 மணிக்கும் இடையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்பமிடவேண்டும் என்றும் நிபந்தனையில் விடுவிக்கப்பட்டார். (ஐ-4)

# நீங்களே பேசித் தீருங்கள்

## இந்திய- இலங்கை மீனவர்களிடம் கேட்கிறார் துணைத் தூதர்

இந்திய- இலங்கை மீனவர்கள் தான் தமது பிரச்சினையைப் பேசித் தீர்க்க வேண்டும். இந்தப் பிரச்சினை தீர்வைத்தான் நாங்களும் விரும்புகின்றோம்.

இவ்வாறு இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் தொடர்பாக உங்களிடம் பல மனுக்கள் இலங்கை மீனவர்களால் கையளிக்கப்பட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையே என ஊடகவியலாளர்கள் இந்தியத் துணைத் தூதுவரிடம் கேள்வியெழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

விரைவில் இது பேசித் தீர்க்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்ந்து இழுபட்டுச் செல்வதை நாங்கள் விரும்பவில்லை. இதனை மீனவர்கள் தான் பேசித் தீர்க்க வேண்டும்- என்றார். (த-5-13)

## அவசரமாக..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

களால் பூதாகரப்படுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால் இலங்கைக்குப் பெரும் நெருக்கடி காத்திருக்கிறது.

இந்நிலையில், அமைச்சர் பீரிஸ் டில்லித் தலைவர்களுக்கு இவ்விவகாரம் குறித்து விளக்கமளிக்கவுள்ளார் என்றும் ஜெனிவாவில் ஏற்படவுள்ள நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து டில்லியுடன் கலந்தாலோசிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்தப் பயணத்தில் இந்திய அரசால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்யப்படும் என்றும் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்திய - இலங்கைக் கூட்டுக் குழுக் கூட்டத்திலும் பீரிஸ் பங்கேற்கவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில், இலங்கைக் குழுவுக்கு ஜி.எல்.பீரிஸும், இந்தியக் குழுவுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித்தும் தலைமைவகிக்கவுள்ளனர். (த-சி)

## அரசமைப்பை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

படுத்துவோம்' என்ற அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கும் நடவடிக்கை நடந்துமுடிந்த பின்னர் சபாநாயகர் அறிவுரையொன்றை விடுத்தார். ''கடந்த காலங்கள் மிகவும் கடினமானதாக இருந்தன. எனவே, தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தை நீக்கவேண்டும்'' எனக் கோரிக்கை விடுத்தார்.

அவரின் கோரிக்கைக்கு நாம் ஆதரவு தெரிவிக்கிறோம்.

இந்தப் பதவி விலகல் நடவடிக்கை எவ்வாறு நடந்தது என்பதை தமது வார்த்தைகளூடாக அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவரின் கருத்தினூடாக இந்த நடவடிக்கை சரியாக இடம்பெறவில்லை என்பது எமக்குப் புலனாகிறது.

எல்லா அதிகாரங்களும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி என்ற தனி மனிதரிடம் குவிக்கப்பட்டுள்ளமை மாற்றப்படவேண்டும். அதற்குத் தற்போதுள்ள அரசமைப்புச் சட்டம் மாற்றப்படவேண்டும்; அது நீக்கப்படவேண்டும்.

புதிய அரசமைப்பினூடாக எமது நோக்கத்தின்படி அனைவருக்கும் அதிகாரம் பகிரப்படவேண்டும்.

இன, மத பேதமின்றி அனைவருக்கும் சமவுரிமை வழங்கப்பட்டு சகல அரச அதிகாரங்களையும் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் - என்றார். (த-சி)

## தமிழ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

மொன்றை மேற்கொண்டு அங்குள்ள நீதித்துறைக் கட்டமைப்புகள் குறித்தும், அங்கு தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாட உத்தேசித்துள்ளதாக அறியமுடிகின்றது. (த-சி)

## பளை-...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

நுட்பத்தைப் பயன்படுத்தியே ரயில் பாதைப் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் ரயில் ஓடும்போது சத்தம் எழமாட்டாது. விரைவாக மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நிறைவடையும் - என்றார். (த-5-13)

## பயங்கரவாத...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்றுப் புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஜுன் - செப்ரெம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராக இருந்து, போர் ஆயுதப் பயிற்சி பெற்று யாழ்.மணியம் தோட்டப் பகுதியில் வன்செயல்கள் இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்ததாக இந்த இளைஞர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. புத்தூர் கிழக்கைச் சேர்ந்த அப்புத்துரை அகிலன் என்பவரே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆவார்.

அவரை வவுனியா செட்டிக்குளம் பகுதியில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் அவர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவர் வழங்கியதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமா அதிபரினால் சந்தேகநபருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அவர் தொடர்பான உண்மை விளம்பல் விசாரணையின் போது அவர் வழங்கியதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கடந்த 18 ஆம் திகதி நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

அவருக்கு எதிராக வேறு எந்த ஆதாரமும் இல்லையென சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் மன்றுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனால் வழக்கில் எதிரியான அகிலன் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நிரபராதியென இனங்கண்டு நேற்று அவரை விடுதலை செய்தது மேல்நீதிமன்று.

எதிரி சார்பில் சட்டத்தரணி [illegible] வாதாடியிருந்தார். சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சார்பில் சட்டத்தரணி செல்வி நளினி கந்தசாமி வாதாடியிருந்தார். (த-4)

## மௌனமாக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

தேவை இல்லை.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு முறைமை இருக்கின்றது. இந்தியாவுக்கென்றும் ஒரு முறைமை இருக்கின்றது. சொல்லுவதைத்தான் நாங்கள் செய்வோம். ஆனால் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்பதில்லை-என்றார்.

சரி, இந்தியா மௌனமாக இருந்தது என்று கூறுகின்றீர்களே, இந்தியா எந்த விடயத்தில் மௌனமாக இருந்தது என்பதை பட்டியல்படுத்துங்கள் என்று ஊடகவியலாளர்களிடம் பதிலுக்கு கேள்வி எழுப்பினார் துணைத் தூதுவர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஊடகவியலாளர்கள், இந்தியா மௌனமாக இருந்த விடயங்களைப் பட்டியல் படுத்த நேரம் போதாது என்று குறிப்பிட்டனர்.

மீண்டும் பதிலளித்த துணைத் தூதுவர், இந்தியா ஒவ்வொரு விடயத்தையும் வெளிப்படுத்தி செய்ய வேண்டியதில்லை.

இந்தியா என்ன முறையில் செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டுள்ளது. மௌனமாக இருந்தால் எதுவும் செய்யவில்லை என்று அர்த்தமில்லை -என்றார்.

அதன்போது இந்தியா மௌனமாகச் செய்திருந்தாலும் இதன் பலாபலன் எதுவும் வெளியாகவில்லையே என ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டபோது.

நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்களோ அதைத்தான் செய்ய வேண்டும் என்றில்லை. இவ்வாறாக இருந்தால் இராஜதந்திர வழிமுறைகள் எவையும் தேவையில்லை -என்றார். (த-5-13)

## மோஹானை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

தற்கான அமைப்பு அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து மக்கள் அனைவரும் வீதியில் இறங்கி மாபெரும் போராட்டம் நடத்த முன்வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்தது.

புதிய பிரதம நீதியரசர் நியமனத்தினூடாக நாட்டுக்குள் சர்வதேச சூழ்ச்சியாளர்கள் பிரவேசிக்க அரசு இடமளித்துள்ளது. 'ரைற்றானிக்' கப்பல் எவ்வாறு மூழ்கியதோ, அதுபோல் இந்த அரசின் ஆட்சியும் மூழ்கும். இதை எவராலும் மீட்டெடுக்க முடியாது என்றும் அந்த அமைப்பு தெரிவித்தது.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

**விக்கிரமபாகு கருணாரட்ன**

நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன இதன்போது கருத்துத் தெரிவிக்கையில்-

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டின் சட்டரீதியான பிரதம நீதியரசரை நீக்கிய அரசு, தமக்கேற்ற ஒருவரை அந்தப் பதவிக்கு நியமித்துள்ளது.

இது அருவருக்கத்தக்க செயலாகும். எனவே, நாட்டு மக்கள் அனைவரும் புதிய பிரதம நீதியரசரை நிராகரிக்கவேண்டும்.

சட்டவிரோதமான முறையில் அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கை, உலகம் முழுவதும் பரவியுள்ளது. இதனூடாக சர்வதேச சூழ்ச்சியாளர்கள் நமது நாட்டுக்கு வர அரசு வழிவகுத்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட முன்வர வேண்டும். சட்டம் இல்லாத இந்த நாட்டில் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே, தொழிலாளர்கள் அனைவரும் மாபெரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தயாராகவேண்டும்'' - என்றார் விக்கிரமபாகு.

**சிறிதுங்க ஜயசூரிய**

இதன்போது ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையர் என்ற வகையில் நாம் அவமானப்படவேண்டும். வெளிநாடுகளுக்குச் சென்றால் நாம் இலங்கையர் எனக் கூறி வீதியில் நடந்து செல்லமுடியாது.

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர ஆகியோரின் கருத்துகளை உதறித்தள்ளிவிட்டுத் தனக்குக் கீழ்ப்படியக் கூடிய ஒருவரைப் பிரதம நீதியரசராக நியமித்துள்ளார் ஜனாதிபதி.

அரசின் சட்டவிரோத ஆட்சிப் பயணம் இனியும் தொடராது. 'ரைற்றானிக்' கப்பல் எவ்வாறு மூழ்கியதோ, அதுபோலவே இந்த அரசின் ஆட்சியும் மூழ்கும். அதை எவராலும் மீட்டெடுக்க முடியாது - என்றார் சிறிதுங்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன், முஸ்லிம் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி, நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, ஐக்கிய சோஷலிஸக் கட்சித் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர, ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் ஸ்ரீமஸ்ரீ ஹப்புஆராச்சி ஆகியோர் கழுத்தில் கறுப்பு நிறத் துண்டு அணிந்து மெழுகுவர்த்தியை ஏற்றியவாறு இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர். (த-சி)

## மீண்டும்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''

கொண்டுவந்த போதிலும், வேறொரு போரில் ஒரு நீண்டகால கடிவாளமாக இருக்கக் கூடும் என்றே நான் இன்னமும் நம்புகிறேன்.

தமிழ்மக்கள் நீண்டகாலமாகவே பாரபட்சமாக நடத்தப்பட்டார்கள். அவர்கள் தமது உரிமைகளைக் கோரினார்கள். அவர்களின் உரிமைகளை வழங்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற எனது அரசு முதன்முதலாக இணங்கியது. முழு உரிமைகளையும் கொண்ட ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவ இணங்கப்பட்டது.

ஆனால், ராஜபக்ஷ சிறுபான்மையினரின் உரிமைகளில் நம்பிக்கை கொண்டவரல்லர்.

அவர் ஒருவரே எனது அமைச்சரவையில் பேச்சுகளுக்கு எதிராக இருந்தார். அவரது தேவை அவர்களைக் கொல்ல வேண்டும் என்பதாகவே இருந்தது. இப்போது ஒட்டுமொத்த உலகமுமே, இராணுவத் தாக்குதலுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் மீளஇணைகிறார்கள். தாக்குதல்களைக் கண்டிக்கிறார்கள். இலங்கை அரசு தனது மூலோபாயத்தின் படியே தொடர்ந்து நடக்குமானால், இன்னும் சில ஆண்டுகளில் இன்னொரு போராளிக் குழு உருவாகும்.

**இறுதிப் போரின் போது**
**மனித உரிமைகள் மீறப்பட்டன**

இறுதிப் போர் தாக்குதலின் போது பொது மக்களின் மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்கள் நிறையவே இடம்பெற்றன.

பொதுமக்களை சுட்டுவிழுத்த அரசு ஜெட் போர் விமானங்களையும் பயன்படுத்தியது. அரசு அதிகளவு மனிதாபிமான அணுகுமுறையில் செயற்பட்டிருந்தால், இந்தக் கொலைகளைத் தவிர்த்திருக்கலாம். பொதுமக்களைக் கொல்லவேண்டிய தேவை இருக்கவில்லை. இதனால் என்ன நடந்திருக்கிறது, எல்லோரும் கோபமுற்றிருக்கிறார்கள்.

தனியே தமிழ்ப்புலிகளை மட்டும் அழித்திருந்தால், யாரும் கவலைப்பட்டிருக்கமாட்டார்கள்.

அல் குவைதாவுக்கு முன்னர் உலகிலேயே மிகப்பெரிய எண்ணிக்கையில் தற்கொலைக் குண்டுதாரிகளை அவர்களே உருவாக்கினார்கள்.

மக்கள் வன்முறைகளை விரும்பமாட்டார்கள். வன்முறைகளுக்கு மிகஆழமான காரணங்கள் இருக்கின்றன. எனவே, முரண்பாடுகளுக்கான அந்தக் காரணங்களைக் கண்டறிய வேண்டும். அந்தக் காரணங்களைத் தீர்க்க வேண்டும்.

அடிப்படைக் காரணங்களை கண்டுபிடிக்கும் வரை நிறுத்தக் கூடாது.

**வம்ச அரசியலை**
**நான் விரும்பவில்லை**

வம்ச அரசியல் முறையை நான் ஏற்கவில்லை. எனது பிள்ளைகளை நான் அரசியலுக்குக் கொண்டு வர விரும்பவில்லை.

வம்ச அரசியல் நல்லதல்ல என்று நினைக்கிறேன். எல்லாவற்றையும் தமக்காக அபகரிக்க ஒரு குடும்பத்துக்கு அது இடமளிக்கிறது.

அந்த முறையில் ஊழல்கள் மோசமாக உள்ளன. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மிகப் பெரிய ஊழல்களை செய்துள்ளார். அவரது குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 2000 பேர் அரச பதவிகளில் உள்ளனர். நான்கு சகோதரர்கள் அமைச்சரவையில் உள்ளனர்.

அவர்களின் பிள்ளைகள் நாடாளுமன்றத்தில் உள்ளனர். இந்தமுறையில் உள்ள நன்மைகளை விட தீமைகளே அதிகம்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் எப்படி உயிர் பிழைத்தேன் என்று எனக்குத் தெரியாது.

ஆனால் அது ஒரு அதிசயம். நான் எனது ஒரு கண்ணை இழந்தேன். எனக்கு இடது கண்ணில் பார்வை இல்லை.

எனது மூளையில் இப்போதும் ஒரு இரும்புத்துண்டு உள்ளது. அந்தத் தாக்குதலில் எனது சாரதி உள்ளிட்ட 26 பேர் கொல்லப்பட்டனர் - என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம்,ஜன.17

நீர்வேலி தெற்கு ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் மணவாளக்கோலத் திருவிழா இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலையில் விசேட பூசையாக சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் மகேஸ்வரப்பூசை நடைபெறும்.

மாலையில் சுவாமி வீதி வலம் வருதல் இடம் பெறும். (16-17)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 09 ★ 05 ★ 1939



இறப்பு 02 ★ 02 ★ 1998

### கணபதிப்பிள்ளை ஜெகதீசன்

(முன்னாள் கட்டட ஒப்பந்தக்காரரும், அளவெட்டி மல்லாக ப.நோ.கூ.சங்க தலைவரும்)

திதி: 17.01.2013

ஆண்டுகள் பதினைந்தானாலும் – உங்கள்
அழியாத நினைவுகள் நங்கள்
வாழும் வரை என்றும் எங்கள்
மனங்களில் நிறைந்திருக்கும்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நி.முகவரி
'கலையகம்'
தபாற்கந்தோர்
அருகில் அளவெட்டி.


த. முகவரி
உடுவில் வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(சி/5687)(3.14)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை நவரட்ணராஜா



ஆனைக்கோட்டையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத் துரை நவரட்ணராஜா நேற்று (16.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் புஸ்பரட்ணம், செல்வ ராணி, அன்னலட்சுமி, பவாணி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற கந்தசாமி மற்றும் இராஜரட்ணம், ஜெயச்சந்திரன், லீலாவதி ஆகியோரின் மைத்துனரும், திவாகரன், வாகீசன், இந்திரகாசன், சிற்றிகா, சிந்துகா ஆகியோரின் சிறிய தந்தையும், மதிவதனன், கலைவாணி, சபாநாயகம், சிலோசனா, தனலோஜன், மயூரன், ரதீஸன், சங்கீதா ஆகியோரின் மாமனும், மகிந்தன், மிதுனன், லின்டா, டியானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2013) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கை தீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண்வடமேற்கு,
ஆறுகால்மடம்
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை பஞ்சலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிட மாகவும், சேச்லேன் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பஞ்சலிங்கம் நேற்று (16.01.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத் துரை - பவளம் தம்பதியரின் மகனும், பாஸ்கரன் (கனடா), சுசிலா, இரவீந்திரன், சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரவதனி (கனடா), ரதீஸ், சுரேந்திரன், ஜெக தீஸ்வரி (ரூபி) ஆகியோரின் அன்பு மாமனும், அப்புத்துரை, இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேச்லேன்
கொக்குவில் கிழக்கு.
0212052609

(சி/5691)(3.14)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்

### சுவாமிநாதர் சின்னத்துரை



மீசாலை வடக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் சின்னத்துரை நேற்று (16.01.2013) புதன்கிழமை காலமானார்

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்பு கணவரும் தேவறஞ்சன் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன், சிவாஜினி, சுகந்தினி (லண்டன்), சுதர்சினி ஆகியோரின் தகப்பனும் பிறேமகலா, தயாளினி (பிரான்ஸ்), கலைச்செல்வி, சுரேஸ் சந்திரசேகரம், செல்வானந்தம், ஆகியோரின் பாசமிகு மாமனும் அபிராமி, அபினாஸ், ஆர்த்திக், விதுசன், விதுசா, சிலம்பரசகன், சஞ்சீவன், வனோஜிகா, நிதுஸ், விதுசன், விஜித்தன், அனோயிகா, ஆருஷன், அஜினா, ஆகியோரின், அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2013) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(C5695)(3.14)

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பாக்கியம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் பாக்கியம் நேற்று (16.01.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ் சென்ற சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், நாகம்மா, திருஞானசம்பந்தர், சிவசுந்தரம், சந்திரசேகரம் ஆகியோரின் பாசமிகு தாயும், காசிநாதன், செல்வராணி, ஜெகதீஸ்வரி, தவமலர் ஆகியோரின் மாமியும், பிரதீபன், மகிழினி, குமுதினி, துஷ்யந்தன், துஷ்யந்தினி, துளசி, நிஷாந்தி, அருள்ப்பிரியா, வினோப் பிரியா, விதுரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2013) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

(28418)(3.14)

தகவல்:
சு.சந்திரசேகரம்
(மகன்)

### இராசரத்தினம் கந்தையா



யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கந்தையா கடந்த 14.01.2013 திங்கட்கிழமை அமரத்துவ மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சண்முகம்- பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (பேபி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், கண்மணி, அன்னலட்சுமி, ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகேஸ்வரி, நாகேஸ்வரி, சிவராஜா, கனகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், லோகேஸ்வரன் (கனடா), நகுலேஸ்வரன் (நியூசிலாந்து), விக்கினேஸ்வரன் (ஆஸ்திரேலியா), சியாமளா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புனிதவதி, வசந்தகுமாரி, உத்தரை, சாந்திலால் ஆகியோரின் அன்பு மாமனும், சாம்பவி, பிரணவன், நிரஞ்சன், றொஷானி, ஆதித்தன், அகிலன், சத்தியன், சாதனா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.01.2013 சனிக்கிழமை பி.ப. 5.00 மணியிலிருந்து பி.ப. 9.00 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada (905) 305-8508 இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 20.01.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் Elgin Mills Cemetery, 1591 Elgin Mills E, Richmond Hill, ON L4S 1M9, Canada (905) 737-1720 க்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: லோகேஸ்வரன் (மகன்) கனடா-0014162832533
சாந்திலால் (மருமகன்) -கனடா0014162861069
நகுலேஸ்வரன் (மகன்) நியூஸ்சிலாந்து 006444770171
விக்னேஸ்வரன் (மகன்) ஆஸ்திரேலியா 0061261660518

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை கண்ணதாசன் என்பவருடைய சுவிஸ்விசா அட்டை யும்,வங்கி அட்டை களும்,வேறுசில ஆவணங்கள் உள்ள டங்கிய பேர்ஸ் மடம் வீதிக்கும் ஈச்ச மோட்டை வீதிக்கும் இடையில் தவறி விட்டது கண்டெடு த்தவர்கள் தந்துதவ வும்சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு-
0771829395
0212224764

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும் பத்தை சேர்ந்த 1983 ஆம் ஆண்டு நட்சத்திரம் உத்தரட்டாதி 1 ஆம் பாதம், கிரக பாவம் 58.75, 4 இல் செவ்வாய் உள்ள கல்வியியற் கல்லூரி ஆசிரியை மண மகளுக்கு தகுந்த மண மகன் தேவை.

தொடர்பு:
0750404249

## மரண அறிவித்தல்

### சீவரத்தினம் சண்முகலிங்கம்



யாழ்ப்பாணம் அரியாலை யைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட பெரிய தம்பி என்று அன்பாக அழைக் கப்படும் சீவரத்தினம் சண்முக லிங்கம் நேற்று (16.01.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சீவரத்தினம் - அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பரமசாமி - சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வித்தியா (நோர்வே), திவ்யா (நோர்வே), ரமேஸ் (நோர்வே), நித்தியா (கிளி/ பூநகரி மகா வித்தியாலயம்), சத்தியா (ஸ்ரான்டட் கிரடிற் லங்கா கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரன் (நோர்வே), ஜிவ்வர் (நோர்வே), சுதர்சினி (நோர்வே), செங்கையாழியன் (யாழ். கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும், கேசிகா, சுவேகா, டார்விஸ், டன்ஸ்ரன், ஹரிஸ், சுபேஸ், லிதர்சன், கோபிள், இராகவி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் சாரதாதேவி, காலஞ்சென்றவர்களான குகதாசன், கோசலாதேவி, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கோமதி, காலஞ்சென்ற ஸ்ரீ கணேசா மற்றும் குகதாசன், இராசலட்சுமி, கணேசலிங்கம் (இலங்கை மின்சார சபை), ஸ்ரீலட்சுமி, கெங்காதேவி, சொர்ணலிங்கம் (இலங்கை மின்சார சபை), அன்னலிங்கம் (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

402, நாவலர் றோட்,
அரியாலை.

(28417)(3.14)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை- வேலணை
# பொது அறிவித்தல் -2013

01. படவரைஞராகப் பதிவு செய்தல் -2013

2013ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2013ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2013

சபையின் நிர்வாக எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2013ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி, உரிய கட்டணங்களை 31.03.2013ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு -268இன் பிரகாரமான அறிவித்தல்

3.1. வேலணை பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச,தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக் குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

எனவே வேலணை பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும்,எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3. சபையின் அனுமதிபெற்று கட்டடம் கட்டிமுடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் -2013

2013ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

05. சூழல் பாதுகாப்பு உரிமம்.

1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவிற்குட்பட்டு 1533/16 இலக்க, 25.01.2008ஆம் திகதிய,மற்றும் 1534/18 இலக்க 01.02.2008ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்றவர்கள் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

06.விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.03.2013ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.04.2013 ஆம் திகதிக்கு பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

07. பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள், இறைச்சி விற்பனையைத் தடைசெய்தல்.

வேலணை பிரதேச சபையின் பொதுச் சந்தைகள்,இறைச்சிக்கடை அமைந்துள்ள பகுதிகளில் 500 மீற்றர் வரையான சுற்றாடலில் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

08. பொது இடங்களில் கழிவுகளை போடுதல்

வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபை கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சி.சிவராசா
தவிசாளர்.

வேலணை பிரதேச சபை
வேலணை.

(ச/5672)(5.6.7)

## வருடாந்த மஹோற்சவம்

வவுனியா, ஜன.17

வவுனியா கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா இடம்பெறவுள்ளது. 26 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. இதேவேளை 29 ஆம் திகதி வைரவர் சாந்தியுடன் விழா நிறைவடையவுள்ளது.

உற்சவ கால கிரியைகள் பாலச்சந்திர குருக்கள், ரவீந்திரக் குருக்கள், கேசவ சர்மா, இராஜேந்திரா சர்மா, பிரபாகர குருக்கள் ஆகியோரால் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-421)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர் ப.பிரதீபன்
(உரிமையாளர், தீபன் நெற் கபே, சாவகச்சேரி) அவர்களின்
பாசமிகு தாயார்

### திருமதி சிவசக்தி பத்மநாதன்

அவர்கள் கடந்த 10.01.2013 அன்று காலமானார். அன்னாரின் மறைவுக்கு மன்றத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

(ச/2880) (6.7.2)

## நெல்லியடி லயன்ஸ் கழகம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

நலிவுற்றோர் மேம்பாட்டுக்காக நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தால் 306 B1 மாவட்ட ஆளுநர் லயன் S.S.தங்கராஜா முன்னிலையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு:- 2947 (மடிக்கணினி)
இரண்டாம் பரிசு:- 2472 (டிஜிற்றல் கமரா)
மூன்றாம் பரிசு 8137 (கையடக்கத் தொலைபேசி)

ஆறுதல் பரிசுகள்:-


| | |
|---|---|
| 1) 2413 | 6) 2655 |
| 2) 6290 | 7) 2955 |
| 3) 3644 | 8) 4724 |
| 4) 6550 | 9) 4067 |
| 5) 4015 | 10) 9121 |

லயன் ரீ.யோகேந்திரன்
தலைவர்
லயன் எஸ்.சரவணபவ
செயலாளர்.
லயன்ஸ் கழகம் நெல்லியடி வட்டம்.

(C/5634)(2.6.7)

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவகுருநாதன்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவகுருநாதன் 15.01.2013 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம்பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இணுவில் கிழக்கு (வங்கியடி),
இணுவில்.

(28184) (6.7.2)




UK
INDIA
AUSTRALIA - BOXHILL INSTITUTE



போட்டி நிறைந்த இன்றைய உலகில் உங்கள்
உயர்கல்வியை வெளிநாடுகளில் தொடர்ந்து உங்கள்
கனவுலகை நிஜப்படுத்த 100% உத்தரவாதத்தை வழங்கும்

VTL MANAGEMENT SERVICES (PVT) LTD.
OVERSEAS EDUCATIONAL CONSULTANTS
(வெளிநாட்டு உயர்கல்வி ஆலோசகர்)
No. 01, 1st Floor, Deanston House, Deanston Place, Colombo - 03,
Tel: 011 720 8752, Mob: 072 768 5692 Fax: 011 256 5225
E-mail: vtlmgt@gmail.com Web:degree.lk
(ச/5902)(2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சட்டம் ஒழுங்கு இல்லையேல் மக்களின் உரிமைகள் கனவுகளே

சமீப நாள்களாக நாட்டில் சட்டம், ஒழுங்கு மிக மோசமாக மீறப்பட்டு வருகிறது. அரசுக்கு ஆதரவானோர் தாம் நினைத்தபடி தவறுகள், குற்றங்களை மேற்கொள்கின்றனர். அவர்கள் புரியும் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பொலிஸார் தயங்குகின்றனர். அரச ஆதரவாளர்களுக்கு ஒரு நீதி; எதிர்ப்பாளர்களுக்கு ஒரு நீதி. இதுவே நாட்டின் இன்றைய யதார்த்த நிலை.

* தாம் அரச ஆதரவாளர்கள் எனக்காட்டிக்கொண்டு காடையர்களும், குற்றமிழைப்போரும் நடமாடுகிறார்கள். வன்செயல்களில் ஈடுபடுகின்றனர். அதனாலேயே நாடு இன்று மிகவும் கீழ்மட்ட நிலைக்குச் சென்றுள்ளது.

* நாட்டில் குற்றமிழைப்போரும் போதைவஸ்துக் காரர்களும் ஆதிக்கம் செலுத்துகின்றனர். நாட்டின் தலைவர்களே இந்த நிலைமைக்குக் காரணம்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும், இந்நாட்டின் இரு முன்னாள் பிரதமர்களது புதல்வியுமான சந்திரிக்கா குமாரதுங்க மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

. கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சென்ற். பிரிட்ஜெட் கொன்வென்டின் ஏற்பாட்டிலான நிகழ்வொன்றின் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

* நாட்டில் இன்றைய நிலை குறித்து மிகவும் கவலை கொண்டுள்ள போதிலும், அதனை இப்போதைய தாழ்ந்த நிலையிலிருந்து மீட்பதற்கான வழிகள் யாவும் மூடப்பட்டு விட்டன. எவருமே அந்த முயற்சியில் ஈடுபட முடியாதவாறு, கட்டுக்கடங்காத நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

* இனத்துவ ரீதியில் தோற்றுவிக்கப்பட்ட தடைகளும் ஏனைய சாபக் கேடுகளும் மற்றும் யாவுமே மிருகத்தனம் மிகுந்த கோட்பாடுகளால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

* சிறந்த தலைவர்களே ஏனையவர்களை நல்ல மனிதர்களாக ஆக்குகிறார்கள்; மாற்றுகிறார்கள்; உலகம் குறித்த ஆக்கபூர்வமான எண்ணங்களை ஊட்டுகிறார்கள்.

* அத்தகைய தலைவர்களால் மட்டுமே நாட்டை அதிஉயர் நிலைக்கு இட்டுச்செல்ல இயலும். அதேவேளை கெட்ட தலைவர்கள் தனிப்பட்டவர்களை மட்டுமன்றி முழு நாட்டையுமே அர்க்கெடுத்தி விடுவார்கள் - என்றும் சந்திரிக்கா தெரிவித்திருக்கிறார்.

மறுபுறத்தில் நோக்குவோமானால், அரச அடிவருடிகளின் ஆதிக்கம் இன்று நாட்டின் சகல துறைகளிலும் விரவி உள்ளது; மேலோங்கி உள்ளது. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட தினத்தன்று அரச ஆதரவாளர்கள் எனக்கூறிக்கொள்ளும் தரப்பினர் நாடாளுமன்றத்துக்கு வெளியே நடந்துகொண்ட விதம், நாட்டின் நன்மதிப்புக்குக் குந்தகம் ஏற்படுத்துவதாக அமைந்தது.

அதே நாளன்று புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்திலும் அநாகரிகமான முறையில் இத்தரப்பினர் நடந்துகொண்டமை சர்வதேச நாடுகளின் கவனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளாகிவிட்டது.

இதேவேளை -

அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற கடந்த மூன்று ஆண்டு காலத்தில் இடம்பெறும் சம்பவங்கள் நாட்டைக் கீழ் மட்ட நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன. அவற்றில் ஷிராணி பண்டாரநாயக்கவின் விவகாரமும் - அவரது பதவி பறிப்பும் - ஒன்றாகும்.

பொலிஸ் அதிகாரங்களை அரசியல்வாதிகள் தமது கையில் எடுத்துக்கொண்டுள்ளனர். முன்னேஸ்வரம் காளிகோயிலில் பலியிடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட ஆடு, கோழிகளைத் தமது ஆதரவாளர்களுடன் சென்று அதிரடியாக மீட்டுச் செல்கிறார் அமைச்சர் ஒருவர். இது அமைச்சரின் வேலையல்ல. பொலிஸாரின் வேலை. பொலிஸார் கூட நாட்டின் சட்டத்துக்கு ஏற்பவே செயற்பட முடியும் என்பதனை அரசியல் அதிகாரம் அளவுக்கு அதிகமாகக் கைக்கு வந்ததும் மறந்துவிடுகிறார்கள்.

தெற்கில் மட்டுமல்ல, வடக்கிலும் அராஜகங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டங்கள் அரச ஆதரவு மிக்கவர்களால் குழப்பப்படுகின்றன.

'உதயன்' பத்திரிகையை விநியோகிக்கச் சென்றவர் தாக்கப்படுகிறார். அவரது மோட்டார் சைக்கிள் எரிக்கப்படுகிறது. யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதலைக்காக கையெழுத்திடும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியோர் மீது கழிவு ஓயில் வீசப்படுகிறது. இப்படி எத்தனையோ சம்பவங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் -

இந்த நாட்டை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றப் போவதாக அரசு பீற்றிக்கொள்வது கேலிக்குரியதாகும். எதிரணிகளை அடக்குவதன் மூலமும், இன ரீதியாகச் செயற்படுவதன் மூலமும், காடைத் தனம் மூலமும் அதனை அடைய முடியாது.

மாறாக -

நாட்டில் சட்டம், ஒழுங்கு முதலில் நிலைநாட்டப்பட வேண்டும். சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாது போனால், அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் பயனேதும் விளைந்துவிடப் போவதில்லை. அதன் வளர்ச்சியும் மக்களின் உரிமைகளும் வெறும் கற்பனைக் கதைகளாகி விடும். மொத்தத்தில் அதுவே மிஞ்சும்.

# தொழிற்சாலைகளின் இரசாயனப் புகையே வர்ண மழைகள் பொழிவதற்கு காரணம்

## புதிய ஆய்வுகள் மூலம் உறுதியாகியது

அண்மையில் அடிக்கடி பெய்த சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை நிற மழை வீழ்ச்சிகளுக்குத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் இராசாயனப் பொருள்களே காரணமாகியுள்ளன என்று புதிய ஆய்வுகளின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் இரசாயனப் புகைகள் நுண்ணுயிர்களுடன் கலந்து வாயு மண்டலத்தைச் சென்றடைகின்றன. இதனால் இந்த விதமான நிறங்களில் மழை பெய்கிறதேயன்றி அதற்கும் எரிநட்சத்திர மழைக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்றும் கோள்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளும் விஞ்ஞானி அனுர சி.பெரேரா தெரிவித்துள்ளார்.

சாதாரணமாகத் தினமும் ஒன்பதுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் எரிநட்சத்திரம் அல்லது விண்கல் மழை வீழ்ச்சிகள் ஏற்படுவதாகவும், மூன்று நான்கு தொன்கள் வரையிலான விண்கற்கள் பூமியின் மேற்பரப்பில் விழுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விழும் விண்கற்களில் எந்தவொரு நுண்ணுயிரும் வாழ முடியாது. அவற்றின் மூலமாக வர்ண மழைகள் ஏற்படுவதற்கு எந்தவொரு சாத்தியமும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள தொழிற்சாலைகளிலும் இருந்து வெளியேறும் இரசாயனப் பொருள்கள் வாயு மண்டலத்தில் கலப்பதால் இவ்வாறான வர்ண மழைகள் பெய்கின்றன.

விரைவில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாது விட்டால் காலப்போக்கில் 'அசிட்' மழைகளும் கூட பெய்யக் கூடும் எனவும் அது சுற்றுப்புறச்சூழலுக்கு அச்சுறுத்தலாகி விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

# இடைநிலை பொறியியலாளரை உருவாக்க பத்து தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள்

கொழும்பு,ஜன.17

இடைநிலைப் பொறியியலாளர்களை உருவாக்க 10 தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களைப் புதிதாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டில் தொழிற் கல்வி தொடர்பான 10 பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு இளைஞர் விவகார மற்றும் நிபுணத்துவ மேம்பாடுகள் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கடந்த வரவு-செலவுத் திட்ட வரைவின் மூலம் புதிதாக 10 தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்படுவது தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு, அமைச்சர் டலஸ் அழகப் பெருமவின் பணிப்பின் பேரில் இந்த 10 பல்கலைக்கழகங்களையும் நிறுவுவதற்கு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான வரவு-செலவுத் திட்டத்தில் ஆயிரத்து 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

10 பல்கலைக்கழகங்கள் நிறுவப்படுவது தொடர்பாக முன்வைக்கப்படவுள்ள அமைச்சரவைப் பத்திரம் தயார்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவிக்கிறது.

பொறியியல் பீடங்களைக் கொண்டுள்ள நாட்டின் 4 பல்கலைக்கழகங்கள் மூலமாக ஆண்டு ஒன்றில் ஆயிரத்து 200 பொறியியலாளர்கள் மாத்திரமே உருவாக்கப்படுகின்றனர்.

தொழிற்கல்வித் துறையில் உலக அங்கீகாரம் பெற்ற அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைய, சிரேஷ்ட பொறியியலாளர் ஒருவருக்கு மத்திய மட்டத்திலான உதவிப் பொறியியலாளர்கள் நால்வரும், பயிற்சிபெற்ற 20 தொழிலாளர்களும் இருக்க வேண்டியுள்ளது.

ஆனாலும் எமது நாட்டிலுள்ள கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் 'தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறியின் மூலம் ஆண்டு ஒன்றில் மத்திய மட்டத்திலான பொறியியலாளர்களும் கூட ஆயிரத்து 200 பேர் வரையிலேயே உருவாக்கப்படுகின்றனர்.

அதற்கமைய இந்த நாட்டில் மத்திய மட்டப் பொறியியலாளர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்தப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டதன் பின்னர் மத்திய மட்ட பொறியியலாளர்களுக்கான தட்டுப்பாட்டை ஓரளவுக்கேனும் நிரப்பிவிட முடியும் என்பதால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ம-22)

## அமைய அடிப்படையில் சேவையாற்றும் அரச ஊழியருக்கு தமிழ், சிங்கள பரீட்சை

வரணி, ஜன.17

அமைய அடிப்படையில் சேவை யாற்றும் அரச ஊழியர்களுக்கு தமிழ், சிங்கள மொழித் தேர்ச்சிக்கான வாய் மொழிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் அரச மொழிகள் திணைக்கள ஆணையாளரால் கோரப்பட்டுள்ளன.

இந்தத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இதற்கான எழுத்துப்பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்து வாய்மொழிப் பரீட்சைக்கு தோற்றாதோர் மற்றும் சித்தியடையாதோரும் ஜி.சீ.ஈ.சாதாரணதர பரீட்சைக்கு மொழி மற்றும் இலக்கிய பாடங்களில் சித்தியடைந்து வாய் மொழித் தேர்ச்சியை பெறுவதில் ஆர்வமுடையவர்களும் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்பு அரச மொழிகள் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ம-122)

## பாடசாலைகளுக்கு வருவோர் பொருத்தமான ஆடை அணிக

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அலுவல்கள் நிமித்தம் வந்து செல்லும் பெற்றோர்கள் பொருத்தமான ஆடைகளை அணிந்து வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தற்காலத்தில் பொருத்தமற்ற ஆடைகளை பெற்றோர்கள் அணிந்து வருகிறார்கள். இது கலாசாரத்துக்கு ஒவ்வாததாக உள்ளது.

பண்பாடு, கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து வரும் பாடசாலைகளுக்கு ஒவ்வாத ஆடைகளுடன் பெற்றோர் வருவது முறையல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் பொருத்தமான ஆடைகளை அணிந்துவர வேண்டும் என்பதை வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள சில பாடசாலைகள் அறிவுறுத்தி பாடசாலைகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# மனித உரிமைகள் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜன.17

மனித உரிமைகள் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி ஒன்றை, மனித உரிமைகள் நிலையம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கிறது.

இது தொடர்பாக மேற்படி நிலையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மனித உரிமைகள் நிலையம் கடந்த 16வருட காலமாக இலங்கையில் செயற்பட்டு வருகிறது. அதன் யாழ்ப்பாண கிளை கடந்த 10 வருடங்களாக செயற்பட்டு வருகிறது. [illegible] வருகிறது. நிறைவேற்று மட்டத்தில் அமையும் நியமனங்களுக்கு மனித உரிமைகள் பற்றிய அறிவு ஓர் அவசிய தேவையாக காணப்படுகிறது.

இந்த நிலையில் அரச, அரச சார்பற்ற, தனியார் துறை சார்ந்த நிறுவனங்களில் வேலை செய்யும் பணியாளர்களின் தேவை கருதியும், உயர் கல்வி கற்றுவிட்டு உத்தியோகத்துக்காக எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளின் நலன் கருதியும் மனித உரிமைகள் பற்றிய சான்றிதழ் கற்கை நெறியினை எதிர்வரும் 19 ஆம் திகதியன்று ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கற்கைநெறி முக்கியமாக பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9. மணி முதல் பிற்பகல் 1 மணிவரை இடம்பெற ஏற்பாடாகி உள்ளது. கிட்டத்தட்ட 15 வாரங்களுக்கு 60 மணித்தியாலத்துக்குக் குறையாமல் இந்தக் கற்கைநெறி இடம்பெறும்.

இந்தக் கற்கைநெறி யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதி 90 ஆம் இலக்க கட்டடத்தில் நடைபெறும். இலங்கை பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர்களும், சட்டவரைஞர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் மற்றும் பிரபல்யமான யாழ்ப்பாணம், கொழும்பு சட்டத்தரணிகளும் வளவாளர்களாக கலந்து விரிவுரை வழங்க உள்ளார்கள்.

மேலதிக விவரங்களை சுன்னாகம் ஊரெழுவிலுள்ள மனித உரிமை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரம் கிராமத்தில் மூடப்பட்டது தவறணை

கிளிநொச்சி, ஜன. 17

கிளிநொச்சி உருத்திரபுரம் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் உத்தரவில் கள்ளுத்தவறணை மூடப்பட்டதாகவும் அதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த 45க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர்ப்பகுதியில் ஏனைய சமூகங்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையிலும் சங்கத்தின் சட்ட யாப்புக்களுக்கு அமைவாகவும் கடந்த 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையை நேற்றுமுன்தினம் முதல் இராணுவத்தினர் திறப்பதற்கு அனுமதிக்கவில்லை என்றும் அதனை வேறு இடத்துக்கு மாற்றுமாறும் சங்க நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார். (த-6)

# 15 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை முல்லைத்தீவில் மழையால் பாதிப்பு

## 4 ஆயிரத்து 521 விவசாயிகளுக்கு நட்டம்

முல்லைத்தீவு,ஜன.17

கடந்த பெரும் போகத்தின் போது பெய்த மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 ஆயிரத்து 537 ஏக்கர் நெற் செய்கை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் 4 ஆயிரத்து 521 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதாக கமநல திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

**மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தது. இதன் போது 8 குளங்கள் பெரிய அளவில் சேதமடைந்துள்ளதுடன் 41 குளங்கள் சிறியளவில் சேதமடைந்துள்ளன.**

கடந்த பெரும் போகத்தின் போது தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டம் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்கியிருந்தது. இதன் போது 8 குளங்கள் பெரிய அளவில் சேதமடைந்துள்ளதுடன் 41 குளங்கள் சிறியளவில் சேதமடைந்துள்ளன.

குளங்கள் உடைப்பெடுத்ததன் காரணமாக நெல் வயல்கள் பல வெள்ளத்தில் மூழ்கின.

3 ஆயிரத்து 376 ஏக்கர் வயல் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் 828 விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

இதேபோன்று 12 ஆயிரத்து 161 ஏக்கர் நெல் வயல் 50 சதவீதத்துக்கு மேல் அழிவடைந்துள்ளது. இதனால் 3 ஆயிரத்து 693 விவசாயிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரையில் நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# சிறுவர்களுக்கு கற்றல் உபகரணம்



கிளிநொச்சி,ஜன.17

கிளிநொச்சி மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அலுவலகத்தில் தைப்பொங்கல் வைபவமும் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் தைப்பொங்கல் தினமான கடந்த திங்கள் காலை பொங்கல் வைபவமும் சுவிஸ் துர்க்கா மாநில தமிழர்களின் நிதிப்பங்களிப்புடன் மாணவச் சிறார்களுக்கு கற்றல் உபகரணமும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சிப் பிரதேச சபை உபதலைவர் சாளர் நகுலேஸ்வரன் மற்றும் உறுப்பினர்கள், மாந்தை கிழக்கு பிரதேசசபைத் தலைவர், உபதலைவர் செந்தூரன், வலி.வடக்குப் பிரதேசசபை உப தலைவர் சஜீவன், கட்சியின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் பசுபதிப்பிள்ளை, பிரதேச அமைப்பாளர்கள், மக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (த-426)

# 100 சிறுவர்களுக்கு உதவி

கிளிநொச்சி,ஜன.17

செலான் வங்கி கிளிநொச்சிக் கிளையினால் முன்னெடுக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பின் கீழ் தாய் தந்தையரை இழந்த நூறு சிறுவர்களுக்கு ''டிக்கிரி'' பிளஸ் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் சிறுவர் இல்லத்துக்கான பெயர்ப் பலகையும் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.

செலான் வங்கி கிளிநொச்சிக் கிளையினால் முன்னெடுக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பின் கீழ் கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தில் தாய் தந்தையரை இழந்த நிலையில் பராமரிக்கப்பட்டு வரும் 100 சிறுவர்களுக்கு ''டிக்கிரி பிளஸ்'' சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்குப் பண வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை சைவச் சிறுவர் இல்லத்துக்கான பெயர்ப் பலகையையும்

**சைவச்சிறுவர் இல்லத்துக்கான பெயர்ப் பலகையையும் ஏ–9 வீதி கந்தசுவாமி கோயில் முன்பாகத் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.**

ஏ-9 வீதி கந்தசுவாமி கோயில் முன்பாகத் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சிறுவர் இல்ல வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டன.

மேற்படி நிகழ்வுகளில் செலான் வங்கி கிளிநொச்சிக் கிளை முகாமையாளர் இ.சுதாகரன், வங்கி உத்தியோகத்தர்கள், சைவச் சிறுவர் இல்லச் சிறுவர்கள் மற்றும் சிறுவர் இல்ல நிர்வாகத்தினர் எனப்பலர் கலந்து கொண்டனர். (த-6)

# கிளிநொச்சி முருகானந்தாவில் இரண்டு நிகழ்வுகள் இன்று

கிளிநொச்சி,ஜன.17

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியில் கடந்த ஆண்டின் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் ஸ்தாபகர் தின நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் கடந்த ஆண்டுக்கான சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கல்லூரியின் ஸ்தாபகர் தின நிகழ்வும் இன்று பிற்பகல் 4.30 மணியளவில் கல்லூரியின் அரங்கில் அதிபர் வரதன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், சி.சத்தியசீலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவிருந்தினராக கண்டாவளை கோட்டக் கல்வி அதிகாரி வீ.இராஜகுலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

ஸ்தாபகர் நினைவுப் பேருரையை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன் ஆற்றுவார் என விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (க-6)

# கள்ளுத் தவறணையை மூடுமாறு விளையாட்டுக் கழகம் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,ஜன.17

கிளிநொச்சி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உள்ள கள்ளுத் தவறணையை இடமாற்றுமாறு கோரி விளையாட்டுக்கழக நிர்வாகத்தினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்துக்கு அருகில் கிளிநொச்சி மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. இதனால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகத் தெரிவித்ததை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் உத்தவுக்கு அமைய இராணுவத்தினரால் இது மூடப்பட்டது. ஆனால் இந்தக் கள்ளுத் தவறணை மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது. இதனையடுத்து அதனை உடனடியாக மூடி விடுமாறு அல்லது இடமாற்றுமாறு விளையாட்டுக் கழக நிர்வாகத்தினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளதுடன் அரச அதிபருக்கு மனு ஒன்றையும் கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொக்குத் தொடுவாய் கிராம மக்களுக்கு வெள்ள நிவாரணம் கடந்த 9 ஆம் திகதி வழங்கப்பட்டது. 70 குடும்பங்களுக்கு உலருணவு, உடைகள், கல்வி உபகரணம் என்பன நேரில் சென்று வழங்கப்பட்டன. இதனைக் கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையம் வழங்கியது. (த)

# மன்னாரில் திவிநெகும வேலைத்திட்டம்

மன்னார்,ஜன 17

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் திவிநெகுமதிட்டத்தின் ஏற்பாட்டில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'வறுமையற்ற இலங்கையை உருவாக்குவோம்' என்னும் வேலைத்திட்டம் மன்னார் மாவட்டத்திலும் ஆரம்பித்து வைக்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிலையில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் குறித்த வேலைத் திட்டம் தொடர்பான அவசர கலந்துரையாடல் நேற்று புதன் கிழமை காலை மன்-அல்-அஸ்ஹர் ம.வி நவோதயப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

வன்னி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், அமைச்சருமான றிசாட் பதியுதின் தலைமையில் இடம் பெற்ற குறித்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான முத்தலீப் பாபா பரூக்,ஹீனைஸ் பாரூக் ,மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர, மேலதிக அரச அதிபர் திருமதி. ஸ்ரான்லி டி மேல், மன்னார் பிரதேச செயலாளர் செல்லையா தயானந்தா, உதவி பிரதேச செயலாளர் வி.பாவாகரன் உற்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மீன்பிடி ,விவசாயம், [illegible] தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதோடு குறித்த திணைக்களங்களின் தலைவர்கள் விளக் கங்களையும் வழங்கினர்.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் கடந்த 30 ஆண்டுகளாக அழிவுப் பாதையில் சென்ற எமது நாடு குறிப்பாக வன்னி மாவட்டம் ஜனாதி பதியின் குறித்த செயல் திட்டத்தின் [illegible] யெழுப்பப்படுகின்றது-என்றார். (த-12)

# கலாசார மண்டபம் திறந்து வைப்பு

மன்னார், ஜன.17

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த மண்டபத்தை எஸ்.தியாகராஜா திறந்து வைக்கவுள்ளார்.

இந்தக் கலாசார மண்டபத்தில் மகான்கள் மற்றும் ஞான சிரேஷ்டர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு பூசைகள், பிரார்த்தனைகள், கலை நிகழ்வுகள், மங்கல மாங்கல்ய நிகழ்வுகளை நடத்துவதற்கான வசதிகள் உள்ளன.

அத்துடன் யாத்திரிகர்கள் தங்குவதற்கான பொது மண்டபம் ஒன்றும் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் ஒளியில் பட்டம் ஏற்றல்

அளவெட்டி, ஜன.17

மின் ஒளியில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பட்டங்கள் பொங்கல் தினத்தன்று அளவெட்டிப் பகுதிகளில் பறந்தன.

இரவு முழுவதும் இவ்வாறான பட்டங்கள் வானில் பறந்த வண்ணம் இருந்தன.

சிறிய பற்றிகள் மூலம் இயங்கும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பட்டங்கள் பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் காட்சியளித்தன. (ம-36)

## விபத்தில் சிறுவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 17

நாவற்குழிச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 14 வயதுச் சிறுவன் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கிட்ணர் கிட்லர் என்ற சிறுவனே படுகாயமடைந்தான்.

யாழ். நகரிலிருந்து சென்று தனியார் பஸ்ஸில் நாவற்குழியால் தனது வீட்டுக்குச் செல்ல இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட போது விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-4)

## மின் இணைப்பு பெறுவதற்கு நிதி

வலி.வடக்கு, ஜன.17

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் உள்ள சங்கானை பிரதேச கிராமிய அபிவிருத்திச் சங்க கட்டடத்துக்கு மின் இணைப்பு பெறுவதற்காக பன்முகப்படுத்திய வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் பன்முகப்படுத்திய வரவு- செலவுத் திட்ட நிதியில் இருந்து இது வழங்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் உடனடியாக மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் 20 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டு மின் இணைப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## இளைஞர்கள் குருதிக்கொடை

அளவெட்டி, ஜன.17

ஏழாலை ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக இளைஞர்கள் 40 பேர் பொங்கல் தினத்தில் குருதிக் கொடை வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பளை இரத்த வங்கி பொறுப்பு வைத்தியர் தலைமையில் சென்ற இரத்த வங்கிப் பணியாளர்கள் குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (ம-36)

### பருத்தித்துறை பிரதேச சபை, நகரசபைகள்

# குப்பைகளைக் கொட்டுவதற்கு பொருத்தமான இடமின்றிச் சிரமம்

வடமராட்சி, ஜன.17

பருத்தித்துறைப் பிரதேச சபை, நகர சபை குப்பை கூளங்களை கொட்டுவதற்கு பொருத்தமான, உரிய இடமின்றிச் சிரமப் பட்டு வருகின்றன.

இவ்விரு சபைகளும்காலம் காலமாக ஆனைவிழுந் தான் பகுதியில் குப்பை கூளங்களைக் கொட்டக் கூடாது என பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் இரு சபைகளுக்கும்அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அத்துடன் அந்தப் பகுதியில் ஏற்கனவே கொட்டப்பட்டிருந்த குப்பை கூளங்களால் நீரின் தன்மை மாற்றமடையலாம் என்பதற்காக அவற்றை பெரும் பணச் செலவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சில மாதங்களுக்கு முன்னர் அகற்றியிருந்தது.

இதனைத் தொடர்ந்து இரு சபைகளும் அல்வாய், முள்ளி, சரசாலைவெளி ஆகிய இடங்களில் குப்பை கூளங்களைக் கொட்டி வந்தன. குறிப்பிட்ட இடங்களில் குப்பை கூளங்களைக் கொட்ட வேண்டாம் என இரு சபைகளுக்கும் விடுக்கப்பட்ட நெருக்கடியால் இங்கும் குப்பைகளைக் கொட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குப்பை கூளங்களைக் கொட்ட இடமில்லாத நிலையில் நகர எல்லைக்குள் தேங்கும் குப்பை கூளங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை பருத்தித்துறை நகர சபை மட்டுப்படுத்தியுள்ளது.

இதனால் நகரின் சிற்சில பகுதிகளில் குப்பை கூளங்கள் தேங்கியுள்ளன. இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபை குப்பை கூளங்களைக் கொட்டுவதற்கென பருத்தித்துறை சிவன் கோயில் நிர்வாகம் துன்னாலைப் பகுதியில் கோயிலுக்குச் சொந்தமான காணி ஒன்றைக் குத்தகைக்காக வழங்கியது.

அந்தக் காணியில் குப்பை கூளங்களைக் கொட்டுவதற்கு அந்தக் காணி அமைந்துள்ள பருத்தித்துறைப் பிரதேச சபை அனுமதியளிக்க மறுத்து வருகிறது எனவும் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா. ரவீந்திரன் கவலை தெரிவித்தார்.

இதேவேளை, பருத்தித்துறை பிரதேச சபை துன்னாலைப் பகுதியில்ஒதுக்குப்புறம் ஒன்றில் குப்பை கூளங்களைக் கொட்டிவரும் அதே நேரம் அந்தப்பகுதியில் குப்பை கூளங்களைக் கொட்டுவதற் குரிய காணி ஒன்றைக் கொள் வனவு செய்யத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## சாவகச்சேரி பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர்

தென்மராட்சி, ஜன.17

சாவகச்சேரி பிரதேச சபைக்கு புதிய உறுப்பினராக சி.சிறிரஞ்சன் தேர்தல்கள் உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டு அண்மையில் பிரதேச சபையின் உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான க.மதீஸ்வரன் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## நெற்பயிர்களில் பூச்சித் தாக்கம்

அளவெட்டி, ஜன.17

காலபோக நெற்பயிர்களை இந்த முறை நுண்ணிய பூச்சிகள் தாக்கி வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தமுறை பருவம் தப்பிப் பெய்த மழையால் பெருமளவான நெற்பயிர்கள் அழிவடைந்து போயின.

எஞ்சிய பயிர்களை ஒரு வகையான பூச்சிகள் தாக்கி வருவதால் நெற்கதிர்கள் முற்றாது காணப்படுகின்றன எனவும் விவசாயிகள் கூறுகின்றனர். (ம-36)

## பட்டாசு வெடித்து கண்ணில் காயம்

அளவெட்டி, ஜன.17

கொழுத்தி எறிந்த பட்டாசு வெடிக்காது இருந்த நிலையில் அதனை எடுக்க முற்பட்ட வேளை திடீரென வெடித்ததில் சிறுவனுக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டது.

இதன்போது காயமடைந்த புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த என்.டிலோசன் (வயது 10) என்ற சிறுவன் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-36)

## மாலை வேளை மட்டும் திறக்கப்படும் கூ.சங்கம்

தென்மராட்சி, ஜன.17

இரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட ப.நோ.கூ. சங்கக் கிளை தினமும் மாலை வேளைகளில் மட்டும் திறக்கப்படுவது குறித்து பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

அல்லாரை பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை தினமும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் வியாபாரத்துக்காக திறக்கப்படுகிறது.

அல்லாரை, போக்கட்டி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 700 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இந்தச் சங்கக் கிளை யில் நுகர்வுப் பொருள்களை கொள்வனவு செய்கின்றனர்.

பிற்பகல் திறக்கப்படுவதால் மக்கள் பொருள்களை வாங்குவதற்கு மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது என்று கூறினார்.

இது தொடர்பாக சங்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

சங்கத்தில் முகாமையாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் இரு கிளைக் கடைகளை காலை மாலை எனப் பிரித்து ஒரு கிளை முகாமையாளர் பணியாற்றுவதாகவும் சங்கத்துக்கு கிளை முகாமையாளர்கள் விரைவில் நிய மிக்கப்படும் போது சங்கத்தின் கிளைகளில் சிறந்த சேவைகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## வாழ்வெழுச்சித் திட்டத்துக்கு விழிப்புணர்வுச் செயற்பாடு

வலி.வடக்கு, ஜன 17

யாழ். மாவட்டத்தில் வாழ்வெழுச்சித் திட்டத்துக்கான விழிப்புணர்வுச் செயல் திட்டங்கள் பரவலாக பிரதேச செயலகங்கள் ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராம மட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதி நிதிகள் என பலரையும் பிரதேச செயலகங்களுக்கு அழைத்து இந்த விழிப்பு ணர்வுச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதேச சபைகளின் உறுப்பினர்களையும் அழைக்கும் படி பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் பணிக்கப்பட்டுள்ளது.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பாது ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பி விட்டு ஏனையவர்களைப் புறம் தள்ளியுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர்களால் குற்றஞ்சாட்டப் படுகின்றது.**

எனினும் சில இடங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்பாது ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பி விட்டு ஏனையவர்களைப் புறம் தள்ளியுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர்களால் குற்றம் சாட்டப் படுகின்றது. (ம-86)

## இருபாலை பிரதேச மக்களுக்கு நிலத்தடி குழாய் மூலம் தண்ணீர்

யாழ்ப்பாணம்,ஜன.17

இருபாலை பிரதேசத்துக்கு நிலத்தடி குழாய் மூலம் குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச சபை தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவியின் இந்த குடி தண்ணீரை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான முதற்கட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சபையின் தலைவர் அ. உதயகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தப் பிரதேச மக்களுக்கான குழாய் மூலமான குடிதண்ணீரை விநி யோகிப்பதற்கென கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் உள்ள சபையின் காணி ஒன்றில் அதற்குரிய குடிதண்ணீர் தாங்கி ஒன்றை தேசிய குடிதண்ணீர் விநியோக வடிகாலமைப்பு சபை அமைக்கவுள்ளது.

**தற்போது இருபாலை பிரதேச மக்களுக்கு பவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் தினமும் விநியோகிக்கப் பட்டு வருகின்றது.**

இந்தக் காணிக்கு அருகில் உள்ள நன்னீர் குழாய் மூலம் தாங்கிக்கு தண்ணீர் ஏற்றப்பட்டு பின்னர் நிலத்தடி குழாய் மூலம் பிரதேசத்துக்கு விநியோகிக்கப் படும்.

தற்போது இருபாலை பிரதேச மக்களுக்கு பவுசர் வாகனம் மூலம் குடிதண்ணீர் தினமும் விநியோகிக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## ‘திவிநெகும’ செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஜன. 17

திவிநெகும வாழ்வெழுச்சி செயற்பாடுகள் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் பிரதேச செயலர் மண்டபத்தில் நடைபெற்றது.

2011 இல் ஆரம்பிக்கப்பட்ட வாழ்வெழுச்சித் திட்டத்தால் நாட்டில் உள்ள மக்கள் பெற்றுக் கொண்ட பயன்கள், ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட அபிவிருத்திகள் தொடர்பான வீடியோவும் காண்பிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய திட்டங்கள் குறித்த கருத்துக்களும் வழங்கப்பட்டன.

கமத்தொழில், கால்நடை, மீன்பிடிக் கைத்தொழில் குறித்த விடயங்கள் பற்றிய விளக்கங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் எடுத்துக் கூறினர்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன், நல்லூர் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் யாழ்.மாநகர முதல்வர், திணைக்களத்தவர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பட்டதாரி பயிலுநர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைக்ரோசொப்ட் பரீட்சையில் தமிழகத்தின் 9 வயதுச் சிறுவன் சாதனை

வொஷிங்டன், ஜன.17

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிபுணர் தெரிவுப் பரீட்சையில் 9 வயதான தமிழகத்தைச் சேர்ந்த பிரணவ் கல்யாண் என்ற மாணவர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

மைக்ரோசொப்ட் நிறுவனம் ஏ.எஸ்.பி. நெற் இணையப் பிரிவில் (ASP. NET), அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிபுணர் தெரிவுக்கான பரீட்சையை கடந்த 12 ஆம் திகதி நடத்தியிருந்தது.

கணினிப் பட்டதாரிகள் தான் பொதுவாக குறித்த



பரீட்சையை எழுதுவது வழக்கம்.

ஆனால் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 4 ஆம் வகுப்பில் கற்கும் 9 வயதுடைய பிரணவ் கல்யாணும் பரீட்சை எழுத அனுமதி கிடைத்தது.

பரீட்சை எழுதியதுடன் மட்டுமின்றி சிறுவன் பிரணவ் வெற்றியும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

சாதனை நாயகனான பிரணவ்வின் தந்தை கல்யாண், தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில் ஜல்லிக் கட்டுக்குப் புகழ் பெற்ற பாலமேட்டையைச் சேர்ந்தவர். அவர் கலிபோர்னியாவில் அமெரிக்க வங்கியில் பணியாற்றி வருகிறார்.

மாணவனின் தாயார் விசாலாட்சியும் அமெரிக்க வங்கியில் நிதி ஆய்வாளராகப் பணியாற்றுகிறார்.

## அமிதாப்பை கசாப்புடன் ஒப்பிட்ட உருது கவிஞர்

சென்னை, ஜன.17

பொலிவுட் நடிகர் அமிதாப் பச்சனை பாகிஸ்தான் தீவிரவாதி அஜ்மல் கசாபுடன் ஒப்பிட்டுப் பேசியுள்ளார் உருது கவிஞர் நிதா பாசில்.

உருது கவிஞரான நிதா பாசில் (வயது 74) அண்மையில் செய்தியாளர்களிடம் கூறுகையில்-

கோபக்கார இளைஞர் என்ற பட்டம் அமிதாப் பச்சனுக்கு ஏன் அளிக்கப்பட்டது? அவர் அஜ்மல் கசாப் போன்ற ஒரு பொம்மை.

ஒரு பொம்மையை சலீம்-ஜாவீதும், இன்னொரு பொம்மையை ஹபீஸ் சயீதும் உரு



வாக்கினர். அந்த பொம்மை தூக்கிலிடப்பட்டுவிட்டது. ஆனால் அதை உருவாக்கியவர் சுதந்திரமாக உள்ளார் - என்றார்.

மேற்படி கருத்தைத் தெரிவித்த பாசில் செய்தியாளர்களிடம் கூறுகையில், நான் அமிதாப்பைத் தீவிரவாதி என்று கூறவே இல்லை என்று மறுத்துள்ளார். (வ)

## இந்தியா – வியட்நாம் இடையே வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து



சிறு தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் மேம்படுத்தவும், அவற்றுக்கான வாய்ப்புகளை இனம் காணவும் இந்தியாவும் வியட்நாமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, நான்கு நாள் சுற்றுப்பயணமாக வியட்நாம் சென்றுள்ளார். அவரது பயணத்தின் முக்கிய அம்சமாக, இரு நாடுகளுக்கும் இடையில் தொழில்துறைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வியட்நாமில் சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், எந்தத் துறையில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று இனம் காணவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வியட்நாம் சார்பில் அந்தநாட்டின் திட்டத்துறை துணை அமைச்சர் டாவோ குவாங்துவும், இந்தியத் தூதர் ரஞ்சித் ரேவும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கையெழுத்திட்டனர். (வ)

# பாகிஸ்தானுடன் இனிமேல் நட்புறவுக்கு இடமில்லை


## பகிரங்கமாக அறிவித்தார் மன்மோகன்

டில்லி, ஜன.17

பாகிஸ்தானுடன் இனி சுமுக நட்புறவுக்கு இடமில்லை என்று பிரதமர் மன்மோகன் சிங் பகிரங்கமாக அறிவித்தார்.

இந்திய வீரர்களின் தலை துண்டிப்பு மிருகத்தனமான கொடூரமான செயல் என்றும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். காஷ்மீரில் பூஞ்ச் மாவட்டத்தில் இந்திய பகுதிக்குள் கடந்த 8 ஆம் திகதி நுழைந்து பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இந்திய வீரர்கள் சுதாகர் சிங், ஹேம்ராஜ் கொல்லப்பட்டனர்.

ஹேம்ராஜின் தலையை பாகிஸ்தான் இராணுவத்தினர் வெட்டி எடுத்துச் சென்றனர். இந்தக் கொடூரச்



செயலால் எல்லையில் பதற்றம் நிலவுகிறது.

இந்த விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங் வாய் திறக்காதது ஏன்? என்று பா.ஜ. கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்தியாவின் 65 ஆவது இராணுவ தினத்தையொட்டி டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் மன்மோகன் சிங் கலந்து கொண்டார். இதன் போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

இந்திய வீரரின் தலையை பாகிஸ்தான் இராணுவத்தினர் வெட்டியது மிருகத்தனமானது. அந்தக் கொடூர செயலை ஏற்க முடியாது. இந்த சம்பவத்துக்குப் பின் பாகிஸ்தானுடன் சுமுகமான நட்புறவு வைத்துக்கொள்ள முடியாது.

இந்திய பகுதிக்குள் பாகிஸ்தான் இராணுவத்தினர் ஊடுருவியதை அந்த நாடு மறுத்தாலும், அவர்களை ஏற்க வைக்க முயற்சி செய்வோம்.

இந்திய வீரரின் தலையை வெட்டிய கொடுமையான குற்றத்தைச் செய்தவர்களை பாகிஸ்தான் அரசு கைது செய்து தண்டிக்க வேண்டும். பாகிஸ்தானுடன் பேச்சு தொடர்பாக என்ன நிலை எடுப்பது என்பது பற்றி வெளிப்படையாக விவாதிக்க முடியாது-என்றார்.(வ)

## 'திருக்குறளைத் தேசிய நூலாக்கவும்' கவிஞர் வைரமுத்து கோரிக்கை






சென்னை, ஜன.17

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்குமாறு வைரமுத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

வெற்றித் தமிழர் பேரவையின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சென்னை, பெசன் நகரில் கொண்டாடப்பட்டது. பேரவையின் நிறுவுநரும், கவிஞருமான வைர முத்து அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்திய அரசு தேசிய அடையாளங்களாக சிலவற்றைக் காத்து வருகிறது. ஆனால், தேசிய நூல் என்ற ஓர் அடையாளம் இன்று வரை உருவாக்கப்படவில்லை.

இனம் கடந்து, மொழி கடந்து, இடம் கடந்து உலகப் பொதுமறையாகத் திகழும் திருக்குறள்தான் தேசிய நூலாகத் திகழ முடியுமென்று தமிழர்களாகிய நாம் நம்புகிறோம்.

எனவே, திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டுகிறோம்.

ஒரு கருத்து நூறு ஆண்டுகள் நீடிப்பதே அரிது. அதுவும் இரு நூறு ஆண்டுகள் நீடிப்பது அரிதினும் அரிது. ஆனால், ஒரு தமிழன் சொன்ன கருத்து ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் நீடித்து உலக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலைத்து நிற்கிறது-என்றார்.



புதுடில்லியில் நடைபெற்ற அணுசக்தி தொடர்பான விழாவில், 2011 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளர் விருதை அணுசக்தித் துறையைச் சேர்ந்த எஸ்.கே. சிக்காவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் வழங்கி கௌரவித்தார்.

## சிங்கப்பூர் நாடாளுமன்ற சபாநாயகராக இந்தியப்பெண்

சிங்கப்பூர் நாடாளுமன்ற சபாநாயகராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினரான ஹாலி மாஹ் யாகோப் (வயது 58) பதவி யேற்றுக் கொண்டார்.

முன்னதாக நாடாளு மன்ற சபாநாயகராக இருந்த [illegible] முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை அடுத்து அவர் பதவியைக் கடந்த டிசெம்பர் 12 ஆம் திகதி ராஜினாமா செய்தார்.

அதன் பின்னர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினரான ஹாலி மாஹ் யாகோப் (வயது 58) என்பவரை புதிய சபாநாயகராக நியமித்து பிரதமர் லீ ஹசின் லாங் உத்தரவிட்டார்.

சமூக மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சாராக இருந்த ஹாலிமாஹ் அந்த பதவியை ராஜினாமாச் செய்து விட்டு சபாநாயகர் பதவியை ஏற்றார்.

இந்தியப் பெண் ஒருவருக்கு இத்தகைய உயர் பதவி கிடைப்பது இதுவே முதல் தடவையாகும். (வ)

## தலை துண்டிக்கப்பட்ட வீரரின் குடும்பத்து ரூ.46 லட்சம் நிதியுதவி



டில்லி, ஜன.17

பாகிஸ்தான் இராணுவத்தினரால் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வீரர் ஹேம்ராஜ் குடும்பத்துக்கு ரூ. 46 லட்சம் நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

மத்திய பாதுகாப்பு இணையமைச்சர் ஜிதேந்திர சிங் மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் மதுராவில் ஹேம்ராஜ் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறிய அவர், பெற்றோலியத்துறை அமைச்சகத்திடம் ஆலோசித்து அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு பெற்றோல் நிலையத்தில் வேலை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரதமரைக் கைது செய்யுங்கள்

## உத்தரவு பிறப்பித்தது பாக். உயர்நீதிமன்றம்

இஸ்லாமாபாத், ஜன.17

பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரபைக் கைதுசெய்யுமாறு பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரதமரையும் அவருடன் சேர்த்து இன்னும் 15 பேரையும் கைது செய்யுமாறு ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்துள்ளது.

2010ஆம் ஆண்டு நீர் மற்றும் எரிசக்தி துறை அமைச்சராக இருந்தபோது, அரச செயற்திட்டங்களுக்கு அனுமதி வழங்கும்போது பெருமளவு இலஞ்சம் வாங்கியுள்ளதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பாகிஸ்தானின் நடப்பு அரசாங்கம் பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தி பாகிஸ்தானில் செல்வாக்கு மிக்க மத குருவான தாஹிருல் காத்ரி தலைமையிலான மின்ஹாஜுல் குரான் கட்சி, லாகூரிலிருந்து தலைநகர் இஸ்லாமாபாத் வரை பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் நடத்தியது.

பாகிஸ்தானில் நிலவும், லஞ்ச ஊழல், நேர்மையின்மை, தீவிரவாதம் போன்ற வற்றுக்கு முடிவு கொண்டு வரும் வகையில் நாடாளுமன் றத்தைக் கலைத்து நடப்பு ஆட்சியை அகற்றும் படி அந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பாகிஸ்தானில் அண்மைய ஆண்டுகளாகவே நீதித்துறை மற்றும் அதிகாரம் மிக்க இராணுவ-பாதுகாப்புத் துறை என்பவற்றுக்கிடையில் முரண்பாடுகள் இருந்துவருகின்றன.

அஷ்ரப்புக்கு முன்னர் பிரதமராக இருந்த யூசுப் ராசா கிலானி, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் பதவியிழந்தார். அதனையடுத்து பிரதமராக அஷ்ரப் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.



## மனித வெடிகுண்டு தாக்குதல்

### ஈராக் எம்.பி. சாவு



பாக்தாத், ஜன. 17

ஈராக்கில் இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் ஈராக் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

ஈராக், பலுசா நகரில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈபான் சாதூன் அல்-இசாவி மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அப்போது அவரை வாழ்த்துவது போன்று அருகில் வந்த ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்துள்ளார்.

அதில் இசாவி மற்றும் அவரது பாதுகாவலர்கள் என 4 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.

உயிரிழந்த இசாலி சன்னி முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. சன்னி மற்றும் ஷியா முஸ்லிம்களுக்கு இடையிலான முரண்பாடே இந்தத் தாக்குதலுக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# பல்கலை மீது தாக்குதல்

## சிரியாவில் 83 பேர் சாவு; 120 பேர் காயம்

பெய்ரூட், ஜன.17

சிரியாவில் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 83இக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

சிரியாவின் வடமேற்கே அலிப்போ பல்கலைக் கழகத்திலேயே நேற்றுமுன்தினம் இரு இடங்களில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்தன.

அதில் 83 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 120இக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக அலிப்போ மாகாண ஆளுநர் முகமது வாஹித்அக்காட் தெரிவித்தார்.

சிரியாவில், ஜனாதிபதி பஸார் அல் அசாத்திற்கு எதிராக 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் மக்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர். நீண்ட காலமாகத் தொடரும் மோதல்களால் இதுவரை 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.



## போதைப் பொருள் குழுக்கள் மோதல்; மெக்ஸிக்கோவில் 16 பேர் சாவு

மெக்ஸிக்கோ சிட்டி, ஜன. 17

மெக்ஸிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் பேர் 16 உயிரிழந்துள்ளனர்.

மெக்ஸிக்கோவில் போதைப் பொருள்களைக் கடத்துவதில் குழுக்களுக்கிடையே பெரும் போட்டி நிலவுகிறது. அதன் விளைவாக ஏற்பட்ட மோதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்படுகிறது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# பிரான்ஸின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கிறது ஐ.நா.

ஜெனிவா, ஜன.17

மாலியில் பிரான்ஸ் படையினரின் தலையீட்டுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

மாலியில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பிரான்ஸ் படையினர் முயற்சிகளை எடுத்து வருகின்றனர். மாலி நாட்டின் பௌதிக ஒருமைப்பாடு மற்றும் இறைமையை பேணிப் பாதுகாக்கப் பிரான்ஸின் தலையீடு வழியமைக்கும் என எதிர்பார்ப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தும் பிரான்ஸ் படையினருக்கு ஆபிரிக்க துருப்பினர் உதவிகளை வழங்கவுள்ளனர்.



இதேவேளை, மேற்கு ஆபிரிக்கக் துருப்பினரின் ஒத்துழைப்புடன் இஸ்லாமிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என பிரான்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எனினும் இஸ்லாமிய தீவிரவாதிகள் மாலியின் முக்கிய நகரங்களைக் கைப்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயணிகள் ரயிலையே திருடினார் இளம் பெண்!

ஸ்டாக்ஹோம், ஜன.17

சுவீடனில் இளம் பெண் ஒருவர் பயணிகள் ரயிலையே திருடிச் சென்றுள்ளார்.



சுவீடனின்ஸ்டொக்ஹோம் நகரில் நக்லிங்கே ரயில் நிலையத்தில் 4 பெட்டிகளுடன் நின்ற பயணிகள் ரயிலையே 24 வயதுடைய அந்தப் பெண் கடத்திச் சென்றுள்ளார்.

திருடிய ரயிலைக் கொண்டு சென்றபோது அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது திணறினார் அவர். அதிக வேகம் காரணமாக ரயில் திடீரென தண்டவாளத்தை விட்டுத் தடம்புரண்டது. எனினும் அந்தக் கில்லாடிப் பெண் ரயிலில் இருந்து குதித்து தப்பிக் கொண்டார். அதன் பின்னரும் ஒன்றரை கி.மீ. தூரம் தானாகவே சென்ற ரயில் மூன்று மாடி கொண்ட ஒரு வீட்டிற்குள் புகுந்து நின்றுகொண்டது.

ரயிலைத் திருடிய பெண்ணைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். ரயிலை இயக்கக் கூடிய திறப்பு அவருக்கு எப்படி கிடைத்தது என்பது குறித்து விசாரணை நடைபெற்றுகொண்டிருக்கிறது என்று தெரிவிக்கின்றனர் பொலிஸார்.

## 100 அடி சுரங்கம் தோண்டி வங்கியில் கொள்ளை

பேர்லின், ஜன.17

சுரங்கம் அமைத்து வங்கியில் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஜேர்மனியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியின் தலைநகர் பேர்லினிலேயே இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரி, வங்கியின் பாதுகாப்பு பெட்டக அறையில் இருந்து புகை கிளம்புவதை அவதானித்தார். உடனே அவர், உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார்.

அதிகாரிகள் வந்து பார்த்தபோது, பாதுகாப்புப் பெட்டகம் திறக்கப்பட்டு, உள்ளே இருந்த பணம் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

அதையடுத்துகப் பொலிஸார்வந்துவங்கியைச்சோதனையிட்டனர். அப்போது வங்கிக்கு அருகில் இருக்கும் வாகனத் தரிப்பிடத்தில் இருந்து 100 அடி நீளத்துக்கு சுரங்கம் வெட்டி வங்கியின் உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியமை கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

''விரிவான முறையில் திட்டமிட்டு இந்தக் கொள்ளை நடந்துள்ளது. சுமார் 100 அடி நீளத்திற்கு சுரங்கம் தோண்டி கொள்ளையர்கள் வங்கிக்குள் நுழைந்துள்ளனர். பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு சுரங்கத்தின் வழியாகவே வெளியே சென்றுள்ளனர். தடயங்களை அழிப்பதற்காக் சுரங்கப் பாதையில் தீமூட்டி விட்டுத் தப்பித்துள்ளனர்'' என்றார்.

## ஹிட்லர் கையெழுத்திட்ட சுயசரிதை ஏலத்தில்

அடால்ப் ஹிட்லர் கையெத்திட்ட 'மெயின் கேம்ப்' என்ற அவரது சுயசரிதை நூல் ஏலத்துக்கு வர உள்ளது.

1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னர் அவர் இப்புத்தகத்தில் கையெழுத்திட்டிருப்பார் என்று நம்பப்படுகிறது.

இந்தச் சுயசரிதையில் உள்ள ஹிட்லரின் கையெழுத்தை ஆய்வு செய்த வல்லுநர்கள், கையெழுத்திடும் சமயத்தில் ஹிட்லர் மிகவும் பதற்றமாக இருந்திருக்கலாம் அல்லது குழப்ப மான மனநிலையில் இருந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.

1939ஆம் ஆண்டு ஹிட்லரின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சுயசரிதை நூல் வெளியானது. ஹிட்லரின் கையெழுத்துக்குக் கீழே மார்ச் 5, 1945 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதி, ஹிட்லர் பதுங்குகுழியில் தங்கியிருந்த சமயம் எனக் கருதப்படுகிறது. இரண்டாம் உலகப் போர் ஏப்ரல் 30ஆம் திகதி முடிவுக்கு வருவதற்கு 12 தினங்களுக்கு முன்னதாக ஹிட்லர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

# பகைமையை தூண்டுகிறார் இந்திய இராணுவத் தளபதி

## குற்றஞ்சாட்டுகிறார் பாக். வெளியுறவுத்துறை அமைச்சர்

வோஷிங்டன், ஜன.17

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் தற்போது நிலவும் நிலைவரம் தொடர்பாக இந்திய இராணுவத் தளபதி வெளியிட்டுள்ள கருத்து பகைமை உணர்வைத் தூண்டுவதாக அமைகிறது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினா ரப்பானி கவுர் தெரிவித்துள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இரு இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்ட இந்திய இராணுவத் தளபதி பிக்ரம்சிங், பாதுகாப்புக்காக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஆயுதங்களுடன் பாகிஸ்தானுக்குத் தக்க பதிலடி கொடுப்போம் என்று தெரிவித்திருந்தார்.

இது குறித்து அமெரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினாரப்பானி கவுர், நியூயோர்க்கில், கருத்துத் தெரிவிக்கும்போது,

''நட்பு நாடான இந்தியா தற்போது எல்லைக்கட்டுப்பாட்டு விவகாரத்தைக்கையில் எடுத்துள்ளது. பாகிஸ்தான் மீது பகைமை உணர்வைத் தூண்டும் வகையில் இராணுவத் தளபதியின் கருத்து அமைந்துள்ளது. அவர் மட்டுமல்ல, இந்திய அரசியல் தலைவர் களும் பாகிஸ்தானைப் பழிவாங்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

அண்டை நாடான இந்தியாவுடன் எப்படி நட்புறவு கொள்ள வேண்டும் என்பதைப் பாகிஸ்தான் நன்றாக புரிந்து வைத்துள்ளது. இந்த விடயத்தில் பாகிஸ்தானின் வளர்ச்சியை அவர்கள் எட்ட வேண்டும் என்பதனையே இவ்வாறான கருத்துகள் எடுத்துக் காட்டுகின்றன'' என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறினார் சர்தாரி?



இஸ்லாமாபாத், ஜன.17

பாகிஸ்தானில் அரசுக்கு எதிராக எந்நேரமும் புரட்சி ஏற்படலாம் என்ற நிலையில், ஜனாதிபதி சர்தாரி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதேநேரத்தில் அரசுக்கு எதிராக அந்நாட்டு உச்சநீதி மன்றமும் இன்னொரு முனையில் களமிறங்கியிருக்கிறது.

இந்தநிலையில் ஜனாதிபதி சர்தாரி பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் ஜனாதிபதி பாகிஸ்தானிலேயே இருப்பதாகவும் விரைவில் தனது கருத்தைத் தெரிவிப்பார் என்றும் அரசு சார்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

# தளம்புகிறது பாகிஸ்தான்?

## நாடாளுமன்றை முற்றுகையிட்டு மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்



இஸ்லாமாபாத், ஜன.17

பாகிஸ்தான் அரசுக்கு எதிராக பொதுமக்கள் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். இதனால் அங்கு இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டங்கள் பாகிஸ்தானில் ஓர் அரசியல் மாற்றத்தைக் ஏற்படுத்துவதற்கான அடிக்கல்லாக அமையலாம் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தானில் நிலவும் லஞ்ச ஊழல், நேர்மையின்மை, தீவிரவாதம் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர். தாகீர் உல் காத்ரி எனும் மத குருவின் தலைமையிலேயே ஆர்ப்பாட்டங்கள் கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்றன. இந்த ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

பாகிஸ்தான் அரசு பதவி விலக வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது.

பேரணியின் முடிவின் போது திரண்டிருந்த மக்கள் முன் உரையாற்றிய தாகீர் உல் காத்ரி,

''தற்போது பேரணி முடிந்து விட்டது. ஆனால் புரட்சி தொடங்கி விட்டது, பாகிஸ்தானில் நிலவும் லஞ்ச ஊழல், நேர்மையின்மை, தீவிரவாதம் போன்றவற்றுக்கு முடிவு ஏற்படும் வகையில் இந்தப் புரட்சி இருக்கும். நாடாளுமன்றத்தை கலைக்கும்படி பிரதமர் அஷ்ரப், ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியிடம் பரிந்துரை செய்யவேண்டும். அதே போன்று தொடர்ந்து படுகொலைகள் இடம்பெற்று வரும் பஞ்சாப் மற்றும் பலுசிஸ்தான் மாகாண சட்டசபைகளும் கலைக்கப்பட வேண்டும். இதற்கு நாம் காலக்கெடு விதிக்கிறோம்'' என்று தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டப் பேரணி முடிற்றபோதும் நேற்று தாகீர் உல் காத்ரீயின் ஆதரவாளர்கள் நாடாளுமன்றின் முன்னால் திரண்டனர். நாடாளுமன்றைச் சூழ பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. நாடாளுமன்றம் செல்லும் வீதிகளில் ஒன்றுதிரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். அவர்களை கலைக்க முயன்ற பொலிஸார் மீது கற்கள் வீசப்பட்டன. அதனையடுத்து கண்ணீர் புகை குண்டுகளை வீசி தாகீர் உல் காத்ரீயின் ஆதரவாளர்கள் விரட்டப்பட்டனர்.

எனினும் மீண்டும் அதே பகுதியில் ஒன்று திரள ஆரம்பித்தனர் ஆர்ப்பாட்டக்காரர்கள். அதனால் வானத்தை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி திரண்ட மக்களைக் கலையுமாறு எச்சரித்தனர். ஆர்ப்பாட்டம் செய்பவர் கள் அங்கிருந்து அகலாமல் முற்றுகையிட்டுக் கோஷங்களை எழுப்பியவண்ணமிருந்தனர். தற்போது இஸ்லாமாபாத்தில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுப் பதற்றம் நீடித்து வருகிறது.

இந்தநிலையில் பாகிஸ்தான் பிரதமருக்கு எதிரான உச்சநீதிமன்றத்தின் உத்தரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. நீதிமன்ற உத்தரவு வெளியானவுடன் அவர்கள் வீதிகளில் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இதுவரை கனடாவில் தங்கியிருந்த மதகுருவான தாகீர் உல் காத்ரி, தெக்ரீக் இமின்ஹாஜுல் குரான் கட்சியின் த்லைவராவார்.

வேலைவாய்ப்பு Blue Ocean Resort
யாழ்ப்பாண Town இலிருந்து Allaipiddy
8 நிமிடத்தில்
077 835 0478

- Director Personal Secretary,
- Computer typist,
- Room Service,
- Receptionist,
- Servant,
- Cook

கல்வித் தகைமை: O/L,A/L பெண்கள் 18 வயது-25 வரை.
உங்களது விண்ணப்பத்தையும் படத்தையும் தொலைபேசி இலக்கத்துடன் உங்களது கல்வித் தகைமைகளுடன் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

The Director,
ManagementBlue Ocean Resort,
Allaipiddy.
(28367)(5-6-7)

## திடீரெனத் தோன்றும் துளைகள்; சீனாவில் மக்கள் அச்சம்

பீஜிங், ஜன.17

சீனாவில் கிராமமொன்றில் திடீரென பெரும் துளைகள் தோன்றுவதால், மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

சீனாவில் நிலக்கரி சுரங்கத் தொழில் நடைபெறும் இடங்களில் நிலத்தடி நீர் முழுவதுமாக வற்றியுள்ளது.

இதனால் வயல்வெளிகளிலும், ஆற்றங்கரை ஓரத்திலும் திடீரெனப் பெருந்துளைகள் தோன்றியுள்ளன. கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் ஹுனான் மாநிலத்திலுள்ள லியான் யுவான் கிராமத்தில் 20 துளைகள் தோன்றியுள்ளன, 1200 பேர் வீடிழந்து தவிக்கின்றனர்.

இதனால் அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் உறைந்துள்ளனர்.

இதன் காரணமாக வீடுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு, இழப்பீடுகளைச் செய்துதர அரசு ஆலோசித்து வருகிறது. அளவுக்கு அதிகமாக நிலத்தடிநீர் வற்றியதே இதற்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது.

நவீன கோழிப்பண்ணை விற்பனை
நவாலி மானிப்பாயில் 3000 கோழிகள் வளர்க்கக் கூடிய 3 நவீன பண்ணைக் கட்டடங்கள், ஒரு அலுவலக கட்டடம், ஒரு பாதுகாப்புக் கட்டடம், நடுவில் பூங்காவனம் என்பவற்றுடன் கூடிய 5½ பரப்புக் காணியுடன் நவீன கோழிப்பண்ணை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 774 0941, 077 835 0478
(28366)(5-6)

மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா
பத்மராசா அன்ட் சன்ஸ் ஜுவல்லறி



அன்புடையீர்.
நிகழும் நந்தன வருடம் தைத்திங்கள் 4ஆம் நாள் இன்று (17.01.2013) வியாழக்கிழமை காலை 8.21 மணிமுதல் 9.45 வரையான சுப முகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட
பத்மராசா அன்சன்ஸ் ஜுவல்லறி
என்னும் ஸ்தாபனத்தை திறந்து வைக்க பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து விழாவினைச் சிறப்பித்து எம்மை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.
- P. தீலீபன் உரிமையாளர்.
பிரதான வீதி, சங்கானை.
T.P. 0776002584
(28370)(2-6-7)

எமது மனமார்ந்த நன்றிகள்....



எமது அன்புத்தாயார் ஈடித் சந்திரா மரியாம்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்டு அன்பையும் அனுதாபத்தையும் தெரிவித்த உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இக் கடினமான நேரத்தில் எமக்கு பல வழிகளிலும் உதவி செய்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.
129, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (28368) (2.6.7) - பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
திருமண அழைப்பு
நிகழும் மங்களகரமான நந்தன வருஷம் தை மாதம் 5 ஆம் நாள் நாளை [18.01.2013] வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் 10.20 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரமும் மீன லக்கினமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி
பாலையா கிருஷ்ணகுமாரி
தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
உமாகணேஷன்
அவர்களுக்கும்



திரு.திருமதி
உதயச்சந்திரன் சீதாலட்சுமி
தம்பதியரின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
சுகந்தமலர்
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு
திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
"கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில்"
[இல.32, பலாலி றோட், கோண்டாவில் சந்தி, கோண்டாவில்]
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்



பாலையா குடும்பத்தினர்,
"சுகந்தநிலா",இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
தொ.பே.0212212300,
0779501896.

உதயச்சந்திரன் குடும்பத்தினர்,
74, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 1892
(இரு வீட்டார் அழைப்பு)
(28371)(2-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதையும் சாதிக்கலாம் எவரும் சாதிக்கலாம்

(21 )

உழைப்பதனால் ஆரோக்கியம் ஒரு போதும் கெடுவதில்லை. உழைத்துக் கொண்டே இருங்கள். நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். சாதனைகள் புரிவீர்கள். நீங்கள் புரிகின்ற எந்தச் சாதனையும் உங்களிடமிருந்து தான் உருவாக வேண்டும்.

எதையும் சாதிக்கலாம்; எவரும் சாதிக்கலாம்

என்னைப் பரவசப்படுத்திய வாழ்க்கைகளில், பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சிலின் வாழ்க்கையும் ஒன்று. அசாத்தியமான தன்னம்பிக்கை உடையவராக அவர் இருந்தார். மற்றவர்களிடமும் நம்பிக்கையை ஊட்டுகின்ற சக்தி அவரிடம் இருந்தது. இரண்டாவது உலகப் போரில் தோல்வியின் விளிம்பில் நின்ற பிரிட்டிஷ் மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டி இறுதி வெற்றியை அவர்களுக்குப் பெற்றுத் தந்தவர் அவர்.

தோல்விகளை தோல்விகளாக சர்ச்சில் ஒரு போதும் ஏற்றுக் கொண்டதில்லை. அவரிடம் சாதாரணமாகக் காணப்படாத ஒரு சிறப்பு இயல்பு இருந்தது. தேல்விகளின் போது அதிக உற்சாகமடைவதும், மன உறுதி பெறுவதும் அவருக்குப் பழக்கம். இந்தக் குணத்தை சாதாரண பிரிட்டிஷ் குடிமக்களிடமும் ஏற்படுத்தினார் அவர்.

உலக வரலாற்றில் மிக நெருக்கடியான கட்டத்தில் மிக உன்னதமான சாதனை புரிந்த ஒரு மனிதராக அவர் வரலாற்றில் இடம்பெற்று இருக்கிறார்.

நான்கு முறை அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கிய ரூஸ்வெல்ட்ஸ் சிறு வயதிலேயே இளம் பிள்ளை வாதத்தால் கால்கள் முடமாகிப் போனார். சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே மிகப் பெரிய செல்வாக்குப் படைத்த ஜனநாயக நாடான அமெரிக்காவை பதினாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறார். அது மட்டுமல்ல, அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதிகளுள் ஒருவராகவும் அவர் விளங்கியிருக்கிறார்.

ஹெலன்கெல்லர் அம்மையாரைப் பற்றி கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. கண் குருடு, காது



செவிடு, வாய் ஊமை இதை விட ஒருவருக்கு வேறு என்ன பலவீனங்கள் இருக்க வேண்டும். ஆயினும், தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையின் பிரச்சினைகளை அவர் எதிர் கொண்டார். கல்வி பயின்று பல்கலைக்கழகப் பட்டங்கள் பெற்றார். ஒரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஆகவும் பணியாற்றினார்.

கோடியில் ஒரு ஹெலன்கெல்லர் இருக்கக் கூடுமென்று நாம் வாதிடலாம். பார்வை அற்றவர்கள் பள்ளிக்குச் சென்று அங்கே கண் தெரியாத குழந்தைகள் செய்கின்ற காரியங்களை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? பார்வையுள்ளவர்கள் காட்டுகின்ற சுறுசுறுப்பை விட அதிகமான சுறுசுறுப்புடன் அவர்கள் செயற்படுவதைப் பார்க்க முடியும். வாழ்க்கையை நேசிக்கக் கற்றுக் கொண்டு விட்டால், வாழ்வது சுலபமாகி விடும். வாழ்க்கையை நேசிக்கத் தெரியாத எவரும் சாதனைகள் புரிவது கடினம்.

மனிதப் பிறவியைக் கிடைத்தற்கரிய பேறாக நாம் கருத வேண்டும். வாழ்வதற்கு நமக்குக் கிடைத்திருக்கின்ற ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ள வகையில் செலவழிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் செய்கின்ற காரியங்கள் தாம், காலப்போக்கில் உங்களுடைய சாதனைகளாக உருப்பெறுகின்றன. உற்சாகத்துடன் நீங்கள் ஒரு காரியத்தில் ஈடுபடுகின்ற போது அதனுடைய பயனும் மிகுதியாகிறது. ஒவ்வொரு நிமிடத்தையும் உற்சாகத்துடன் நீங்கள் செலவிடுகின்ற போது, அதன் கூட்டுப் பயன் சாதனையாக உருவெடுக்கிறது.

எதைச் செய்தாலும், உற்சாகத்துடன் செய்ய நாம் கற்றுக் கொள்ள வேண்டும். உற்சாகத்துடன் காரியங்களைச் செய்தால் எவ்வளவு நேரம் உழைத்தாலும் களைப்பு ஏற்படாது. உழைப்புதான் சாதனை. உழைக்காமல் சாதனை இல்லை.

*பி.சி.கணேசன்* (தொடரும்)

# பிராந்திய மக்களின் தேவைகளையும் நிறைவேற்றும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி

## அர்ப்பணிப்புடனான சேவை தேவை என்கிறார் பணிப்பாளர்

தென்மராட்சி, ஜன.17

ஏ-9 வீதி ஊடாக வரும் ஏனைய பிராந்திய மக்களின் வைத்தியத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சாவகச்சேரி வைத்தியசாலை அமைந்துள்ளது. எனவே இங்கு கடமையாற்றும் அனைவரும் அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கி வைத்திய சாலைக்கு மட்டுமல்ல பிரதேசத்துக்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை ஊழியர் நலன்புரி சங்க ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் இந்த வைத்தியசாலை போரின் கொடுமையால் அனைத்துப் பிரிவுகளும் அழிவடைந்த நிலையில் ஒரு பயத்தை உருவாக்கும் நிலையில் காணப்பட்டன.

இங்கு கடமையாற்றிய அனைத்து தர உத்தியோகத்தர்களும் கஷ்டங்கள், கெடுபிடிகள் மத்தியில் சிரமம் பாராது கடமையாற்றியதன் பலாபலனே இன்று மாடிக் கட்டடங்களைக் கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய வைத்தியசாலையாக காணப்படுகிறது.

அந்த நெருக்கடியான காலகட்டத்தில் பிரதேச மக்களுக்கு சேவையாற்றி இளைப்பாறியுள்ள வைத்தியர்களான ச.அம்பிகைபாகன், திருமதி கு.சிவலிங்கம் ஆகியோரின் பங்களிப்பை சுகாதாரத் துறையினர் என்றும் மறக்க மாட்டார்கள்.

இந்த வைத்தியர்களுடன் பணியாற்றி இளைப்பாறியவர்களுக்கும், தற்போது சேவையாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கும் தென்மராட்சி பிரதேச மக்கள் மட்டுமல்ல சுகாதாரத் திணைக்களத்தினரும் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்பர்.

வளங்கள், வசதிகள் குறைந்த வேளையிலும் தமது அர்ப்பணிப்பான சேவைகளை இங்கு பணியாற்றியோர் வழங்கியதால் இதன் பெயர் இலங்கை முழுவதும் பரவ வழி வகுத்தது. இதன் பயனே இன்று சகல வசதிகளையும் வளங்களையும் கொண்ட நிலையில் இந்த வைத்தியசாலை உள்ளது.

வெளிநாடொன்றின் அனுசரணையுடன் சுகாதார திணைக்கள நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் எஸ். எஸ். செயற்றிட்டத்தில் இந்த வருடம் சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை ஆகிய நான்கு ஆதார வைத்தியசாலைகளுடன் சங்கானை பிரதேச வைத்தியசாலையும் போட்டியிடவுள்ளது.

ஏனைய வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சகல வசதிகளும் பௌதிக வளங்களையும் கொண்டுள்ளது. இங்கு கடமையாற்றுவோரின் செயற்பாடுகளால் தங்கப் பதக்கத்தை இந்த வைத்தியசாலை தேசிய மட்டத்தில் விருதாக பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

இந்த வைத்தியசாலையின் தேவையாக உள்ள சத்திர சிகிச்சைக் கூடம், சமையலறை, வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் வதிவிடங்கள் போன்றவை அமைக்கப்பட்டால் முழு நிறைவான வைத்தியசாலையாகத் திகழும்.

அரச வைத்தியசாலைகளுடன் போட்டி போடும் நிலைக்கு தனியார் வைத்தியசாலைகள் உருவாகி வருகின்றன. ஆயிரம் தனியார் வைத்தியசாலைகள் உருவாகினாலும் அரச வைத்தியசாலையின் சேவைகளே இன்றும் உயர்வாக காணப்படுகின்றன. அதற்கு வைத்திய சாலைகளில் பணிபுரியும் அனைவரின் பங்களிப்பே காரணம்.- என்றார். (வ-9)



கலை இலக்கியத் துறையில் 2012 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது பெற்ற நவாலியூர் நடேசனைப் பாராட்டி நவாலி கிழக்கு முதியோர் சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வேலணை பிரதேச சபையின் செயலாளர் எஸ். ரமேஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (ம-100)

# சிவத்தமிழ் செல்வியின் செயற்பாடு என்னை ஆன்மிக வழிக்குத் தூண்டியது

## தங்கம்மா அப்பாக்குட்டியின் அறக்கொடை நிகழ்வில் தொண்டுநாத சுவாமிகள் உரை

வலி.வடக்கு, ஜன.17

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் செயற்பாடுகளே என்னை ஆன்மிக வழிக்குத் தூண்டின.

நான் சிறுவனாக இருந்த வேளையில் துர்க்கையம்மன் ஆலயத்துக்கு வருவேன். அந்த நேரத்தில் அம்மா ஆற்றிய சேவைகள் என்னை மிகவும் கவர்ந்தன.

இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்காவைச் சேர்ந்த தொண்டு நாத சுவாமிகள்.

தெல்லிப்பழை துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற்ற செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 88 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

நான் அமெரிக்காவில் இன்று வாழ்ந்தாலும் கூட, எனது ஆச்சிரமத்தில் உள்ள மாடுகளின் சாணகங்களை அகற்றுதல், மாடுகளை நீராட்டல் போன்ற பணிகளைத் தற்போதும் மேற்கொண்டு வருகின்றேன். அந்த நாட்டில் 18 வயதுக்கு [illegible] இன்றி இருக்கமாட்டார்கள்.

ஆனால் இங்கு தொழில் புரிய வேண்டிய பல ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தொழிலின்றி வீண் பொழுதைப் போக்குகின்றமை வேதனையான விடயமாக உள்ளது. இந்த நிலைமை நீடிக்கக் கூடாது.

1985 ஆம் ஆண்டில் அமெரிக்கா சென்ற நான் 2002 ஆம் ஆண்டு வரைக்கும் இலங்கைக்கு திரும்ப முடியவில்லை. இந்தக் காலத்தில் இலங்கையில் இருந்து வருபவர்களிடம் நாட்டினதும், அம்மாவினதும் நலனைக் கேட்டறிந்து கொள்வேன்.

நான் வெளிநாடு சென்ற பின்னர் அங்குள்ள மக்கள் ஆற்றிய சேவைகள், செய்யும் உதவிகளைப் பார்த்த பின்னர் நானும் எனது மக்களுக்கும் எள்ளளவான உதவியேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் தூண்டுதலும் ஏற்பட்டது.

இன்றைய காலப் பகுதியில் இந்து சமயத்தவர்களிடையே குருகுல முறை அழிந்து கொண்டு செல்கின்றது. இந்த வகையில் இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமத்தின் குருவானவர் வயது முதிர்ந்தவராகவும் நோய்வாய்ப்பட்டவராகவும் காணப்படுகின்ற போதும் சேவையாற்றி வருகின்றார்.

இந்த நிலையில் அவருக்கு அடுத்து அந்த இடத்தை நிரப்ப யாரும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. இத்தகைய குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படக் கூடாது. இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இந்து சமயத் தலைவர்கள் அனைவரதும் கடமையும் பொறுப்பும் ஆகும்.

இன்று வன்னியில் இருந்து வந்துள்ள நூற்றுக் கணக்கான பிள்ளைகளுக்கு தாயின் முகம் தெரியாது. இது வேதனை தரும் விடயம். தாயைப் படத்தில் பார்த்துத் தான் தெரியும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலத்தில் இருந்த பல இந்து சமய மடங்கள் அழிவடைந்துள்ளன. இத்தகைய நிலைமைகள் ஏற்படக் காரணமாக இருந்தமை மடங்களின் சுவாமிகள் மறைந்ததும் அடுத்தபடி நிலையில் வேறொருவர் இல்லாமையாகும். அதனை பராமரிக்க முடியாத நிலையில் அவை அழிந்துவிட்டன.

கொழும்பில் ஆறு மாத காலம் வாழ்ந்தாலே தமிழை மறந்து விட்டதாகக் கூறிக் கொள்பவர்கள் பலர் உள்ளனர். இவ்வாறான நிலைமை மாற்றப்பட வேண்டும்.

இதேவேளை, வெளிநாட்டில் வாழும் பலர் இன்றும் தமது மொழி, மத, கலாசார பண்புகளுடன் எந்த வகையான மாற்றங்களும் இன்றி வாழ்ந்து வருகின்றார்கள். - என்றார். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை ஒழிப்பில் பங்காற்றும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



பீ.ஏ.அந்தோணிமார்க்

30 வருட போரின் பின்னர் வளர்ந்து வரும் பொருளாதாரம் என்ற வகையில், நீடித்து நிலைநிற்கக்கூடிய செயற்திட்டங்களை முன்வைப்பது மிகவும் முக்கியமாகும். இப்படியான ஓர் உள்நாட்டு சூழலுக்குப் பொருத்தமாக விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பங்களிக்க வேண்டும்.

எதிர்காலத்தில் அபிவிருத்தியில் வெற்றியளிக்கக்கூடிய மாற்றங்கள் வேண்டுமானால், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பயன்தரக்கூடிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். உலக பொருளாதாரம் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ள நிலையில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மக்களின்நன்மைக்காகஓர்அளவுதான் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் பல்வேறு பட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் பயன்படுத்தபடவில்லை. அதே போன்று அதிகப்படியான அரச நிறுவனங்களும் விஞ்ஞானத்தை சரியான முறையில் பயன்படுத்தவில்லை.

விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஓர் உயர்நிலை விஞ்ஞான ஸ்தாபனம் ஒன்றை அமைத்தது. அதுதான் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு. இந்தக் குழுவின் முக்கிய கடமை விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அபிவிருத்தி அடைவதற்கான கொள்கைத் திட்டங்களை வழங்குவதற்கான ஆலோசனைகளை அரசுக்கு வழங்குதலாகும். ஒட்டுமொத்தமாக கூறுவதாக இருந்தால் விவசாயம், மீன்பிடி, சம்பந்தமான தொழில்நுட்ப முயற்சிகளின் தரத்தையும் வெற்றி வாய்ப்பையும் கூட்டுதலாகும். மேலும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் உள்நாட்டில் இருக்கும் சகல வளங்களையும் பயன்படுத்தி அபிவிருத்தியை மேற்கொள்ள உதவி செய்ய வேண்டும். ஆராய்ச்சி செயற்பாடுகள் இந்த நோக்கத்தை அடைவதற்கான வழிவகைகளை காண்பிக்க வேண்டும். இது இந்த நாட்டின் பொருளாதாரத்தில் நேரடியான பங்களிப்பைச் செய்வதுடன், மக்களைப் பாதிக்கும் செயற்பாடுகளை அகற்ற வேண்டும். அயல்நாடுகள் பாரிய அபிவிருத்தியை அடையும்போது, நாங்கள் விஞ்ஞான தொழில்நுட்பங்களைச் சீரான முறையில் பயன்படுத்துவதில் பின்னோக்கியுள்ளோம். நமது நாட்டில், விஞ்ஞானத்துறையில் அர்ப்பணிப்புள்ள பல விஞ்ஞானிகள் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களின் முயற்சி பெரும் வெற்றியளிக்கவில்லை. காரணம் குறிப்பிட்ட நேரத்தில் தேவையான இரசாயன பொருள்களையும், உபகரணங்களையும் பெறுவதில் குறைபாடுகள் காணப்பட்டன. அத்துடன் அனுபவம் உள்ள தகுதி வாய்ந்த விஞ்ஞானிகளின் குறைபாடு, விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துவதற்கு ஓர் தடையாக இருந்து வந்துள்ளது. ஏராளமான விலை கூடிய விஞ்ஞான உபகரணங்கள், விஞ்ஞான ஆய்வு கூடங்களில் பழுதுபட்ட நிலையில் பயன்படுத்த முடியாமல் தேங்கிக் கிடக்கின்றன. விஞ்ஞானிகள் தாம்பெற்ற கல்வியை மற்றவர்களுக்கு பயன்படுத்த வேண்டும். அரச சேவையில் உள்ள உயர் அதிகாரிகளின் முக்கிய கடமை என்னவென்றால், தகுந்த கொள்கைத் திட்டங்களை உருவாக்கி அதன்மூலம் இந்த பட்டதாரிகளை விஞ்ஞான தொழில்நுட்ப முயற்சிகளில் பயன்படுத்துவதாகும்.

திட்டமிடல் அமைச்சு விஷேடமாக மிகவும் கவனமெடுத்து தொழில் நுட்ப விஞ்ஞானத்தில் திறமையான முறையில் பயிற்சி பெற்றவர்களின் சேவையை பெறுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் போது நாட்டின் அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையான விடயங்களை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். தற்போது நம்மிடம் உள்ள அறிவைப் பயன்படுத்தி பல புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். இன்று வெளியேறும் விஞ்ஞான பட்டதாரிகள் முக்கியமான பொறுப்புக்களைப் பாரமெடுக்க வேண்டும். இன்று இலங்கை சந்திக்கும் முக்கியமான சவால் எரிபொருள், சக்தி ஆகியவை சம்பந்தமான ஓர் ஆபத்தான நிலமையாகும். எரிபொருள் வளங்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பமுறைகள் மிகவும் அவசியம். எரிபொருள்களின் அதிகூடிய விலையேற்றத்தினால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்படுவதுடன் சாதாரண மக்களின் தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக வறுமை அதிகரித்துள்ளது. இதை நிவர்த்தி செய்யும் பொறுப்பு விஞ்ஞானிகளையும் அரசாங்கத்தையும் சார்ந்ததாகும். இதுவரை மனிதன் பயன்படுத்திய அனல் மின்சாரம் எரிபொருள் மற்றும் அணுசக்திகளினால் ஓசோன் படலம் மோசமான பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. காற்று, நீர், சூரியஒளி போன்றவற்றைப் பாவித்து தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்து சகல தொழில்களையும் நடத்த முடியும்.எரிபொருளுக்கு பதிலாக மின்சாரம் மூலம் ஓடும் வாகனங்களைப் பயன்படுத்த முடியும். நீர்வீழ்ச்சி மூலம் உற்பத்தியாகும் மின்சாரம், சூரியஒளி மூலம் சோலர் மின்சாரம் காற்றாடி மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் என்பவற்றைப் பயன்படுத்தலாம். உயர் விலையுள்ள எரிபொருள் இறக்குமதி மூலம் சாதாரண எரிபொருளான பெற்றோல், டீசல் இவற்றின் விலை ஏற்றத்துடன் உணவு,பல்வேறு போக்குவரத்து ரயில்கட்டணம் சக்தி போன்ற எல்லா விதமான பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. பல நாடுகளில் பெற்றோலிய பொருள்களுக்காக, பல விதமான மாற்றீடான எரிபொருள்களை பயன்படுத்துகின்றனர். மாற்றீட்டு பொருளாக எதனோல் எனப்படும் உயிர் எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே சகல தரங்களிலும் உள்ள விஞ்ஞானிகளின் கடமை ஒரு மாற்றீட்டு எரிபொருளைக் கண்டுபிடித்து அதை அபிவிருத்தி செய்தலாகும். எங்களது நாடு எரிபொருள்களை இறக்குமதி செய்வதில் தங்கி நிற்கக்கூடாது. இலங்கை ஒரு விவசாய நாடு. நமக்கு தேவையான உணவு வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும். காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு போன்ற அடிப்படை போஷாக்கு உணவுகள் நமது தேவைக்கு போதுமானவையாக இல்லை. பொதுவாக எம்மிடம் இருக்கும் உணவு நுகர்வு [illegible] மானதல்ல. உணவு [illegible] குறைக்கான காரணம், உணவு உற்பத்திக்கு ஏற்படும் உயர் உற்பத்திச் செலவாகும். இதற்கு காரணம் உரம், கிருமிநாசினிகளுக்கு ஏற்பட்டுள்ள உயர்உற்பத்தி செலவாகும். நைதரசன் கலந்துள்ள உர வகைகளை இறக்குமதி செய்வதற்கு 40 கோடி ரூபா வருடா வருடம் செலவு செய்யப்படுகின்றது. மாற்று மருந்தாக நைதரனை உற்பத்தி செய்யும் கணுக்களுள்ள தாவர வர்க்கங்களைப் பயிரிடுவதன் மூலம் அமோனியம் சல்பேற், யூரியா போன்ற உரங்களின் இறக்குமதியைக் குறைக்கலாம். தாவர இயல் விஞ்ஞானிகளால் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி 30 சத வீதமான நைதரசன் தேவைகள் உள்நாட்டிலே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறியக் கிடக்கின்றது. 30 வருடங்களுக்கு முன்பு அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள எப்பாவெல என்னும் கிராமத்தில் பொஸ்பரஸ் உரமுள்ள தாது பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனாலும் உர இறக்குமதி குறைக்கப்பட்டுள்ளது. பூச்சி கொல்லிகளை இறக்குமதி செய்வதற்கு ஒரு கோடி ரூபா வரையும் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நமது நாட்டில் பூச்சிகளை அழிப்பதற்கும் பல மாற்றீட்டு முறைகள் உள்ளன. பூச்சிகளைக் கொல்லக்கூடிய மருந்துகள் உள்ள தாவரங்கள் உண்டு. நிக்கெட்டின் (புகையிலை) வேம்பு போன்ற வேறு பல தாவரங்களும் இலங்கையில் உண்டு. இவற்றை பயன்படுத்துவதன் மூலம் பூச்சிகளால் ஏற்படும் நோய்களைத் தடுக்கலாம். இதனால் கிராமங்களில் பலருக்கு வேலைவாய்ப்புகளும் ஏற்பட இடம் உண்டு. மேலும் பூச்சிகளை வேறுவகைப் பூச்சிகளைக் கொண்டு வந்து அழிக்கும் முறைகளும் உண்டு. வெளிச்சங்கள், லாம்புகள் வைத்து அவற்றின் மூலம் பூச்சிகளை அழிக்கும் முறைகளும் உண்டு. விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் இன்னும் பல முறைகளைக் கண்டுபிடிக்க வாய்ப்புண்டு. வருடத்தில் வறட்சிக் காலமாக கணிக்கப்படும் 4-5 மாதங்களில் வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1750 மில்லி மீற்றராகும். சில வருடங்களில் மழையே பெய்வதில்லை. இதனால் பெரிய பயிர்ப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதை நிவர்த்தி செய்து வெற்றி பெற வேண்டுமாயின் நீர்ப்பாசன தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். வறண்ட வலயத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சிறு குளங்கள், பலவிதமான அளவுப் பிரமானங்களில் உள்ளன. வாய்க்கால் மூலம் நெற்பயிருக்கு நீரை பாய்ச்சுகின்ற வீடுகளிலும் தொட்டிகளிலும் மழைத் தண்ணீரை சேகரிக்கும் முறை அதை பாய்ச்சும் முறை என்பன தண்ணீர்தட்டுப்பாட்டை ஓர் அளவுக்கு நீக்கியுள்ளது. பலநூற்றாண்டுகளாக உலகம் மழையை நம்பித்தான் வாழ்ந்தது. இந்த மழை நீர் வீட்டுத் தோட்டங் களுக்கு காணி [illegible] விருத்திக்கு [illegible] படுத்தப்படுகிறது.

நகரங்களில் நீர்ப்பாசன முறைகள் ஆரம்பிக்க முன்னர் வீட்டுக் கூரைகளில் இருந்து வரும் தண்ணீரைச் சேமித்து அவை தேவைகளுக்கேற்ப பயன்படுத்தப்பட்டன. மழைநீர் மூலம் சுத்தமான தண்ணீரை மக்கள் பெறுகிறார்கள். கிராமப்புற மக்கள் தமக்குத் தேவையான தண்ணீரை ஆறுகள், குளங்கள், ஓடைகள் ஆகியவற்றில் இருந்து பெறுகிறார்கள். கிராமங்களில் பல கிணறுகள் உள்ளன. ஆனால் அவை பாதுகாப்பற்றவைகளாக காணப்படுகின்றன. வறட்சியான காலங்களில் நீரைத் தூர இடங்களில் இருந்து பெறவேண்டும். இந்த நீரின் தரம் சிறந்ததல்ல. இதனால் வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவிவருகின்றன. குழந்தைகள் இதனால் வெகுவாகப் பாதிப்படைகிறார்கள். சில கிராமங்களில் குழாய்க்கிணறுகள் உண்டு. இவை உவர்நீராகவும் அல்லது வேறு வஸ்துக்கள் கலந்த நீராகவும் உள்ளன.இவை சிறு நீரக வியாதிகளை ஏற்படுத்துகின்றன. ஆனாலும் கிராமங்களில் போதிய வருவாய்களை பெற வாய்ப்புண்டு. கிராம மக்கள் வறுமையினால் பாதிக்கப்படுகிறார்கள். 80 வீதமான மக்கள் மிகவும் வறியவர்கள். இவர்கள் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள். 20 வீதமானவர்கள் ஓர் அளவு வறுமையினால் பாதிக்கப்பட்டவர்கள். வறுமையை ஒழிக்க விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாரிய பங்களிப்பை செய்ய வேண்டும். மற்றும் சிறிய, இடைத்தர தொழில் முயற்சிகளானவை எந்தப் பொருளாதாரத்திலும் இதயமாக இருக்கும் அதே வேளை இலங்கையிலுள்ள கிட்டத்தட்ட 80-90 வீதமான தனியார் தொழில் முயற்சிகளானவை சிறிய மற்றும் இடைத்தர தொழில் முயற்சிகளாக உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதிகமாக இலங்கை மாகாணங்களில் மேல் மாகாணம் தவிர, பொருளாதார செயற்பாட்டின் முதுகெலும்பாக இருப்பது இந்த சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளாகும். உள்ளூர் கிராமிய பொருளாதாரங்களை வளர்ப்பதில் மிகவும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நாட்டுமக்கள் அனைவரினதும் தார்மீக கடமையாகும். "ஹமிடிரிய" "ஹம நெகும, மக நெகும, அப்பி வகமுகறட்ட நகமு, அத்துடன் மிகவும் அண்மையில் "திவிநெகும" போன்ற நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சி திட்டங்கள் ஊடாக உள்ளூர் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை நாம் வளர்க்க முடியும்.

மேலும் பலமான தேசிய நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்கான தேவை உள்ளதுடன் அந்த நிகழ்ச்சி நிரலானது நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார கிராமிய செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டும். இலங்கையில் ஒரு சிறிய திறந்த பொருளாதாரம் என்ற முறையில் உள்நாட்டு வளர்ச்சியை பேணுவதற்கு அதன் பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியை பெருக்குவதற்கான முயற்சிகளை எடுக்க சகலரும் முன்வரல் வேண்டும். நமது நாட்டின் இறக்குமதி செலவினங்களுக்காக வெளிநாட்டு செலாவணியை சம்பாதித்துக் கொள்ளக்கூடிய நிலையுண்டு. பண்டங்கள், சேவைகளை அதிக அளவிற்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் நன்மை அடைய இடமுண்டு. முக்கியமாக தேயிலை, இறப்பர் போன்றவையும் ஆடைகளும் ஏற்றுமதி வருமானத்தை சம்பாதிக்கின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் மிகவும் கூடிய வருமானம் கிடைக்கின்றது தரமான அரிசி ஏற்றுமதி செய்யக்கூடிய குளங்களை அண்டிய நெல் உற்பத்தி செய்யும் பிரதேசத்தை வடகிழக்கு மாகாணத்தில் தான் ஊக்குவிக்க வேண்டும். சிறந்த பப்பாசி, மா, பலா போன்ற பழமரங்களும் உண்டு. பழ ஏற்றுமதி போதிய வருமானத்தை தரக்கூடியது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதி சந்தைகளாக அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் விளங்குகின்றன. கடல் உணவு ஒரு சிறந்த சத்துள்ள உணவு. புரதம் கூடியது. இலங்கையின் கடல் உணவு வருமானம் அதிகரிக்க வேண்டுமாயிருந்தால், சட்ட விரோதமாக இலங்கை கடல் பரப்பில் நுழைந்து மீன்பிடிக்கும் இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்து மீறலை உடன் நிறுத்த வேண்டும். இந்திய மீனவர்களின் மீன் பிடி முறையானது கடல் வளங்களை அடியோடு அழிக்கும் யந்திர மூலம் பிடிக்கும் நுண் துவார வலைகளைக் கொண்டது. அத்துடன் வட கிழக்கு மாகாணத்தில் ஊடுருவும் பெரும்பான்மை சமூகத் தின் அதி நவீன யந்திர படகுகளையும் நிறுத்த வேண்டும். வடகிழக்கு மாகாண மீனவர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது இலங்கை அரசின் கடமையாகும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் கல்வி ஒரு முக்கியமான வகிபாகமாகும்.கல்வி நிலையங்கள் , உயர் தொழில் நுட்ப நிலையங்கள், சர்வகலாசாலைகள் சகல மாகாண மாவட்டங்களுக்கும் சமனாக பகிரப்படவில்லை. இறுதியாக எடுத்த மதிப்பீடுகளின் படி முல்லைத் தீவிலும், வவுனியாவிலும் ஒவ்வொரு 400 கி.மீ.க்கு ஒரு விஞ்ஞான பாடம் உள்ள பாடசாலையும், மன்னாரில் ஒவ்வொரு 200 கி.மீ ஓர் விஞ்ஞான உயர்தர பாடசாலையும் உள்ள நிலையில் கொழும்பில் ஒவ்வொரு 10 கி.மீக்கும் கம்பஹாவில் ஒவ்வொரு 25 கி.மீற்றருக்கும் இது உள்ளது. அத்துடன் கிளிநொச்சி யில் உள்ள பாடசாலைகளில் 80 வீத மாணவை விஞ்ஞான ஆய்வு கூடங் களைக் கொண்டிருக்கவில்லை யெனவும் தெரிய வருகிறது. இதன் இறுதி முடிவு என்னவென்றால் கிராமப்புற பாடசாலைக்ளில் விஞ் ஞானக் கல்வி குறைவுபடுவதனால் அபிவிருத்தியில் விஞ்ஞா னமும் தொழில்நுட்பமும் பயன் படுத்த முடியாத ஒரு துர்பாக்கிய நிலையுண்டு.ஒட்டுமொத்தமாக 2015 ஆம் ஆண்டு முடியமுன்பு வறுமை ஒழிக்க வேண்டுமென்ற ஐக்கிய நாட்டு மிலேனியம் அபி விருத்தி இலக்கை ஒரு முக்கிய கருப்பொருளாக பயன்படுத்தி னால் வறுமையை ஒழிக்க முடியும். ஐ.நா மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளில் எட்டு இலக்குகள் உண்டு. அவற்றில் சில முக்கியமானவை

உச்சக்கட்ட வறுமையையும் பட்டினியையும் அகற்றுதல், சர்வதேச தர அடிப்படையில் கல்வியை அடைதல், சுற்றாடலை பாதுகாத்தல், அபிவிருத்திக்கான உலகளாவிய பங்களிப்பை மேம்படுத்தல்.

எனவே நமது நாட்டின் குடிமக்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டில் உள்ள சகல வளங்களையும் பயன்படுத்திப் பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்தி வறுமையைப் போக்குவது நமது தலையாய கடமையாகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதித்துறை மீதான இடையூறு அரசியல் பூமியதிர்வுக்கே வழிவகுக்கும்

தமிழில்: வி.எஸ்.ரி.
மூலம்- மவ்பிம (13.01.2013)

மொஹமட் நஜீட், ஜனாதிபதி மஹிந்தவின் மிக நெருங்கிய நண்பர். மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியான மொஹமட் நஜீட், இன்று சிறைவாசம் அனுவிக்கிறார். மாலைதீவின் பிரதம நீதியரசரரைக் கைது செய்து சட்ட விரோதமான விதத்தில் சிறைத் தண்டனை வழங்கியமையே மொஹமட் நஜீட் இன்று சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்துள்ளமைக்கான காரணமாகும்.

முன்னாள் மாலைதீவு ஜனாதிபதியான அப்துல் கயூம் மாலைதீவை நிர்வகித்த வேளையில், மொகமட் நஜீட் வெளிநாடொன்றில் அரசியல் தஞ்சம் பெற்று வாழ்ந்து வந்தார். அந்தக் கால கட்டத்தில் அவர் அடிக்கடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அந்த வேளையொன்றிலேயே மஹிந்த ராஜபக்ஷவுடன் மொஹமட் நஜீட்டுக்கு அறிமுகம் ஏற்பட்டது. அந்த வேளையில் மஹிந்த ராஜபக்ஷ , பிரேமதாசாவின் தலைமையிலான அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் குறித்து குற்றம் சுமத்தி நாடளாவிய ரீதியில் பொது மக்களது கவனத்தை ஈர்த்து வந்தார். அதே வேளை மொஹமட் நஜீட்டும், உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூமின் தலைமையிலான அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச நாடுகளுக்கு எடுத்து விளக்கி வந்தார். 1994 ஆம் ஆண்டில் அரசில் அமைச்சர் பதவியொன்றை ஏற்ற பின்னரும் கூட, மஹிந்த ராஜபக்ஷ, மொஹமட் நஜீட்டுக்கு பல வகைகளில் உதவி வந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றது 2005 ஆம் ஆண்டிலாகும்.

மொஹமட் நஜீட் கூட மாலைதீவின் ஜனாதிபதியாகப்பதவி ஏற்றமை 2008 ஆம் ஆண்டிலாகும். மாலைதீவின் மக்கள் கிளர்ச்சியொன்றையடுத்தே அந்த நாட்டின் ஜனாதிபதியாக அவர் பதவி ஏற்றார். இதன் காரணமாக அவ்வேளையில் அவர் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டார்.

### ஜனாதிபதி மொஹமட் நஜீட்டின் பொய்முகம்

ஆனால் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதன் பின்னர், மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மொஹமட் நஜீட்டின் பொய்முகம் வெளிப்பட்டது. தமக்கெதிராக மாலைதீவின் எதிர்க் கட்சிகள் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்தபோது, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கயூமின் செயற்பாடுகள் அவருக்கு ஞாபகத்தில் உறைந்தன. அப்துல் கயூம் முன்னர் தமக்கு எதிராக மேற்கொண்ட கடும் நடவடிக்கைகள் போன்று, தாமும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்தார்.

2011 ஆம் ஆண்டில் மாலைதீவின் குடிசார் அமைப்புக்கள் அந்நாட்டின் அரசியல் கட்சிகளையும் தம்முடன் இணைத்துக் கொண்டு மொஹமட் நஜீட்டுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தன. ஆனால் அப்துல் கயூமையோ, அவரது கட்சியைச் சேர்ந்தவர்களையோ அத்தரப்பினர் தம்முடன் இணைத்துச் செயற்படுவதைத் தவிர்த்துக் கொண்டனர்.

அவ்விதம் குடிசார் அமைப்புக்கள் ஜனாதிபதி மொகமட் நஜீட்டின் தலைமையிலான அரசுக்கு எதிராக ஒன்று திரண்டு செயற்பட்ட வேளை, 2008 ஆம் ஆண்டில், மொஹமட் நஜீட் ஜனாதிபதி பதவியைப்பெற ஆதரவளித்த கட்சிகளும், அவருக்கு எதிராக செயற்பட்டு வந்த குடிசார் அமைப்புக்களுடன் இணைந்து கொண்டன.

2011 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்தில் எதிரணியின் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து ''மத்த சானி இன்ஹாட்'' என்ற பெயரில் ஜனாதிபதி மொகமட் நஜீட்டின் ஆட்சிக்கு எதிராக கூட்டணி அமைத்துச் செயற்பட்டன. அந்தக் கூட்டணிக்கு ஒருவர் மட்டுமே தலைமை வகிக்கவில்லை. பல தலைவர்களை ஒன்றிணைத்த கூட்டு மக்கள் அமைப்பாக அது அமைந்தது. 2008 ஆம் ஆண்டில் மொகமட் நஜீட்டுக்கு ஆதரவாகச் செயற்பட்ட மூன்று கட்சிகளும் கூட இந்த மக்கள் அமைப்பில் அங்கம் வகித்தன. 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதியன்று இந்த மக்கள் அமைப்பு, ஜனாதிபதி மொஹமட் நஜீட்டின் அரசுக்கு எதிராக மாலைதீவின் தலைநகரில் மாபெரும் ஆர்ப்பட்டமொன்றை மேற்கொண்டன. அந்த மக்கள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் ஜபீல் அஹமட்டை பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு பல தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டதையடுத்து பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற அவரைப் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்தனர். ஆனால் சட்டபூர்வமற்ற விதத்தில் கைது செய்யப்பட்ட ஜபீல் அஹமட்டை விடுதலை செய்யுமாறு அந் நாட்டின் பிரதம நீதியரசர் உத்தரவிட்டார். பிரதம நீதியரசரின் அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டாமெனப் பொலிஸாருக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி மொஹமட் நஜீட், உடனடியாகப் பிரதம நீதியரசரைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். பிரதம நீதியரசரைக் கைது செய்வித்து அவருக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டொன்றையும் முன் வைத்து நீதிமன்றத்தில் வழக்கொன்றை ஜனாதிபதி மொஹமட் நஜீட் தாக்கல் செய்தார். ஆனால் அந்தநாட்டின் உயர்நீதி மன்றமோ பிரதம நீதியரசரைச் சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்யுமாறு தீர்ப்பளித்தது. நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பை ஏற்குமாறு அந்நாட்டின் எதிர்க்கட்சிகள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், சர்வதேச நீதித்துறை அமைப் புக்கள், ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவை போன்றவை ஜனாதிபதி மொகமட் நஜீட்டுக்கு அழுத்தம் கொடுத்த போதிலும் மொகமட் நஜீட் அந்தக் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவில்லை.

### பொலிஸாரும் படையினரும் கூட எதிர்ப்பாளர்களுடன் இணைவு

அத்தகைய நிலையில், பிரதம நீதியரசரை விடுதலை செய்யும் வரை தொடர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதென எதிர்க்கட்சிகள் தீர்மானித்தன. தொடர்ச்சியாக 22 நாள்களாக எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. நாளுக்கு நாள் நாட்டின் பொது மக்களும் ஆர்ப்பரட்டங்களில் இணைந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை அடித்துக் கலைக்குமாறு ,மொகமட் நஜீட் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். நீதித்துறைக் கெதிரான நஜீட்டின் செயற்பாட்டால் அதிருப்தி கொண்ட பொலிஸ் துறையினர், நஜீட்டுக்கு ஆச்சரியம் ஏற்படும் விதத்தில் தாமும் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டனர். இதனால் ஆத்திரமுற்ற ஜனாதிபதி மொகமட் நஜீட், கலகக்காரர்களை அடக்குமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டார். அரசு என்பது காலத்துக்குக் காலம் பதவிக்கு வரவும், பதவி இழக்கவும் நேரிடும் ஒரு அதிகாரத் தரப்பெனவும், அரசுக்கு மேலாக தாம் நாட்டின் நீதித்துறையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்களெனவும் கூறிய இராணுவ அதிகாரிகள் கலகக்காரர்களை அடக்க மறுப்புத் தெரிவித்தனர்.

அதனையடுத்து எதுவும் செய்ய இயலாத நிலையில் ஜனாதிபதி மொஹமட் நஜீட், தனது ஜனாதிபதி பதவியைத் துறக்கத் தீர்மானித்தார். தமது பதவியைத் துறந்ததும் அவர் கைது செய்யப்படவுள்ளதாகச் செய்தி பரவியது. அந்த வேளையில் தனது நெருங்கிய நண்பரான ஜனாதிபதி மஹிந்தவின் உதவியை நாடினார் மொஹமட் நஜீட். ஜனாதிபதி மஹிந்தவும், மொகமட் நஜீட்டின் பதவி துறப்பையடுத்து ஜனாதிபதியாகப் பதவி ஏற்கவிருந்த 'வஜீட்' டுடன் தொடர்பு கொண்டு மொகமட் நஜீட்டைக் கைது செய்ய வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார். அத்துடன் மொஹமட் நஜீட்டின் மனைவி மற்றும் பிள்ளைகள் இலங்கையில் அரசியல் தஞ்சல் கோருவதாகவும், தாம் அவர்களுக்கு உதவவுள்ளதாகவும் அறிவித்தார். அதனையடுத்து, மறு நாளே மொஹமட் நஜீட்டின் மனைவியும் பிள்ளைகளும் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர்.

நீண்ட நாள்கள் கழியும் முன்னரே பிரதம நீதியரசரைச் சட்டபூர்வமற்ற வகையில் கைது செய்ததான குற்றச்சாட்டின் பேரில் மொஹமட் நஜீட் கைது செய்யப்பட்டார். தற்போது அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட, மொகமட் நஜீட் தம்மால் புறக்கணிக்கப்பட்ட நீதிமன்றத்தையே நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### தீவிரமடையும் இலங்கையின் நீதித்துறைச் சிக்கல்

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கணக்கில் எடுக்காது பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றிக் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஜீட்டிடம் கற்றுக்கொள்ளத்தக்க பாடங்கள் பலவுண்டு. பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணையொன்றை முன் வைக்கப் போவதாக அச்சுறுத்தினால், பிரதம நீதியரசர் தமது பதவியிலிருந்து தாமாக வெளியேறி விடுவார் என அரசு ஆரம்பத்தில் எண்ணியது. ஆனால் பிரதம நீதியரசர் அந்த அச்சுறுத்தலைக் கணக்கில் கொள்ளவில்லை. பின்னர் குற்றவியல் பிரேரணையைப் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களது கையொப்பத்துடன் சபாநாயகரிடம் கையளித்ததையடுத்து, பிரதம நீதியரசர் அச்சமுற்றுத் தமது பதவியை ராஜினாமாச் செய்து விடுவார் என அரசு எண்ணியது. அதனையும் பிரதம நீதியரசர் பொறுமையுடன் அவதானித்தாரேயன்றி பதவியிலிருந்து விலகிக் கொண்டாரில்லை. குற்றவியல் பிரேரணை குறித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுமுன் முன்னிலையாகுமாறு கோரப்பட்டதையடுத்தாவது அவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளக் கூடுமென அரசு கணக்குப் போட்டது. ஆனால் அவரோ நாடாளுமன்றத் தெரிவுக் குழுமுன் முன்னிலையாகி, விசாரணைகளில் தமக்கு உரிய நீதி கிட்ட இடமில்லையெனத் தெரிவித்து அதிலிருந்து வெளியேறினார். நாடாளுமன்றில் தமக்கெதிரான குற்றவியல் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் பிரதம நீதியரசர் தமது பதவியைத் துறந்து வெளியேறி விடுவார் என அரசு பின்னர் நம்பியது. தற்போது குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து ஜனாதிபதி புதிய பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்கும் போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவியை விட்டு வெளியேற நேரிடுமென்ற புதிய நிலைமைக்கு முகம் கொடுத்து, ஏனைய நீதியரசர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் புதிய பிரதம நீதியரசருடன் ஒத்திணைந்து செயற்பட முன்வருவரென தற்போது அரசு எண்ணுகிறது.

ஆனால் புதுக்கடை உயர் நீதிமன்ற வளாகத் தரப்போ புதிய நீதியரசர் ஒருவரைத் தாம் வரவேற்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளது. தற்போதைய நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவைப் பதவியிலிருந்து அகற்ற கொண்டு வரப்பட்ட குற்றவியல் பிரேரணை நடவடிக்கைகள் சட்டபூர்வமற்றவை என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமையால், ஷிராணி பண்டாரநாயகாவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து விலக்க இயலாது என்பது அத்தரப்பினர் முன் வைக்கும் வாதமாகும்.

அத்தகைய நிலையில் புதிய பிரதம நீதியரசரொருவரை நியமிப்பதே சட்டபூர்வமற்றதொரு செயற்பாடாகும். புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டு, அவர் தமது பதவியில் அமர்ந்து வழக்குகளை விசாரணை செய்ய நேர்ந்தால், அத்தகைய விசாரணை மற்றும் அதற்காக வழங்கும் தீர்ப்பு சட்ட பூர்வமற்றது என சம்பந்தப்படும் தரப்பினர் நீதிமன்றத்தை நாட இயலும். ஏனெனில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவைப் பதவியிலிருந்து அகற்றுவதும், புதிய பிரதம நீதியரசரொருவரை நியமிப்பதும் சட்டவிரோதமானதொரு செயற்பாடு என்பதனால் ஆகும். அத்தகைய நிலையில் புதிய பிரதம நீதியரசரது தீர்ப்பு மட்டுமன்றி, நீதித்துறையே கேலிக்கு இடமாக இடமுண்டு- இதுவோர் சாதாரண கேலியாகவன்றி இந்தநாட்டின் சகல இனத்தவரையும் வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் கேலியொன்றாகவே அமையக் கூடும்.

நீதித்துறையின் செயற்பாட்டுக்கு இடையூறு மேற்கொள்வது, பூமி அதிர்வொன்று ஏற்படுவதற்கு ஒப்பானதொன்றாகுமென அரசமைப்புச் சட்ட வல்லுநரான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா 1979 ஆம் ஆண்டில் ஒரு சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். அந்த அடிப்படையில் நோக்கும் போது, இலங்கை என்ற ஓர் அரசைத் தாங்கி வைத்துள்ள மூன்று தூண்களான நிறைவேற்று அதிகாரம், அரசமைப்பு மற்றும் நீதித்துறை என்பனவற்றைச் சரித்து வீழ்த்தும் பெரும் பூமி அதிர்ச்சியொன்றே, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவைப் பதவியிலிருந்து அகற்றிவிடும் அரசின் முயற்சியாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச் சோர்வு

'' வர வர என்னிலேயே எனக்கு நம்பிக்கை இல்லை சேர் !'' என்று ஒருத்தர் சொன்னார்...

'' சரி...சேர் வேதாந்தியா ஆகிவிட்டார் போல இருக்கு'' என்று நாம் நினைக்கக் கூடாது.

அவருக்கு தன்னம்பிக்கை குறைய ஆரம்த்து விட்டது என்று அர்த்தம். அது மிக ஆபத்து. அதை அப்படியே விட்டுவிடக் கூடாது. உடனடியா பரிகாரம் தேட வேண்டும்.

பலபேருக்கு மனம் சுலபமாக ஓய்ந்து போய் விடும். எதைப் பார்த்தாலும் அலுப்பாய் இருக்கும், அயர்வாக இருக்கும். எதிலும் கலந்து கொள்வதில் ஓர் உற்சாகம் இல்லை. மனச்சோர்வு வந்துவிடும்.

மனச்சோர்வு தீர்வதற்கு மருந்து என்ன?

மருந்து கடையில் இல்லை... எங்களிடம் தான் இருக்கின்றது.

கடையிலே போய் இதற்கு மருந்து கேட்டீங்களானால் அங்கே உட்கார்ந்திருப்பவர் '' உங்களிடம் இருந்தால் எனக்கும் கொஞ்சம் கொடுத்து விட்டுப் போங்களேன்'' -என்பார் பார்! ஏன்... அவ்வளவு 'கேள்வி' சரி.. நான் விஷயத்துக்கு வர்றேன். சுலபமாக முடியக்கூடிய காரியம்தான். கொஞ்சம் முயற்சி பண்ணிப்பார்ப்போமே.

ஆள்பாதி-ஆடை பாதி என்று சொல்கிறோம்.. அதுகூட சரியானதல்ல... ஆள் கால்- ஆடை முக்கால், இதுதான் சரி...

''நல்ல துணிமணிகள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவுகின்றன'' என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர். அதனாலே முடிந்த அளவுக்கு நல்லா உடையணிய வேண்டும். நிறைய விடயங்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அது உபயோகப்படுகிறதா இல்லையா என்பதைப்பற்றி கவலை இல்லை. அது தன்னம்பிக்கையை வளர்க்கும் என்று ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபணமாகி உள்ளது. ஒவ்வொரு நாளும் புதுசா ஒரு விடயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு சபதம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒரு முக்கிய விடயம்.

உங்களை யாராவது அலட்சியமா நினைக்கிறது மாதிரி தெரிகிறதா?

அவர்கள் பக்கம் தலைவைத்துக்கூட படுக்கவேண்டாம்.


உங்களை யாராவது மட்டம் தட்டுகிறார்களா...உங்கள் மனம் சோர்ந்து போகிறமாதிரி யாராவது நடத்துறாங்களா..

அவர்களையெல்லாம் உதறித்தள்ளுங்கள். இரக்கமே காட்டாதீர்கள். என்ன சேர் அவர்கள் மட்டும் உயர்ந்தவர்கள்... எல்லாரும் ஒரே மாதிரிதான் இந்த உலகத்திலே பிறந்திருக்கிறோம். அதனாலே அலட்சியப்படுத்துறவங்களை மனசார அலட்சியப்படுத்திப் பாருங்கள். அப்புறம் நீங்கள் தான் ராஜா.

உங்களுக்கே பிடிக்காதது ஏதாவது உங்களிடம் இருக்கிறது தெரிகிறதா? பரவாயில்லை..உடனே ஒதுக்கித் தள்ளுங்கள் அதை.

உங்கள் எடையைக் குறைக்கவேண்டுமா? உடற்பயிற்சி ஆரம்பிக்க வேண்டுமா? குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமா?

எதுவாக இருந்தாலும் உடனே நடவடிக்கை எடுங்கள் ஒத்திப்போட வேண்டாம்.



உங்களை வேதனைப்படுத்துகின்ற விடயம் எதுவாக இருந்தாலும் சரி அதைப்பற்றி பேசுவதை உடனே நிறுத்துங்கள்.

உங்களாலே சீர்செய்ய முடியாதது சில இருக்கும்.. அதையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொள்வது தான் நல்லது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 23 வருடங்களின் பின் மீள ஆரம்பிக்கப்பட்ட அல்லைப்பிட்டி றோ.க.பாடசாலை



**லக்ஸ்மன்**

நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக சேதமடைந்து கிடந்த அல்லைப்பிட்டி றோ.க.பாடசாலை மீண்டும் புனரமைக்கப்பட்டு 02.01.2013 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எனினும் உத்தியோகபூர்வ ரீதியாக நேற்று புதன்கிழமையே திறந்து வைக்கப்பட்டது. அல்லைப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலை இதுவாகும்.

இது ஆரம்பிக்கப்பட்ட வருடம் எது என்பதைச் சரிவரக் கூறக்கூடியவர்கள் இப்போது அங்கே இல்லை. எனினும் தற்போது அங்கேயுள்ள சுமார் 75-80 வயது மிக்க முதியவர்கள் தங்களது பாட்டனார்கள் இங்கே படித்ததாகக் கூறி நினைவுபடுத்திக் கொள்கிறார்கள்.

இதன் ஆரம்பகாலம் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேல் என்பதால் 1863 இல் இந்தப் பாடசாலை அல்லைப்பிட்டியின் முதலாவது பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்பதே முதியவர்களின் கருத்தாக உள்ளது.

முன்னர் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் ஆண்டு ஐந்து வரை இப்பாடசாலையில் கல்வி கற்றதாகவும், பொதுக்கல்வியுடன் மறைக்கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வந்ததாகவும் மூத்தோர் கூறுகின்றனர்.

இந்தப் பாடசாலையின் தலைமை ஆசிரியர்களாக பலர் பணியாற்றிய போதும் அல்லைப்பிட்டியின் இன்றைய மக்களின் நினைவில் நிற்பவர்கள் பாடசாலையின் முதல் கடமை ஆசிரியர் அத்தனாசியார் உட்பட திருமதிகள் நேசம்மா மார்க்கிரட் செல்லக்கண்டு, லோப்பையா, தேவராசா நிக்கிலஸ், மாட்டின் பிலிப்பையா, தேவராசா ஆகியோருடன் இறுதியாகக் கடமையாற்றியவர் திருமதி வாமதேவன் ஆகியோரே.

> இதன் ஆரம்பகாலம் நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேல் என்பதால் 1863 இல் இந்தப் பாடசாலை அல்லைப்பிட்டியின் முதலாவது பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்பதே முதியவர்களின் கருத்தாக உள்ளது.

முதலில் கடமையாற்றிய தேவராசா தலைமை ஆசிரியரின் காலத்தில் இங்கு தரம் ஏழு வரை வகுப்புகள் இருந்துள்ளதாகவும், மாண வர்கள் படிப்படியாக யாழ்ப்பாணம் சென்று கல்வி கற்பதில் ஆர்வம் காட்டியதால் மீண்டும் தரம் ஐந்து வரை வகுப்புகள் நடைபெறவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டின் பின் இந்தப்பாடசாலையின் இயக்கம் முழுமையாக நின்று விட்டது. மீள் குடியேற்றம் இடம்பெறத் தொடங்கியதும் அல்லைப்பிட்டிக்கு வந்த மக்கள் மிகவும் குறைந்த அளவினரே. அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டதும் அனைத்து மாணவர்களும் தமது கல்வியை பராசக்தி வித்தியாலயத்தில் தொடர்ந்தனர். இதனால் றோ.க. பாடசாலை சேதமுற்று கைவிடப்பட்ட நிலையில் இன்று வரை சுமார் 23 வருடங்களாக இருந்துள்ளது.

ஒரேயொரு ஆசிரியருடனும், நூற்றுக்கும் அதிகமான மாணவர்களுடனும் இயங்கி வந்த இந்தப் பாடசாலையில் அப்போதெல்லாம் மண்கும்பான் போன்ற சூழவுள்ள கிராமங்களில் இருந்தும் மாணவர்கள் கல்வி பயின்றனர். ஒரு சிறந்த கல்விக்கூடமாக விளங்கிய இந்தப் பாடசாலை இன்று மூடப்பட்டுக் கிடப்பது உகந்தது அல்ல என்பதாலும், இந்தப் பாடசாலையை மீளத் திறக்க வேண்டும் என்பதில் மக்கள் ஆர்வம் கொண்டிருந்தனர்.

அல்லைப்பிட்டி பங்குத் தந்தை அருட்திரு.ஸ்ரனிஸ்லெஸ் பிலிப், தீவக வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் இந்தப் பாடசாலையை மீளமைப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டிருந்தனர்.

முன்னைய வலயக்கல்விப் பணிப்பாளரின் முயற்சியும், தற்போதைய வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.குயின்ரஸ் எடுத்த துரித நடவடிக்கையும் இதன் ஆரம்பத்திற்கு மிகவும் இன்றியமையாததாக இருந்துள்ளது. இதை அங்குள்ள மக்களும் உறுதிப்படுத்துகிறார்கள்.

மீளமைப்பதற்கு ஏதுவாக பாடசாலை அபிவிருத்திச்சபையும், அதிபராக நியமிக்கப்பட்டுள்ள என்.பத்மநாதன் தலைமையில் அமைக்கப்பட்டது. உடனடியாகவே சேதமடைந்த கட்டடம், காணி என்பன துப்புரவு செய்யப்பட்டதுடன், பாடசாலைக்குச் செல்வதற்கான வீதியும் அமைக்கப்பட்டது. தேவையான மணல் வழங்க வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் உரிய ஏற்பாடுகளைச் செய்துதவினார். இதனையடுத்து அடுத்து அல்லைப்பிட்டி கிராம அலுவலர், பொதுமக்களின் பங்களிப்புடன் சிரமதானப்பணிகள் ஊடாக இந்த வேலைகளை நிறைவேற்ற உதவியுள்ளார். சேதமடைந்த பாடசாலைக் கட்டடத்தை புனரமைக்கவும், புதிய கட்டடத்தை அமைக்கவும் யுனிசெப் ரூபா ஐந்து லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் நிலம் எப்போது கிடைக்குமோ அன்றுதான் உண்மையான தைத்திருநாள்

## அரியநேத்திரன் எம்.பி.கூறுகிறார்



மட்டக்களப்பு,ஜன.17

தமிழர்களின் நிலம் முழுமையாக எப்போது அவர்களின் கைகளில் வருகின்றதோ அன்றுதான் உண்மையான தைத்திருநாளாக அமையும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பிளாந்துறை சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் உழவர் திருநாளான தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றோம். ஆனால் தற்போது உழவர்களின் நிலங்களில் இராணுவ முகாம்கள்அமைக்கப்படுகின்றன.

நிலத்தை மீட்கும் போராட்டம் 60 வருடங்களாக நடைபெற்று வருகின்றது.

எனவே எமது இலட்சியம் எப்போது நிறைவேறுகின்றதோ அப்போதுதான் தமிழ் மக்களின் மனங்களில் உண்மையான உழவர் தினமான தைத்திருநாள் மலரும்.

உழவர்களின் நிலம் உழவர்களுக்கே கிடைப்பதற்கான வழிகளை மேற்கொள்கின்ற அரசியல் தலைமையின் பின்னால் சகல தமிழ் மக்களும் அணிதிரள வேண்டும்.

அதுவரைக்கும் நாம் கொண்டாடுகின்ற இந்த விழாவானது, எமது பாரம்பரியங்களை நினைவு கூருவதற்காகத்தான் கடைப்பிடிக்கின்றோம்.

இந்து இளைஞர் மன்றங்களும் அறநெறிப் பாடசாலைகளும் ஆண்டு விழாக்களை மட்டும் நடத்துவதை விட்டு இந்துக்களிடையே ஒழுக்கத்தையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். -என்றார். (ச)

## ஊவா மாகாணப் பாடசாலைகளுக்கு முறைப்பாட்டுப் பெட்டியை பொருத்துக

### பிரதி பொலிஸ் மா அதிபர் ஆலோசனை

இரத்தினபுரி,ஜன.17

ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் முறைப்பாட்டுப் பெட்டியொன்றை பொருத்துமாறு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.கே.லதீப் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த ஆலோசனை ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பொருத்தப்பட்டுள்ள முறைப்பாட்டு பெட்டி மூலம் பல பிரச்சினைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## ரயிலில் மோதி ஒருவர் சாவு

கல்முனை,ஜன.17


கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து அவலவ்வ, வலக்கும்புர பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

ரயிலில் மோதுண்டு படுகாயமடைந்த நபர் பொல்கஹவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் கல்முனையைச் சேர்ந்த மொஹமட் ரதீமா (வயது-30) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து அவலவ்வ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)




'திவிநெகும' வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் குறித்து மக்களுக்குத் தெளிவூட்டும் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனை கிறிஸ்தா இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன், திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.அன்வர்தீன் மற்றும் கல்முனை பிரதேச செயலர் ஏ.எம்.நௌபல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மட்டு. அபிவிருத்திக்கு ரூ.1400 மில். ஒதுக்கீடு

### கருணா சொல்கிறார்



மட்டக்களப்பு,ஜன.17

தேசத்துக்கு மகுடம் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திக்காக 1400 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

'வறுமையற்றதோர் இலங்கை தேசம் நிறைவான இல்லம்' திட்டத்தின் அறிவூட்டல் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரதீவுப்பற்றில் 55 வீதமானோர் வறுமை நிலையில் உள்ளனர்.

இந்தத் திட்டத்தின் மூலம் 2015ஆம் ஆண்டில் வறுமையை முழுமையாக இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தத் திட்டம் போர் மற்றும் இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் துரித வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றவுள்ளது.- என்றார். (ச)

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி விசேட திறன் விருது நிகழ்வு



மட்டக்களப்பு,ஜன.17

கிழக்கு மாகாண உள்ளூராட்சி விசேட திறன் விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாநகர சபை நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் விழாவில், கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், கிழக்கு மாகாண பிரதம செயலர் டி.எம்.எஸ். அபேகுணவர்த்தன, மட்டக்களப்பு மாநகர முதல்வர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான முகாமைத்துவ, திண்மக்கழிவகற்றல் போட்டி, சிறந்த நூலகங்களை நடத்திய சபைகள் மற்றும் தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் கலந்து கொண்ட உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. (ச)

### கெக்கிராவ பொலிஸ் நிலையத்தால்

## வாகன விபத்தைத் தடுக்க புதிய வேலைத்திட்டங்கள்

கெக்கிராவ,ஜன.17

கெக்கிராவ பொலிஸ் நிலையத்தால் வாகன விபத்துக்களைத் தடுப்பதற்காக புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் பாடசாலை மாணவர்கள், சாரதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளது என்று கெக்கிராவ போக்குரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி மாஷல் மஹீபால தெரிவித்தார்.

15 தொடக்கம் 20 வயதுக்குட்பட்டவர்களே அதிகளவில் திடீர் விபத்துக்களுக்கு உள்ளாவது பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது. மோட்டார் சைக்கிள்களே அதிகளவில் விபத்துக்குள்ளாகின்றன என்று அவர் கூறினார்.

இந்தப் புதிய வேலைத் திட்டம் திடீர் விபத்துக்களைத் தடுத்து நிறுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பாடசாலைகளை கண்காணிக்க குழு

### வடமத்திய மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை

இரத்தினபுரி,ஜன.17

வட மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளை கண்காணிப்பதற்கு விசேட குழு ஒன்றை நியமிக்க வட மத்திய மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் குழு கல்வி அலுவலகங்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகம் என்பன தொடர்பாக கவனம் செலுத்தி சோதனைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழு மாகாணப் பாடசாலைகளில் இடம்பெறும் மோசடி, ஊழல்கள் தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளது.

கல்வித்துறையில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக இந்தக்குழுவில் முறையிடலாம் என்று வட மத்திய மாகாண கல்வி அமைச்சர் பேஷல ஜயரத்ன தெரிவித்தார். (ச)

## தேசத்துக்கு மகுடம் கண்காட்சி பிற்போடப்பட்டது

### மார்ச் 23 இல் ஆரம்பம்

அம்பாறை,ஜன.17

அம்பாறையில் எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ [illegible] க்கு அமைய எடுக்கப்பட்டுள்ளது என்று தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட [illegible] சந்திப்பிலேயே அவர் இவ்வாறு அறிவித்தார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை அம்பாறையில் தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சி நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

எனினும், இந்தக் கண்காட்சி எதிர்வரும் மார்ச் மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பாதிப்புக்களை பூர்த்திசெய்யுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதற்கு அமைய தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பொருள்களை புதிய யுக்தியால் விற்றுத் தீர்ப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**இடபம்:** பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மிதுனம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**கடகம்:** யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக்கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். உறவினர், நண்பர்களால் அன்புத் தொல்லை அதிகரிக்கும். வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**சிங்கம்:** மறைந்திருந்த திறமைகள் வெளிப்படும். நெருங்கிய சிலருக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார், போராடி வெல்லும் நாள்.

**கன்னி:** உங்களின் குறிக்கோளை அடைய முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிட்டும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் கிட்டும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**நாளை**

தை -05 வெள்ளிக்கிழமை 18.01.2013
திதி: ஸப்தமி மு.இ. 09.01 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.இ 11.44 வரை
சுபநேரம்: 06.35- 08.05 வரை
ராகுகாலம்: 11.05- 12-35 வரை

**துலாம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** அதிகார பூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட் டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** எல்லோரையும் கவருவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும்.

**மகரம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**கும்பம்:** எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். பணப் பற்றாக்குறையால் பிறரிடம் கடன் வாங்க வேண்டி வரும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும்.

**மீனம்:** உடல் நலத்தில் கவனம் தேவை. அநாவசியச் செலவுகளைத் தவிருங்கள். உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வரக் கூடும். எதிலும் முன்யோசனையுடன் செயற்படுங்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | 9 | 7 | 5 |
| 7 | | | | | 1 | | 3 | |
| | | | | | | | 8 | 1 |
| 9 | | 4 | 3 | | 8 | 7 | | 6 |
| | | | 2 | | 6 | | | |
| 8 | | 2 | 9 | | 5 | 3 | | 4 |
| 1 | 8 | | | | | | | |
| | 2 | | 7 | | | | | 9 |
| 5 | 3 | 9 | | | | | | 7 |


### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 4 | 1 | 6 | 7 | 2 | 3 | 8 |
| 7 | 3 | 2 | 9 | 8 | 5 | 6 | 4 | 1 |
| 6 | 8 | 1 | 3 | 2 | 4 | 9 | 5 | 7 |
| 2 | 1 | 6 | 7 | 4 | 8 | 3 | 9 | 5 |
| 9 | 4 | 8 | 5 | 1 | 3 | 7 | 6 | 2 |
| 3 | 5 | 7 | 6 | 9 | 2 | 8 | 1 | 4 |
| 8 | 6 | 5 | 4 | 7 | 9 | 1 | 2 | 3 |
| 1 | 7 | 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 9 |
| 4 | 2 | 9 | 8 | 3 | 1 | 5 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைக்கான இந்தோனேஷிய தூதர் ஹரிமாவன் சுயித்கோ, அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## எதிர்கட்சிகளின் கருத்துக்கு அரசு மதிப்பளிப்பதில்லை

### சுவாமிநாதன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜன.17

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு அரசு மதிப்பளிப்பதில்லை. இதன் காரணமாகவே நாடாளுமன்ற அமர்வுகளில் நான் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றப் பேரவையில் எதிர்க்கட்சிகள் கருத்துக்களை வெளியிட்டாலும் அவற்றை அரசு ஏற்றுக்கொள்ளாது. 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாடாளுமன்றப் பேரவையின் அதிகாரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த நாடாளுமன்றப் பேரவையில் பங்கேற்பதில் எந்தப் பயனும் இல்லை.

18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் நோக்கில் இதுவரையில் நாடாளுமன்றப் பேரவை அமர்வுகளில் நான் பங்கேற்கவில்லை.-என்றார். (ச)

## சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை வினாத்தாள் முன்பு வெளியானதா?

### புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

கொழும்பு,ஜன.17

இலங்கைச் சட்டக்கல்லூரி நுழைவுத் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை குறித்துப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது குறித்து பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளிடம் புலனாய்வுப் பிரிவினர் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு வினாத்தாள் முன் கூட்டியே வெளியானதாககிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்தே, இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வுக்குத் தோற்றிய சில மாணவர்களிடமும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளனர். (ச)

## போலி சான்றிதழ் தயாரித்தவருக்கு ஒத்திவைத்த சிறையும் தண்டமும்

### மேல்நீதிமன்றம் விதித்தது

கொழும்பு,ஜன.17

சவூதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ரிசானா நபீக்கின் போலிப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைத் தயாரிக்க உதவியதாகக் கூறப்படும் சந்தேகநபருக்கு மேல்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஒத்திவைத்த சிறையும் தண்டமும் விதித்துள்ளது.

தலைமறைவாகி இருந்த சந்தேகநபரான தம்பலெப்பை அப்துல் சலாம், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு ஏனைய இரண்டு சந்தேகநபர்களுடனும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

ரிசானா நபீக்கை வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய வயதுடன் கடவுச்சீட்டு பெறுவதற்குப் போலியான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைத் தயாரித்த சந்தேகநபர்களான தம்பலெப்பை அப்துல் சலாம், பக்கீர் மொஹம்மட் வஜுர்தீன் மற்றும் சாஹுல் ஹமீட் அப்துல் லத்தீப் ஆகியோருக்கு எதிராக மேல்நீமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தம்பலெப்பை அப்துல் சலாம், தான் குற்றமற்றவர் என நீதிமன்றில் கூறிய போதும் ஏனைய இருவரும் குற்றங்களை ஒப்புக்கொண்டதால் இவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தலைமறைவாகிய தம்பலெப்பை அப்துல் சலாமை புலனாய்வுப் பொலிஸார் பேருவளையில் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர்.

இவரை வழக்கு விசாரணைகள் முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அதனையடுத்தேவிசாரணையின் பின் நேற்றுமுன்தினம் அவருக்கு ஐந்து வருட ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டது. (ச)

### ஜி.சீ.ஈ.சாதாரண தரம்

## எழுதத் தவறியோருக்கு பரீட்சை

கொழும்பு,ஜன.17

வெள்ளம் மற்றும் கடும் மழையால் பாதிப்புகளுக்கு இலக்காகி ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களுக்கான விசேட பரீட்சை எதிர்வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சையைப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் செயலகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பிரதேசங்களில் கடந்த மாதம் 17ஆம், 18ஆம், 19 ஆம் திகதிகளில் நிலவிய காலநிலையால் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சில பாடங்களுக்குத் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

### ஆட்சியாளர்களின் பிழையான தீர்மானங்கள்

# காலனித்துவ நாடுகளின் சூழ்ச்சிகளை வலுப்படுத்தும்

### தம்பர அமிலதேரர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.17

ஆட்சியாளர்களின் பிழையான தீர்மானங்கள் காலணித்துவ நாடுகளின் சூழ்ச்சித் திட்டங்களை வலுப்படுத்தும்.

இவ்வாறு காலனித்துவ நாடுகளுக்கு எதிரான அமைப்பின் அமைப்பாளர் தம்பர அமிலதேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றப் பிரேரணை நிறைவேற்றமானது, நாட்டின் மீது நேசமுடைய ஆட்சியாளர்களினால் மேற்கொள்ளப்பட மாட்டாது.



நாடுகளின் வளங்களை சுரண்டுவதற்கு காலனித்துவ நாடுகள் முயற்சிக்கின்றன.

இன்று மட்டுமல்ல வரலாற்றுக் காலம் முதலே காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆதிக்கம் காணப்படுகின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையின் மூலம் காலனித்துவ நாடுகளின் சூழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மக்களும் ஏகாதிபத்திய ஆட்சிக்கு அடிமைப்பட்டுள்ளனர்.

குற்றப் பிரேரணை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்திருந்தது.

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் குற்றப் பிரேரணைக்கு எதிராகக் கருத்துக்கள் வெளியிடப்படும்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் இதுவரை தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. எனினும், குற்றப் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் போன்றே இந்தத் தெரிவுக் குழுவும் பொய்யானது என்பது புலப்பட்டுள்ளது .-என்றார். (ச)

## சந்தையில் விற்கப்படும் உணவுகளில் அளவுக்கதிகமாக சீனி, உப்பு பாவனை

### கட்டுப்படுத்த புதிய ஒழுங்கு விதி

கொழும்பு,ஜன.17

சந்தையில் விற்கப்படும் உணவுகளுக்கு அளவுக்கதிகமாக சீனி, உப்பு ஆகியவை பாவிப்பதைக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய ஒழுங்கு விதி அறிமுகப்படுத்தப் படவுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற உணவுகளுக்கு சேர்க்கப்பட்டிருக்கின்ற சீனி மற்றும் உப்பின் அளவு சர்வதேச அளவையும் தாண்டியுள்ளது.

இந்த விடயம் சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு பிரிவு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதனடிப்படையிலேயே சுகாதார அமைச்சு இந்த ஒழுங்கு விதியை அறிமுகப்படுத்துவதற்கு முடிவு செய்துள்ளது.

**சீனி, உப்பு போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பாவித்து வருவதன் விளைவாகவே நாட்டில் தொற்றா நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.**


இலங்கையில் ஒருவர் நிர்ணயிக்கப்பட்ட இரண்டு தேக்கரண்டிக்குக் குறைவாகவே சீனியைப் பாவிக்க வேண்டும். ஆனால் தற்போது தினமும் ஒருவர் 9 தேக்கரண்டிகளுக்கும் மேல் சீனியை உட்கொள்கிறார். அது ஆரோக்கியத்துக்கு ஏற்றதல்ல என்று சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேபோல் ஒருவர் தினமும் ஒரு தேக்கரண்டி உப்பையே உட்கொள்ள வேண்டும். அதுவே மருத்துவத் துறையினரின் சிபாரிசு ஆகும். ஆனால் தற்போது தினமும் நான்கு கரண்டிகள் அளவில் ஒவ்வொருவரும் உப்பை உட்கொள்கின்றனர். இது ஆரோக்கியத்துக்கு நன்மை பயக்காது என்று அவர் கூறினார்.

தற்போது சந்தையில் விற்கப்படுகின்ற உணவுப் பொருள்களுக்கு அதிகளவு சீனி சேர்க்கப்படுகின்றது. அது உடல் ஆரோக்கியத்துக்கு எந்தவகையிலும் ஏற்றதல்ல. இதேபோல் குளிர்பானங்கள் உள்ளிட்ட பானங்களுக்கும் அளவுக்கு அதிகமாக சீனி சேர்க்கப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சீனி, உப்பு போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பாவித்து வருவதன் விளைவாகவே நாட்டில் தொற்றா நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையிலேயே இந்த ஒழுங்கு விதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஆலோசனை வழங்க குழு அமைத்தார் மேர்வின்



கொழும்பு,ஜன.16

அரசியல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் தனக்கு ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காகப் பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா குழு ஒன்றை அமைத்துள்ளார்.

இந்த ஆலோசனைக் குழு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியதாக நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு உறுப்பினர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண சேவை

84 ஆம் ஆண்டு, மிருகசீரிடம் 2,7இல் செவ்வாய், பாவம் 47, கனடா இலத்திரனியல் பொறியியலாளர் P.R மணமகனிற்கு 90 ஆம் ஆண்டு படித்த மணமகள் தேவை.

துர்க்கா திருமண சேவை 021 321 1814,077 8185978.

(28380)(6.7.4)

## தவறிவிட்டது

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம் எனும் முகவரி யுடைய சி.சிவரூபன் என்பவரின் மினிபஸின் வரி அனுமதிப்பத்திரம் (Tax), இன்சூரன்ஸ் மற்றும் ஆவணங்கள் என்பன அடங்கிய சிறு பை யாழ் . நகருக்குள் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 9231968.

(28377)(6.7.4)

## வீடு வாடகைக்கு

தாவடி பாடசாலை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. இந்து சமயத்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0776135311

(28375)(6.7.4)

## வான் விற்பனைக்கு



NPLJ XXXX எனும் தொடர் இலக்கமுடைய ISUZU கன்ரர் வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு :077 398 5544

(28383)(6.711)

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிலையம் ஒன்றிற்கு பின்வரும் பதவிக்கு ஆள்கள் தேவை.

* வைத்தியர்கள் RMP, RMO, MBBS or MD (Russia)
* தாதியர்கள்- (பெண்)
* காசாளர்- (பெண்)
* சாரதி

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 0727570568

(C/5680)(6.711)

## வேலைவாய்ப்பு
### (முல்லைத்தீவு + வவுனியா)

தண்ணீர்ஊற்று மற்றும் வவுனியாவில் அமைந்துள்ள எமது தொழில் கல்வி நிலையங்களில் கீழ்வரும் வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

- IT,English போதனா ஆசிரியர்கள் - தண்ணீர்ஊற்று
- English போதனா ஆசிரியர்கள் - வவுனியா

ஆர்வமுள்ளவர்கள் 22 திகதி ஜனவரி 2013 இற்கு முன்பாக கீழ் வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் மின்னஞ்சல் மூலமும் அனுப்பலாம்.

THE ADMINISTRATIVE OFFICER
23 1/1,Gregorys road,Dehiwala
ilead.colombo@gmail.com

MHW

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி, எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதுக்கும் நன்றி கூறி உமைத் துதிக்கிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் உம்மீது உறுதியாய் நிலைத்திருப் பேனென உறுதிகூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவருக்கும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். ஆமென்.

பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி. (28385) (2.6.7) - அடியாள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்ரியன் இம்மானுவேல் இராசசிங்கம் யோசபின்.பெலிசிற்றா றஞ்சினி



சில்லாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்ரியன் இம்மானுவேல் இராசசிங்கம் யோசபின் பெலிசிற்றா றஞ்சினி 15.01.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை- பெர்ணதேத் தம்பதியரின் அன்பு மகளும், கபிரியேற்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசசிங்கத்தின் அன்பு மனைவியும், றேகன், றஜீவ் ஆகியோரின் அன்புத் தாயாரும் நவராஜா (அமெரிக்கா), றாஜினி (கனடா), றோகினி (கொழும்பு) சறோஜினி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ராஜினி, ஜெந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி பயண வழிபாடுகள் இன்று(17.01.2013) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.30 மணியளவில் சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, சில்லாலை கதிரை அன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை படக்கு,
பண்டத்தரிப்பு (C/5661)(6.7.11)

தகவல்:
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர் துரை
அவர்களின் தாயார்
திருமதி சிவஞானம் செல்லம்மா துரை
அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலைச்சமூகம்.
யா/கட்டுடை சைவ வித்தியாசாலை,
மானிப்பாய்.

(28376)(6.7.4)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
12.04.1928

மறைவு
18.12.2012

கடந்த 18.12.2012 செவ்வாய்க்கிழமை சிவபதமெய்திய

### அமரர் பொன்னுத்துரை சோதிப்பிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.01.2013) வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தனை, வல்வெட்டி. - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### மனுவேல் மன்மதராஜன்



யாழ் மாநகர சபையில் வேலை மேற்பார்வையாளரான எமது சக உத்தியோகத்தரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
வேலைப்பகுதி
யாழ். மாநகர சபை.

(28381)(6.7.11)

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம்பிள்ளை லூர்துமலர்



கடற்கரை வீதி, ஈச்சமோட்டை,யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை, கோப்பாய்,கானான் ஜெப ஆலயத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் பிள்ளை லூர்த்துமலர் நேற்று (16.01.2013) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்வநாயகம் பிள்ளையின் (ஓய்வுபெற்ற உபதபாலதிபர்) அன்பு மனைவியும், செபரெட்டினம் (ஜேர்மனி), இம்மானுவேல் (லண்டன்), அனித்தா(சில்லாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அலெக்ஸ் செல்வேந்திரா(பிரான்ஸ்),சந்திரிக்கா ஆகியோரின் அன்புத் தாயாரும்,பவானி, ஸ்ரீதரன் ஆகியோரின் மாமியும், கிறிஸ்டின் பியோமி, டானியா றொசேல், அபிசா, ஜெசூரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.01.2013) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் கானான் ஜெப ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் கானான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கானான் ஜெபஆலயம்,
இருபாலை,கோப்பாய். (28370)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.


## பசுமைப் புரட்சிக்கான ஒரு நுழைவாயில்
## உங்கள் அருகிலேயே....
## யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சி

காட்சிக் கூட இல.: 229 A, 229 B

**மூலிகைத் தாவரங்கள்:**
கறுவா, கராம்பு, மிளகு, வெற்றிலை, கோப்பி,கொக்கோ

**பழமரங்கள்:**
மா, தேசி, தோடை, கொடித்தேசி, பசன்புருட், றம்புட்டான், ஒட்டுப் பலா, ஒட்டுக்கயு.மலேசியன் பசன் புருட், இந்தியன் மாதுளை, ரெட்லேடி பப்பா.

**குறுகிய காலத்தில் பயன்தரவல்ல வாழை இனம்:**
கப்பல், செவ்வாழை, கவன்டிஸ்.

**பயன்தருமரங்கள்:**
தேக்கு, மலைவேம்பு, சுந்தரவேம்பு,வேம்பு.

**பாம் வகைகள்:**
ரெட்பாம், பொஸ்ரெயில் பாம், பான்பாம், கேன்பாம், குயின்பாம், றோயல்பாம்.

**அலங்காரத் தாவரங்கள்:**
குறோட்டன்,செவ்வரத்தை,றோஸ்,சைபிறஸ்,மொசந்தாஸ்,பாரியாதம்,கொத்து மல்லிகை, ஒற்றை மல்லிகை, பவள மல்லிகை பன்னீர் மல்லிகை,முல்லை,பிச்சி, இந்தியன்மடு,அலகோரியா,ஐந்தூரியம் மற்றும் பல.

* உங்கள் வீடுகளுக்குள்ளேயே வைத்து பாராமரிக்கக் கூடிய நாவுறைப் போக்கவல்ல 'கற்றஸ்' இனத்தாவரங்கள்.
* தென்னை மற்றும் பழமரங்களுக்கான காய்த்தலுக்கான விசேட உரம்.
* இயற்கை உரம், றோசா மற்றும் அலங்காரத் தாவரங்களுக்கான விசேட திரவ பசளை.
* தரமான மரக்கறி விதைகள்.
* வீட்டுத் தோட்டத்திற்கான மரக்கறி விதைகள்.

பிளாஸ்ரிக் சாடிகள், தூக்கு சாடிகள், சிமெந்து சாடிகள், ஸ்டிறேயர் மற்றும் அனைத்து வகையான விவசாய இடுபொருள்களும் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**அலங்காரத் தாவரப் பிரியர்களின் தேடலுக்கான விடைகாணும் ஓர் இடமாகும்.**

பவிசாரு பூங்கனிச் சோலை
311/1,பலாலி வீதி,கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

021 222 8199
071 847 5629
077 397 6203

Facebook : Pavesharu poonganish soolai.

விவசாய திணைக்களத்தில் முறைமையாக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். பதிவு இல: SA/JFA/02677

என்ன மரம் வேண்டும் உங்களுக்கு எல்லாமே இங்கு இருக்கு எம்மிடம்

(C/5679)(5.6.7)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# செங்கல்பட்டு சிறப்பு முகாமிலுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்க

## சீமான் கோரிக்கை



சென்னை, ஜன.17

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்யுமாறு நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்களை விடுதலை செய்ய வேண்டும். சாதாரண முகாம் களில் வாழும் தங்கள் சொந் தங்களுடன் வாழ அனுமதிக் கக்கோரி ஈழத்தமிழ் சொந் தங்கள் 9 பேர், 24 நாள்களாக பட்டினிப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இலங்கை அரசின் தமி ழினப் படுகொலையில் இருந்து தப்பித்து ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டில் அடைக்கலமாகின்றனர். அவர்களில் பலரை, கேவ லப்படுத்தும் முகமாக, பிற் பொக்கெட், வழிப்பறி செய் தார்கள் போன்ற இல்லாத காரணங்களை சுமத்தியுள் ளனர். அயல் நாட்டவர் சட்டத்தின் கீழும் சிறப்பு முகாம்கள் என்றழைக்கப் படும் தனிமைச் சிறைக் கூடங் களில் தமிழகப் பொலிஸாரின் கியூ பிரிவினர் அவர்களை தடுத்து வைக்கின்றனர்.

### கியூ பிரிவுப் பொலிஸின் அராஜகம்

முகாம்களில் வாழும் பெண்களிடம் தகாத முறை களில் நடக்க முயல்தல், அவர்கள் எதிர்க்கும் போது, உங்கள் அண்ணன், தம்பி களை சிறப்பு முகாம்களில் அடைத்துவிடுவோம் என்று மிரட்டுவது என்று கியூ பிரிவினரின் அராஜக நடவ டிக்கைகள் இருக்கின்றன.

கியூ பிரிவினரின் கொடு மைகளைத் தாங்க முடியாத காரணத்தால்தான் நாம் கட லில் செத்தாலும் பரவாயில்லை என்று ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு தப்பிச் செல்கி றோம் என்று அவர்கள் கூறு வதைக் கேட்க வருத்தமாக வும் வெட்கமாகவும் உள்ளது.

கியூ பிரிவினரின் அராஜ கங்கள் பற்றி ஏற்கனவே ஒரு முறை நாம் தமிழர் கட்சி சுட் டிக் காட்டியுள்ளது. சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட் டுள்ளோர் சட்ட ரீதியாக நீதி மன்றத்தை அணுகி பிணை யில் விடுதலை பெற்ற பின்ன ரும், இப்படி தடுத்து வைத்து சித்திரவதை செய்து வருகிறது கியூ பிரிவு- என்றுள்ளது (வ)

# யாழ். ஆஸ்பத்திரி வளாக ஆலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது புனர மைக்கப்பட்ட ஸ்ரீ சாமுண் டீஸ்வரி சமேத ஞான வைர வர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது. இம்மாதம் 23 ஆம் திகதி காலை 8.06 மணி தொடக்கம் காலை 8.32 மணி வரையுள்ள சுபவேளையில் கிரியைகள் இடம்பெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

சிவஸ்ரீ செ.வைரவநாதக் குருக்கள் பிரதம குருவாகக் கலந்துகொண்டு கும்பாபி ஷேகக் கிரியைகளை நடத்தி வைப்பார். அன்றைய தினம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், துர்க்கா தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் ஆகியோரின் அருளுரைகளும் இடம்பெறும். (வ-7)

# ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 'தமிழர் விடுதலைப் பயணம்' நிறைவு

சிட்னி, ஜன.17

ஆஸ்திரேலியாவில் அண்மைக் காலத்தில் நடைபெற்று வரும் இலங்கை அரசுக்கு எதிரான 'தமிழர் விடுதலைப் பயணம்' என்னும் ஊர்திப் பயணம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெற்றது.



ஆஸ்திரேலியாவுக்குத் தற்போது சென்றிருக்கும் இலங்கைக் கிரிக் கெட் அணி ஆஸ்திரேலிய அணியை எதிர்த்துப் பல போட்டிகளில் விளையாடி வரு கின்றது. இவ்விரு நாடுகளும் விளையாடும் அனைத்துப் போட்டிகளிலும் 'இலங்கையைப் புறக்கணி' என்ற மகுட வாக்கியத்தோடு தொடர் போராட்டங்கள் அந்தந்த விளை யாட்டு மைதானங்களில் நடைபெற்று வரு கின்றன.

தமிழ் ஏதிலிகள் கழகமும் அகதிகளுக் கான நடவடிக்கை பணியகமும் இணைந்து றிவோர் கிரான்ட் தலைமையில் மேற்படி போராட்டம் ஒருங்கிணைத்து நடைபெற்றது. அனைத்துப் போட்டிகளிலும் இலங்கை அரசின் கோர முகத்தை வெளிப்படுத்தும் வகையில் பதாகைகள் தாங்கியபடி துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தது. பல்லின மக்களிடமும் இலங்கை அரசின் பயங் கரவாதத்தையும் இலங்கையின் கிரிக்கெட் அணியை ஆஸ்திரேலியா ஏன் புறக்கணிக்க வேண்டும் என்றும் பரப்புரைகள் செய்யப் பட்டன.

தாஸ்மானியத் தலைநகர் ஹோபார்ட், மெல்பேர்ண், சிட்னி போன்ற மாநகரங் களைத் தொடர்ந்து அடெ லெய்டில் 13 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை - ஆஸ்திரேலிய நாடுகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெறும் மைதானத்தில் போராட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

மேற்படி போராட்டத்தை தலைமை தாங் கும் றிவோர் கிரான்ட் தலைமையில் மெல் பேணிலிருந்து நான்கு ஊர்திகளில் பதா கைகள் தாங்கிய வண்ணம் செயற்பாட் டாளர்கள் அடெலெய்ட் நோக்கிப் பயணித் தார்கள்.

'தமிழர் விடுதலைப் பயணம்' என்ற பெயருடன் நடைபெற்ற அந்தப்பயணம் கடந்த சனிக்கிழமை காலை மெல்பேணி லிருந்து புறப்பட்டு சுமார் 800 கிலோ மீற்றர் பயணித்து அடெலெய்ட் அடைந் தது.

(வ)

கோக்குவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியையான திருமதி ஸ்ரீ.திலீபன்
அவர்களுடைய அருமைத் தாயார்
திருமதி சிவயோகம் பத்மநாதன்
அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும்
குடும்பத்தினருக்கு எமது இரங்கலைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.
(28373)(6.7.4)

துன்பம் தீர அருள் வாக்கு

குழந்தைப் பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள்வாக்கு கூறப்படும். வெள்ளவத்தை பெர்ணாந்து வீதியில் உள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் 19, 20, 21.01.2013 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் அருள் வாக்கு கூற உள்ளார்.

தொடர்புகளுக்கு: ஞானவைரவர் ஆலயம், கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
பூசை நேரம்: மு.ப 10.30 மணி
மாலை 4 மணி
T.P 077 80 12226 - அம்மா
(28338) (2.6)

# ஆன்மிகப் பாதையின் ஆரம்ப நிலையம் எங்குள்ளது

*ஆன்மிகப் பாதையின் ஆரம்ப நிலையம் சத்சங்க மாகும். பக்தர்களின் கூட்டம். நாம் தீய அல்லது கெட்ட கூட்டத்தை மிகவும் கவனத்துடன் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.*

*எண்ணங்கள் தொற்றுத் தன்மையுடையன. இதனால் தான் "உனது கூட்டத்தைக் கூறு, நீ எப்படிப்பட்டவன் என நான் கூறுவேன்" என்ற பேச்சுமொழி வந்துள்ளது. ஸ்ரீசங்கரர் பின்வருமாறு கூறுகிறார்.*

*"அறிவுடையோரது சேர்க்கை பற்றற்ற நிலையைத் தரும். பற்றற்ற நிலையானது மாயையினது அழிவுக்கு இட்டுச் செல்லும். மாயையின் அழிவு, நிலை தளம்பாத ஞானத்தைப் பெற்றுத்தரும். நிலை தளம்பா ஞானம் ஜீவ முக்தியைத் தரும். அதாவது உயிருள்ள போதே வீடு பேற்றைப் பெறுதல் ஆகும்."*

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

# வலி. கிழக்கு பிரதான வீதிகளுக்கு இந்த வாரத்தில் மின் விளக்குகள்

வலி. கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான வீதிகளுக்கு வீதி மின் விளக்கு கள் இந்த வாரத்தில் அமைக் கப்படவுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபையின் தலை வர் அ.உதயகுமார் தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

தற்போது முதற் கட்ட மாக பருத்தித்துறை வீதிக்கு வீதி மின் விளக்குகள் அமைக் கப்படவுள்ளன.

இதற்கென 35 வீதி விளக்குகள் மேற்படி வீதியில் பொருத்தப்படவுள்ளன.

தொடர்ந்து கட்டம் கட்டமாக ஏனைய பிரதான வீதிகள் மற்றும் கிராமப்புற வீதிகளுக்கு மின் விளக்கு கள் அமைக்கப்படவும் உள் ளன.

மேற்படி பிரதேசத்தின் அதிகமான வீதிகள் தற்போது மின்சார விளக்குகள் இன்றி இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இதனால் இரவு வேளை யில் வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமப்படுவதோடு விபத்துகளுக்கும் இலக்காகி வருகின்றனர்.

(வ-17)

# வாராந்த சொற்பொழிவு

வடமராட்சி, ஜன.17

தொண்டமானாறு சந் நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்ட பத்தில் வாராந்த நிகழ்வு களை நடத்தி வருகிறது. அதன் வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேவிபாக வதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடை பெறும்.

இந்தச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி சிரேஷ்ட விரி வுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (வ-8)




காரைநகர் பயிரிக்கூடல்,
அருள் மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில்
மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2013

முருகன் அடியார்களே!
எமது ஆலயத்தின் மஹோற்சவம் நந்தனவருடம் தைத்திங்கள் 05 ஆம் நாள் (18.01.2013) வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாள்கள் உற்சவம் நடைபெறும்

மகோற்சவ குரு : சிவ ஸ்ரீ.கு.சண்முகராஜக்குருக்கள் (ஆலயக்குரு)

| | | |
|---|---|---|
| 2013.01.18 | வெள்ளிக்கிழமை | கொடியேற்றம் |
| 2013.01.24 | வியாழக்கிழமை | வேட்டைத் திருவிழா |
| 2013.01.25 | வெள்ளிக்கிழமை | பெரிய சப்பரம் |
| 2013.01.26 | சனிக்கிழமை | தேர்த்திருவிழா |
| 2013.01.27 | ஞாயிற்றுக்கிழமை | தீர்த்தம், கொடியிறக்கம் |
| 2013.01.29 | செவ்வாய்க்கிழமை | வைரவர் பொங்கல் |

தினமும் திருவிழா நேரம் :
பகல் திருவிழா காலை 8.30 - 12.30
இரவுத் திருவிழா மாலை 6.00- 9.00

அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.
- திருவிழா உபயகாரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...!



இன்றைய உலகில் நாகரிகம் என்ற போர்வையில் அசிங்கங்கள் தான் அரங்கேறிக் கொண்டு இருக்கின்றன. அதிலும் குறிப்பாக பெண்கள் 'பஷன்' என்று பகட்டான ஆடை அணிகலன்களும் மேக்கப்பின் உச்சத்திலும் பவனி வருகின்றார்கள். இன்றைய பெண்கள் அணியும் ஆடையைப் பார்த்தால் ஆண்களே வெட்கித் தலைகுனியும் அளவுக்கு காணப்படுகின்றது. அதிலும் சில பெண்கள் தான் விரும்பும் நாகரிகத்தை தன் கணவன் குழந்தைகளுக்கு வலுக்கட்டாயமாக புகுத்தி விடுகின்றார்கள்.

பெண்களின் 'மேக்கப்பை' எடுத்துக் கொண்டால் விதம் விதமான கிறீம்கள், லிப்ஸ்றிக் இன்னும் ஏராளம். அடடா இன்று கறுப்பான பெண்கள் கூட கவலைப்படத் தேவையில்லை. அதுதான் இருக்கவே இருக்கின்றதே கிறீம்கள். அந்தக் கிறீமை பூசிக் கொண்டு அவர்கள் போடும் ஆட்டம் சொல்லில் அடங்காது.

இப்போது கைத்தொலைபேசி இல்லாத பெண்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்தளவுக்கு தொலைபேசியும் பெண்களும் ஒன்றித்து விட்டார்கள். பெண்கள் கைத்தொலைபேசி கதைக்க ஆரம்பித்துவிட்டால் சூழலில் உள்ளவர்களை மறந்தே விடுவார்கள்.

தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் பெண்களிடம் கைத்தொலைபேசி தான் பாடம் நடத்துகின்றது. ஆசிரியர்கள் முன்னால் நின்று பாடம் நடத்த இவர்கள் குறுஞ்செய்தி அனுப்புவதில் மும்முரமாக ஈடுபடுவார்கள். 'பேஸ்புக்', 'நெற்' என்று இவர்கள் ஈடுபடுகின்றார்கள். இன்று எவ்வளவோ நன்மைகள் இருந்தாலும் தீமைகளையே இவர்கள் நாடிப் போகின்றார்கள். ஆண் நண்பர்களுக்கு 'மிஸ்கோல்' போடுவது என்று நாகரிகத்தில் தமது வாழ்வை நாசமாக்குகின்றார்கள்.

பெண்கள் நாகரிகத்தை நாடிச் செல்வது மாத்திரமில்லாமல் தமது வாழ்வைத் தாமே வீணடிக்கின்றனர்.

**அ.அகிலதீரான்,**
*சரசாலை தெற்கு, சாவகச்சேரி.*

## புரியாத வாழ்க்கை...



வாழ்க்கையின் அர்த்தத்தைத்
தேடுகிறேன் எங்கேயும்
காணவில்லை
புரியவில்லையே!
புரியாத புதிராக
வாழ்க்கைப் பயணம்.....

வாழ்க்கையின் அர்த்தம்தான்-என்ன
என்பது அடிக்கடி
எழும் நினைவாக
இருக்கின்றது...
மனமானது வாழ்வின்
மகத்துவத்தைக் காண
விழைகின்றது........

புரியவில்லையே!
வீறுகொண்டு எழுந்தேன்!
வாழ்வின் அர்த்தத்தை
அலட்சியமின்றி
தேடினேன்!
எங்கும் மருட்கை
எங்கும் கானல்
புரியவில்லையே!

வாழ்வின் அர்த்தத்துக்காய்
வீறுகொண்டு நடந்தேன்...
புன்னகை இல்லை
நட்பும் இல்லை
நிம்மதிகூட இல்லை
புரியவில்லையே!

புரிந்தது வாழ்க்கையின்
புதிர்... எங்கும் எதுவும்
இல்லை இருப்பதுதான்
வாழ்க்கை... இருப்பதைக் கொண்டு
வாழ்வதோ புரியாத புதிர்.......

*த.ஜங்கரதீபன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## அன்புள்ள அப்பாவிற்கு...

அன்புள்ள அப்பாவுக்கு
என்றும் உங்கள் நினைவுகளுடன்
நான்........

உறவுகள் நிரந்தரமில்லை-ஆனால்
உணர்வுகள் மட்டும் உயிருள்ளவரை
நிலைத்திருக்கும் என
புரிந்து கொண்டேன்
என் ஸ்பரிசம் தொட்டு
நான் பேசும் மழலை மொழிகளை
நீங்கள் கேட்கவில்லை.
எங்கோ தொலைதூரத்திலிருக்கும்
உங்கள் குரலை மட்டும் அன்று
கேட்டேன் அப்பா-ஆனால்
இப்போது அது கூட முடியாது
எட்டமுடியாத தூரத்தில் நீங்கள்
ஆனால் உங்கள்
நினவுகளுடனும் உணர்வுகளுடனும்
மட்டும் என்றென்றும் நான்



அருவி,
வேம்படி மகளிர் கல்லூரி.

## விமர்சனம்



நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................

முகவரி :- ........................................

........................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேதனை.....



விதியின் பிடியில் சிக்கிக் கொண்ட
என் வாழ்க்கை....
சிலர் செய்த வினையால்
திசை மாறிப் போனதேனோ...?
உறவுகள் அத்தனையும்
விலகிச் செல்ல
வலிகள் மட்டும் என்னைத்
தொடர்வதாய் உணர்கிறேன்
உயிர் கொண்ட என் வலிகள்
உயிரற்று போகும்வரை
என் வாழ்க்கைக்கு இல்லை
விடியல்.....

ச.மேனுஷா,
ஆவரங்கால், புத்தூர்.

## ஒசோவின் தத்துவங்கள்.....

★ உனக்கு நீயே விளக்கமாயிரு. தூண்டுதல் என்றால் நீ யாரையோ பின்பற்றுகிறாய் என்று அர்த்தம்.

★ வாழ்வு ஓர் எல்லையில்லாத புதிர், அறிவு மிகுந்தவர்கள் வாழ முடிவதில்லை.

★ நீங்கள் எதன் மேல்விருப்பு வைத்தாலும் நீங்கள் அதனால் ஆக்கிரமிக்கப்படுவீர்கள். அதனால் அதை இழந்து விடுவோமோ என்று பயப்படத் தொடங்குவீர்கள்.

★ கடவுள் உன்னை சோதிக்கிறார் என்றால் கவலைப்படாதே. சிரித்துக் கொண்டு ஏற்றுக் கொள். ஏனென்றால் சோதிக்கத் தகுதியானவனாக உன்னைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்று.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### *பிலிப்புப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் (ரொமி)*

இளவாலை பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும், வவுனியா இறம்பக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர் நேற்று (16.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை - ஞானரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - ராசம்மா தம்பதியரின் மருமகனும், குலநாயகியின் அன்புக் கணவரும், யோசப் நவரத்தினம், எட்வேட்ராசா, அருட்சகோதரி கைசின் (தி.கு.யாழ்ப்பாணம்), விக்கரர் இம்மானுவேல், மேரிதிரேசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவி, பிலோமினம்மா, தேவநேசம், செல்வநாயகம், காலஞ்சென்ற வர்களான செல்வநாயகம், சொர்ணநாயகி மற்றும் அமுதநாயகம், மரியநாயகி, லூர்த்துநாயகி, குலநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.01.2013) வியாழக்கிழமை வவுனியா இறம்பக்குளம் புனித அந்தேனியார் ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு வவுனியா இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி. (28421)(3.14) அருட் தந்தை எ. எட்வினாதன் (பேறாமகன்)

USAID FROM THE AMERICAN PEOPLE — SRI LANKA BIZ+ VEGA Volunteers for Economic Growth Alliance

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை நிகழ்வில் இலவச வியாபாரத் திட்டமிடல் பயிற்சி

உங்கள் திட்டத்திற்கான வியாபாரத்திட்டத்தினை தயாரிப்பதற்கான செய்முறைப் பயிற்சியை பெற்றுக்கொள்வதற்கு இது ஒரு தனித்துவமான வாய்ப்பு. உங்களுக்கான சந்தையை ஆராய்ச்சி செய்வது மற்றும் சந்தைப்படுத்தும் திட்டத்தினைத் தயாரிப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளுங்கள்.

இந்த வியாபாரத்திட்டப் பயிற்சியானது. வியாபாரத்திற்கான உச்சப்பயன்பாட்டை வழங்கும் பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச நிறுவனத்தினரால் (International Institute for Training Development utilizing the Business Edge™) வழங்கப்படவுள்ளது. வியாபாரத் திட்டப் பயிற்சியின் கூறுகள் மற்றும் பயிற்சி முறைகள், முகாமையாளர்கள் மற்றும் முயற்சியாளர்களுக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சிகளின் ஒரு பகுதியாகும்.

**இடம் :-** கேட்போர் கூடம், பொது நூலகம், யாழ்ப்பாணம்

**காலம்:- நான்கு தடவைகள் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஒரு நிகழ்வுக்கு 25 பேர் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.**

- சனிக்கிழமை, 19 ஜனவரி, 10:00-12:00 மு.ப மற்றும் 15:00-17:00 பி.ப
- ஞாயிற்றுக்கிழமை, 20 ஜனவரி, 10:00-12:00 மு.ப மற்றும் 15:00-17:00 பி.ப

பதிவு நிபந்தனைகள்: மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்

**தொலைபேசி :- 024 222 6715, 0777 444355, 0777 444378**

மின்னஞ்சல்:-
elango.mariathasan@idd.landolakes.com,
k.gangatharan@idd.landolakes.com

இந்த வாய்ப்புக்கு நிதிவழங்குபவர்கள் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் (USAID) VEGA/BIZ+ திட்டமாகும். அமெரிக்க மக்களின் தாராளமான ஆதரவுடன் VEGA/BIZ+, பொருளாதார வளர்ச்சி மற்றும் விருத்திசெய்யப்பட்ட வாழ்வாதார வாய்ப்புகளை இலங்கையில் உருவாக்க சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களில் முதலீடுசெய்கிறது.

## கலந்துரையாடல்

அழகியல் பாட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயப் பாடசாலை அழகியல் பாட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முதன்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

சித்திரம், நடனம், நாடகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வாண்டுக்கான வேலைத் திட்டம், பாடத்திட்டம் கலைசார் நிகழ்வுகள் தொடர்பான விளக்கவுரைகள் இந்தக் கூட்டத்தில் வழங்கப்படவுள்ளன. அத்துடன் அழகியல் பாடங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கான வசதிகளும் இந்தக் கலந்துரையாடலின் போது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மேலும் அழகியல் பாட ஆசிரியர்களை இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (க-402)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## தலைப்பற்று சங்கரமூர்த்தி முருக மூர்த்தி தேவஸ்தானம் புங்குடுதீவு

கோயில் பராமரிப்பாளர் தேவை. வயது 40இற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 0777 280268

**மதுரா அழகுக்கலைப்பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)
பயிற்சிக்காலம் 3 மாதம். பயிற்சிக் கட்டணம் நேரில்
பதிவிற்கான இறுதி திகதி 20.01.2013 இந்தப் பயிற்சி
நெறிகளுக்கு வயதெல்லை கிடையாது
(பெண்கள் மட்டும்)
அழகுக்கலை அடிசனல் & டிப்ளோமா & பேசிக் கோர்ஸ்களும் மற்றும் தையல், கேக், ஐசிங், ஹான்ட் வேர்க், சாறிவேர்க் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன.
★ பயிற்சிநிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
(மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள் மட்டுமே உள்ளன)
பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்,
T.P: 0779362642. (28409)(2.6) பழைய வீதி, கோப்பாய்.



## கண்ணீர் அஞ்சலி



எமது சக அதிபர்களான யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை அதிபர் து.சிவஞானம் அவர்களின் அன்புத் தாயும் யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை அதிபர் திருமதி அ. சிவஞானம் அவர்களின் மாமியும் ஆகிய

### செல்லம்மா துரை

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம், சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம் (28413)
கோட்டக்கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், கோட்டக்கல்வி அலுவலகர்கள்

## மரண அறிவித்தல்



### திருமதி சுந்தரலிங்கம் பாலகுமாரி (தேவி - கனடா)

கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் பாலகுமாரி (தேவி) (15.01.2013) செவ்வாய்க்கிழமை கனடாவில் கர்தருக்குள் ஐக்கியமானார்.

அன்னார் அருட்சகோதரர் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், ஃபேயித் (Faith) இன் அன்புத் தாயும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், பாலலக்ஷ்மி, பாலச்சந்திரன் (கனடா), பாலரஞ்சினி, பாலாம்பிகை, பாலசரஸ்வதி, பாலகிருஷ்ணன், பாலகௌரி, பாலதேவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், சிவாஜினி, பரமநாதன் காலஞ்சென்ற சிவராசா தனராஜ், கோமதி, கோகலே, சுபாஜினி சண்முகலிங்கம், சிவபாக்கியம், சிவசிதம்பரலிங்கம், புஸ்பராணி, பஞ்சலிங்கம் தனலக்ஷ்மி ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*சு.நாகேஸ்வரி (இராசாத்தி)*
*தாய்*

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய். (28419)

## தவறிவிட்டது

புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்துறையை சேர்ந்த ஜெகதீஸ்வரன் மயூரன் என்பவரது மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன யாழ். நகரப்பகுதிக்குள் கடந்த சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தொடர்பு:0776246856


## கண்டெடுக்கப்பட்டது

NPTR 4867 இலக்க மோட்டார் வாகன இலக்கத் தகடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்பு: மகாலட்சுமி தேனீரகம் கொக்குவில் சந்தி.
(C/5692)(14)

தரம் 5 புலமைப் பரிசில்- 2015 (மாதிரிப் பரீட்சை)
கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் அநேக மாணவர்களை சித்தியடைய வைத்த இலங்கையின் முன்னனி ஆசிரியர் களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாவலர் வெளியீடான
"புலமைச் சிட்டு"
மாதிரி வினாத்தாள் (விடைகளுடன்) ஞாயிறு தோறும் வெளிவரவுள்ளன.
1 ஆவது பரீட்சை:- 20.01.2013 ஞாயிறு
பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் வெளிமாண வர்களுக்காக விரும்பிய நேரங்களில் பரீட்சை.
பரீட்சை நடைபெறும் இடம்.
புதிய நாவலர் கல்விநிலையம்.
ஆனைப்பந்திச்சந்தி, யாழ்ப்பாணம்.
வினாத்தாள் பெறவிரும்பும் பெற்றோர்கள், பிரத்தியேக வகுப்புகள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள், 19.01.2013 இற்கு முன் தொடர்புகொள்ளவும்.
மேலதிக விவரங்களுக்கு:
பரீட்சைப் பகுதி,
புதிய நாவலர் கல்விநிலையம்.
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:-0774398440

சிறப்புத் தள்ளுபடி
இங்கு வாங்கும் ஒவ்வொரு கெவில்ட்டன் CFL மின்குமிழிற்கும்
10% தள்ளுபடியைப் பெறலாம்
கெவில்ட்டன் கண்காட்சிக் கூடம் [இல. 100] யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி
18,19,20 ஜனவரி 2013



கெவில்ட்டன் காலத்தின் தேவைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் மிகப்பிரசித்திவாய்ந்த இக்கண்காட்சி, வடபகுதி மக்களுக்கான மிகச்சிறந்த வர்த்தகக் களமாக அமையவுள்ளது.

உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் சேவைகள், விசேட உணவு வகைகள் மற்றும் குடிபானங்கள், உங்கள் வீட்டுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள், கட்டட நிர்மாண பொருட்கள் மற்றும் உபகரணங்கள், அலங்கார சாதன மற்றும் ஒப்பனை சேவைகள் இக்காண்காட்சியில் இடம்பெறும் பிரதான அம்சங்களாகும்.

அத்துடன் தென்னிலங்கையைச் சேர்ந்த முன்னணி இசைக்குழுவினரின் இசைநிகழ்வுகளுடன் கூடிய களியாட்டமும் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தவுள்ளது.

தினசரி இசை நிகழ்ச்சி



# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2013

JITF 2013
JAFFNA INTERNATIONAL TRADE FAIR
4th Edition

உடன் இணைந்து
கல்வி யாழ்ப்பாணம்

ஜனவரி 18ம் 19ம் 20ம் திகதிகளில்
மு.ப 10.00 தொடக்கம் பி.ப 8.00 வரை
துரையப்பா விளையாட்டரங்கில்

**Organized by**
LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

**In Association with**
CCIY
Consulate General of India Jaffna

**Co-Organized by**
FCCISL Sri Lanka

**Supported by**
Jaffna Municipal Council
SRI LANKA CONVENTION BUREAU

**Gold Sponsor**
dimo TECHNOLOGY அபார ஆற்றல்

**Co-Sponsors**
Necto
Elephant House

**Education Partners**
ICBT CAMPUS
CINEC

Official Logistic Provider: dart
Official Insurance Partner
Official Print Media-Tamil
Official Electronic Media: வசந்தம் வசந்தம்TV
Official Leasing Partner: சென்ட்ரல் பினான்ஸ்


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## ஓராண்டு போனதே காணவில்லை எம் அம்மாவை

# அமரர் அருளம்பலம் கண்மணி



மண்ணில் 25.11.1932

விண்ணில் 28.01.2012

அணையாத தீபமே
எம்மை வாழ வைத்த எம் அருமை அம்மாவே
அம்மா நீங்கள் எம்மைப் பாதி வழிதனில்
பரிதவிக்க விட்டு எங்கு சென்றீரோ!
ஓர் ஆண்டல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு மறையாது
கனவின்றி நனவினில் ஓடோடி வாராயோ
வழி மீது விழி வைத்து
காத்து நாமிருக்கிறோம்

பிரிவால் துயருறும்:
இளைய மகன்
அ. செல்வராசா (சுவிஸ்)

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(C/5645) (2.6.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம்களிலுள்ள ஈழத்தமிழர்களை குடும்பத்துடன் சேர்த்து வைக்கவும்

## வைகோ கோரிக்கை

சென்னை, ஜன.17

ஈழத்தமிழர்கள் குடும்பத்தினருடன் வாழ திறந்த வெளிமுகாம்களுக்குஅனுப்பி வைக்க வேண்டும் என்று வைகோ அறிக்கை ஒன்றில் வெளியிட்டுள்ளார்.

வைகோ நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தமிழக கியு பிரிவு பொலிஸாரால் பொய் வழக்குகள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாகியும் எந்த குற்றமும் செய்யாமல் ஈழத்தமிழ் அகதிகள் தண்டனையை அனுபவித்து வருகின்றனர். எனவே தங்களை திறந்த வெளி முகாம்களுக்கு அனுப்பக் கோரி பலகட்ட அறவழிப் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டு இருக்கும் ஈழத்தமிழர்கள் 33 பேர்களில், 25 பேர் கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வழக்குகளை திரும்பப் பெற்று தங்கள் குடும்பத்தினருடன் வாழ வகைசெய்ய வேண்டும், திறந்தவெளி முகாம்களுக்கு அனுப்ப வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாநிலை அறப்போராட்டத்தை நடத்தி வந்தனர்.

கடந்த 8 ஆம் திகதி செங்கல்பட்டு அரச பொது மருத்துவமனையில் நான் நேரடியாகச் சென்று அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறிவிட்டு, மாநில அரசு அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தேன். ஆனால் இதுநாள் வரையில் அவர்கள் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

சிகிச்சை பெற்று வந்த சில ஈழத்தமிழர்களுக்கு மஞ்சள் காமாலை நோய், வலிப்பு நோய், இருதய நோய் பாதிப்புக்கு உள்ளாகி உயிருக்குப் போராட்டிக் கொண்டிருந்தனர். அந்த வேளையில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரடியாக மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டார். விடுதலை செய்வதற்கான ஏற்பாட்டை அரசுக்கு பரிந்துரைப்பதாகவும், எனவே உடல் நலத்தை கருத்தில் கொண்டு உண்ணாநிலை போராட்டத்தை கைவிடுமாறும் கோரினார். இதன்பேரில், இதில் 16 பேர் போராட்டத்தைக் கைவிட்டு செங்கல்பட்டு சிறப்பு முகாமுக்குச் சென்றனர்.

நேற்றோடு 26 ஆவது நாளாக போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் தமிழக அரசு மனி தாபிமான அடிப்படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே நேற்று முதல் தங்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சையை ஏற்காமல் சாவது என்ற முடிவுக்கு வந்து விட்டனர்.

எனவே மரணத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்து விட்ட ஈழச் சகோதரர்களை காத்திட தமிழக அரசு, மனிதாபிமானத் தோடு முன்வர வேண்டும். விபரீதம் நடப்பதற்கு முன்பாக தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்-என்றுள்ளது.

(வ)

## புற்றுநோயைக் குணப்படுத்த மூலக்கூறு கண்டுபிடிப்பு

புற்றுநோயைக் குணப்படுத்தும் மூலக்கூறை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

உயிர்கொல்லி நோயான புற்றுநோயால், இந்தியாவில் ஆண்டுதோறும் அதிகமானோர் இறக்கின்றனர். இந்த நோய்க்கு தற்போது அளிக்கப்படும் சிகிச்சைகள் பக்க விளைவுகள் ஏற்படுத்துவதாக இருக்கின்றன.

இதனைக் குணப்படுத்துவதற்கான மாற்று மருந்தை கண்டுபிடிக்கப் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் மருத்துவர் சதீஷ் சி ராகவன் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு, இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது.

அதில், புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கான புதிய மூலக்கூறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்நோயைக் குணப்படுத்துவற்கான புதிய மருந்துகளை தயாரிப்பதில் இந்த மூலக்கூறு புரட்சியை ஏற்படுத்தும் என்று அந்தக் குழு தெரிவித்துள்ளது. மேற்படி மூலக்கூறுக்கு சதீஷ் அஸ் எஸ்சிஆர்-7 என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது குறித்து சதீஷ் அளித்த பேட்டியில்,

புற்றுநோய்க்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் சிகிச்சையில், இந்த மூலக்கூறு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். புற்றுநோய் சிகிச்சையில் இந்த மூலக்கூறு கண்டுபிடிப்பு ஒரு மைல்கல் என்றுகூடக் கூறலாம். கட்டியால் பாதிக்கப்பட்ட எலிகளுக்கு இந்த மூலக்கூறை செலுத்திப் பரிசோதனை செய்ததில், கட்டிகளின் வளர்ச்சி தடுக்கப்பட்டு, எலிகளின் வாழ்நாள் அதிகரிப்பது உறுதியானது என்றார்.

(வ)

# ஈழத் தமிழுரை விடுவிக்கக் கோரி விடுதலை சிறுத்தைகள் போராட்டம்

செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு முகாமில் உள்ள ஈழத்தமிழர்களை விடுதலை செய்யக்கோரி விடுதலைச் சிறுத்தைகள் நேற்றுமுன்தினம் உண்ணாநிலை அறப்போராட்டம் நடத்தினர்.

பல ஆண்டுகளாக எந்த வித விசாரணையும் இல்லாமல் செங்கல்பட்டு சிறப்பு முகாமிலுள்ள 33 ஈழத்தமிழர்களும் பூந்தமல்லி சிறப்பு முகாமிலுள்ள 4 ஈழத்தமிழர்களும் தொடர்ச்சியாக சிறைப் படுத்தப்பட்டு வந்துள்ளனர்.

கடந்த வாரம் தங்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ஈழத்தமிழர்கள் உண்ணாவிரதப் போராட் டத்தை முன்னெடுத்தனர்.

அதில் 9 பேர் தற்போது தொடர்ச்சியாக 25 ஆவது நாளாக மருத்துவமனையிலும் உண்ணாவிரதத்தை தொடர்ந்து வருகின்றனர்.

முகாம்களில் உள்ளவர் அவர்களுடைய கோரிக்கையானது தங்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது தங்களை திறந்தவெளி முகாமுக்கு மாற்றவேண்டும் என்பதே. அவர்களின் கோரிக்கையை வலியுறுத்தி நேற்று முன்தினம் மறை மலை நகரில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது.

களை அங்கேயே கொன்று விடுவோம் என்று சொல்லிப் பயமுறுத்தி பெண்களிடம் பாலியல் தொந்தரவு செய்கின்றனர். இவற்றை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாகக் கண்டிக்கிறது.

இல்லையென்றால் எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவனின் வழிகாட்டுதலின் படி மிகப் பெரிய போராட்டம் நடத்தப்படும் -என்றார்.

(வ)

## கேள்விக் குறியாகும் நீதித்துறை

### சர்வதேச நீதித்துறை ஆணைக்குழு கவலை

கொழும்பு,ஜன.17

புதிய பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமை இலங்கையின் நீதித்துறையை கேள்விக்குறியாக்கி உள்ளது என்று சர்வதேச நீதித்துறை ஆணைக்குழு கவலை தெரிவித்துள்ளது.

மொஹான் பீரிஸ் இதற்கு முன்னர் இலங்கையின் பல்வேறு நீதித்துறை சார்ந்த பதவிகளை வகித்துள்ளார். எனினும் அவர் அரசைப் பாதுகாப்பதில் மிக முக்கிய பங்காளியாக செயற்பட்டுள்ளார்.

அவர் இலங்கையின் சட்டமா அதிபராகவும், ஜனாதிபதியின் சட்ட ஆலோசகராகவும் இருந்த காலப் பகுதியில் இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல் உள்ளிட்ட குற்றச்சாட்களில் அரசைக் காப்பாற்றியுள்ளார்.

இவ்வாறான ஒருவர் நாட்டின் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டமை, இலங்கையின் நீதித்துறைக்கு பெரிய சவாலாக இருக்கும் என்று சர்வதேச நீதித்துறை ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

(ச)

# சிறந்த களமாக யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.17

தைப்பொங்கல் திருநாளை மகிழ்ந்து கொண்டாடிய யாழ்ப்பாண மக்களுக்கு மற்றுமொரு முக்கிய நிகழ்வு காத்திருக்கின்றது. தொடர்ச்சியாக நான்காவது வருடமாக நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சியே அந் நிகழ்வாகும். யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் 2013 ஜனவரி 18 ஆம், 19 ஆம்,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள. இந்தக் கண்காட்சி வடபகுதி மக்கள், தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகத் துறையினர் ஆகிய அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.




உள்நாட்டையும் வெளிநாட்டையும் சார்ந்த நிறுவனங்கள் பங்குபற்றும் இந்தக் கண்காட்சி, பொது மக்களுக்குத் தேவைப்படும் பொருள்கள் மற்றும் சேவைகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

கடந்தவருடம்நடத்தப்பட்ட யாழ்ப்பாண வர்த்தகக் கண்காட்சிக்கு 50,000 க்கு மேற்பட்ட பார்வையாளர்கள் வந்திருந்தனர். முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், வர்த்தகத் துறையினர் ஆகியோரும் பொதுமக்களும் நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பை இந்தக் கண்காட்சி வழங்கியது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, இலங்கை வர்த்தக, கைத்தொழில் சங்ளங்களின் சம்மேளனம் (FCCISL) யாழ்ப்பாண வர்த்தக, கைத்தொழில் சம்மேளணம் (CCIY), யாழ்ப்பாண மநாகர சபை , இலங்கை மாநாடுகள் பணியகம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் பிரதிநிதியின் ஒத்துழைப்புடன் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் போர்ச் சூழ்நிலை முடிவுற்றதைத் தொடர்ந்து அபிவிருத்திப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள வடபகுதி இப்பொழுது முதலீடுகளுக்கான சிறந்த களமாக விளங்குகிறது. கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றப்படுகின்றன. புதிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. மக்களின் வாழ்க்கை முறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த 4 வருடங்களில் வடபிராந்தியச் சந்தை மகத்தான முறையில் விரிவடைந்துள்ளது என்று ஜனாதிபதி விருது பெற்ற லங்கா எக்ஸிபிஷன் அன்ட் கொன்பரன்ஸ் சேர்விசஸ் பிறைவேட் லிமிட்டடின் (LECS) பணிப்பாளர் ஜனாப் இம்ரான் ஹஸன் கூறினார்.

''நான்கு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு சென்ற போது, அந்தப் பிரதேசத்தின் முதலீட்டு வாய்ப்புக்கள் நன்கு அறியப்படாத ஒன்றாக இருந்தது. ஆனால், இன்று அனைத்தும் மாறியுள்ளன. உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான [illegible] இடம் [illegible] நிலைபேறான வளர்ச்சிக்கும் புதிய முதலீடுகளுக்கும் ஏராளமான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இந்த வாய்ப்புகளை நேரடியாக அறிந்துகொள்ள யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி உதவும். வர்த்தக நிறுவனங்கள் தமது உத்தேச வாடிக்கையாளர்களின் தேவைகளை நன்கு அறிந்து கொள்ளவும், பொதுமக்கள் தாம் பெறக்கூடிய புதிய பொருள்கள் மற்றும் சேவைகள் அறிந்து கொள்ளவும் இந்தக் கண்காட்சி ஒரு சிறந்த அரங்கமாக அமையும் '' என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வர்த்தக, கைத்தொழில் சம்மேளனத் தலைவர் கே.பூரணச்சந்திரன் தகவல் தருகையில்,

முதலீட்டாளர்கள், வர்த்தகத் துறையினர், தொழில் முனைவாளர்கள், பாவனை யாளர்கள் அனைத்து தரப்பினரும் ஒன்று கூட இருப்பதால், முன்னொரு போதும் இல்லாத அளவு அதிகமான பார்வையாளர்கள் இந்த வருடக்கண்காட்சிக்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள்'' என்று கூறினார். மேலும் குறிப்பிடுகையில், இந்தியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் குழுவொன்று இந்தக் கண்காட்சிக்கு வருகைதரவுள்ளதால் ஆர்வமுள்ள யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் துறை சார்ந்தோர் மேற்படி குழுவினருடன் நேரடியாகக் கலந்துரையாடி சாத்தியமான வகையில் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என்றார் அத்துடன் விரைவில் இயங்கவுள்ள அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்புவோர், இந்தியத் தயாரிப்பு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நியாயமான கட்டண அடிப்படையில் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். மேலும் கண்காட்சி இடம்பெறும் நாள்களில் இலங்கை கட்டட நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணத்துறை சார்ந்த பயிற்சிப் பட்டறைகள் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்துறையினருக்கான பயனுள்ள கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன என்றும் இத்துறை சார்ந்த ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரும் மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றி பயன்பெற முடியும் என்றார்.

இந்த வருடக் கண்காட்சியில் முக்கிய பங்கெடுக்கவிருக்கும் பிரபல நிறுவனங்களில் ஒன்றான டீசல் அன்ட் மோட்டோர் என்ஜினியரிங் பி.எல்.சி. (DIMO) யாழ்ப்பாண மக்களின் அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்வதில் பெரும் ஆர்வம் காட்டுகின்றது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருண்டது சென்.மேரிஸ் அணி அளவெட்டி மத்தி சம்பியன்



யாழ்ப்பாணம், ஜன. 17

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய 9 பேர் பங்கு பற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

இந்தத் தொடரின் இறுதியாட்டம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கோப்பாய் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

எனவே துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி. எதிரணியின் பந்து வீச்சாளர்களின் வியூகங்களை உடைத் தெறிந்து அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக வீரர்கள் ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினர். ஆயினும் எதிர்பார்த்தளவுக்கு அளவெட்டி மத்திய அணியால் மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையை அடைய முடியவில்லை. ஏனெனில் கோப்பாய் சென். மேரிஸ் வீரர்களின் களத் தடுப்பு பலமாக இருந்தது. ஒரு புறம் அளவெட்டி மத்திய அணி ஓட்டங்களை சராசரியாகப் பெற்றபோது மறுமுனையில் அது இலக்குகளையும் சீரான இடைவெளிகளையும் இழந்தது. இதனால் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் 11.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது.

**இலகுவான இலக்கைக் கூட சென்.மேரிஸ் அணியால் எட்ட முடியாதளவுக்கு அளவெட்டி மத்திய அணியின் பந்து வீச்சாளர்களின் வேகத்தில் அனல் பறந்தது.**

இதில் றகீம் 13 ஓட்டங்களையும், பார்த்தீபன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் அன்ரன் 3 இலக்குகளையும், டியூக் 2 இலக்குகளையும், சுபாஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

67 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடினர் கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியினர். ஆயினும் மிக இலகுவான இலக்கைக் கூட அவர்களால் எட்ட முடியாதளவுக்கு அளவெட்டி மத்திய அணியின் பந்து வீச்சாளர்களின் வேகத்தில் அனல் பறந்தது. ஓட்டங்களை எடுக்க முடியாமல் திணறிய சென்.மேரிஸ் வீரர்கள், இலக்குகளையும் அடுத்தடுத்து பறிகொடுத்தனர். இதனால் அந்த அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 30 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. எனவே 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டிய அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

இதில் அதிக பட்சமாக புனிதன் 10 ஓட்டங்களை அணி சார்பாகப் பெற்றார்.

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி சார்பில் ரகீம், சுதன், விஷ்ணு ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி வீரன் ரகீம் ஆட்டநாயகனாகவும், அதே விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தயாளன் ஆட்டத் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ங-23)

# பொங்கல் கிரிக்கெட்டில் சாதித்தது செந்தணல்

தைப்பொங்கல் திருவிழாவை முன்னிட்டு ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகம் நடத்திய 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் செந்தணல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது.

கடந்த திங்கட்கிழமை ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் செல்வாநகர் செந்தணல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடியது ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகம். அந்த அணியினர் மந்த கதியிலேயே ஓட்டங்களைச் சேகரித்தனர். ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக வீரர்களின் தடுமாற்றத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட செந்தணல் பந்து வீச்சாளர்கள் இலக்குகளை அடுத்தடுத்து சரிக்கத் தொடங்கினர். இதனால் இன்னும் இக்கட்டான நிலைக்கு ஜெயந்திநகர் தள்ளப்பட்டது. எனவே அந்த அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குளையும் இழந்து 42 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

இதில் அதிகபட்சமாக சஞ்சய் 20 ஓட்டங்களைத் தனது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் செல்வாநகர் செந்தணல் விளையாட்டுக் கழக அணி சார்பாக பிரதாப் 7 ஓட்டங்களைக்கொடுத்து இரண்டு இலக்குகளை வீழ்த்தினார்.

43 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடியது செல்வாநகர் செந்தணல் விளையாட்டுக் கழக அணி. எனினும் அந்த அணி எதிர்பார்த்தது போன்று வெற்றியை அடைவது அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. துடுப்பாட்டத்தில் விட்ட குறையை ஜெயந்திநகர் அணி பந்து வீச்சில் நிவர்த்தி செய்தது. ஒரு கட்டத்தில் ஜெயந்திநகர் அணி வெல்வதற்கான சாத்தியங்கள் தென்பட்டன. எனினும் எதிரணியின் இறுதியிலக்குகளை திட்டமிட்டபடி அந்த அணியால் சரிக்க முடியாமல் போனதால் வெற்றி செந்தணலின் பக்கம் திரும்பியது. ஜெயந்திநகர் அணியின் பந்துவீச்சுக்குத் தாக்குப் பிடித்த செந்தணல் அணி 9.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



இதில் தனுசன் 9 ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணிசார்பில் தக்சன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

இந்தச் சுற்றுப்போட்டியில் ஆட்டத் தொடர் நாயகனாக ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக சஞ்சய் தெரிவு செய்யப்பட்டார். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடல்களில் நடத்தி வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

**மாலை 3.00 மணி (பெண்கள் பிரிவு - அரையிறுதியாட்டம் )**

★ பட்டர்பிளை விளையாட்டுக் கழகம் எதிர் கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி.

**மாலை 4.30 மணி**

★ பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் மகளிர் விளையாட்டுக் கழகம்.

**மாலை 6.30 (ஆண்கள் பிரிவு-அரையிறுதியாட்டம் )**

★ சென்றல்லைட்ஸ் விளையாட்டுக்கழக 'சொக்ஸ்' அணி எதிர் பற்றீசியன் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**பிற்பகல் 3.30 மணி**

★ தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் எதிர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்.

**மாலை 4.30 மணி**

★ காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் கொலின்ஸ் விளையாட்டுக் கழக 'பி'அணி.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**மாலை 6 மணி**

★ ஈகிள் விளையாட்டுக் கழகம் எதிர் அம்மன் விளையாட்டுக் கழகம். (ங-23)

# '786' வென்றது

யாழ்ப்பாணம்,ஜன.17

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் முன்னாள் கழக வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகிறது.

இந்தச் சுற்றுத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் '786' விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

'786' விளையாட்டுக் கழக அணிக்கும் அம்மன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 786 விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ங-23)

# பற்றீஸியன்,கே.ஸி.ஸி.ஸி. 'ஏ' கூடைப் பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜன.17

யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண் பெண் இருபாலாருக்கும் இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான காலிறுதி ஆட்டங்களில் பற்றீஸியன் விளையாட்டுக் கழகம், கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக 'ஏ' அணி என்பன வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற காலிறுதியாட்டமொன்றில் பற்றீஸியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

இதில் பற்றீஸியன் விளையாட்டுக் கழக அணி 64:42 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக்கொண்டது.

இதில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக 'ஏ' அணி 47:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றியை பறித்தார் டோனி

இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனியும், ஜடேஜாவும் போட்டியின் இறுதியில் அடித்தாடி வெற்றியை எங்களிடம் இருந்து பறித்து விட்டனர் இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்ரெயர் குக் தெரிவித்தார்.

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நேற்று முன்தினம் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 பந்துபரிமாற்றங்களில் 285 ஓட்டங்களைக் குவித்திருந்தது. ஆரம்பத்தில் இந்திய அணி தடுமாறிய போதிலும், இறுதிநேரத்தில் டோனி, ஜடேஜா இருவரின் துடுப்பாட்டம் போட்டியின் போக்கை மாற்றியிருந்தது.

இந்த தோல்வி குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்ரெயர் குக் தெரிவித்ததாவது-

ஆட்டத்தின் இறுதி 10 பந்துபரிமாற்றங்களில் அதிக ஓட்டங்களை இந்திய அணி குவித்தது. 110 ஓட்டங்களை அந்தப் 10 பந்துபரிமாற்றத்திலும் இந்திய அணியால் பெறமுடிந்தது.இதனால் அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கை நாங்கள் திட்டமிட்டதை விட அதிகரித்துவிட்டது. 285 என்ற ஓட்ட எண்ணிக் கையை துரத்துவதென்பது கடினமானதுதான்.

மகேந்திரசிங் டோனி போன்ற வீரர்கள் களத்திலிருக்கும்போது பந்துவீச்சாளர்கள் தங்கள் திறமைகளைச் சரியான முறையில் கையாளா விட்டால் அதிக தடுமாற்றம் ஏற்படும். எங்களின் துடுப்பாட்ட வீரர்களும் இலக்குகளை வீணாகப் பறிகொடுத்ததால் வெற்றியை நோக்கி நகரக்கூட எங்களால் முடியவில்லை. -என்றார். [ந]





# முரளியின் அணி 'அவுட்'

ஆஸ்ரேலியாவில் இடம்பெற்றுவரும் பிக்பாஷ் லீக் போட்டிகளின் அரையிறுதிப் போட்டியில் முத்தையா முரளிதரன் பங்குபற்றிவந்த மெல்போர்ண் ரெனிகேட்ஸ் அணி தோல்வியடைந்துள்ளது. மெல்போர்ண் ரெனிகேட்ஸ் அணி பிறிஸ்பேர்ண் ஹீற் அணியிடம் தோல்வியடைந்தது.

மெல்போர்ண் டொக்லான்ட்ஸ் மைதானத்தில் இடம் பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பிறிஸ்பேர்ண் ஹீற் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 183 ஓட்டங்களைக் குவித்தது. முதலாவது இலக்கை 17 ஓட்டங்களுக்கே இழந்த அந்த அணி, அதன் பின்னர் அதிரடியாக ஆடியது.

துடுப்பாட்டத்தில் பிறிஸ்பேர்ண் ஹீற் அணி சார்பாக லூக் பொமர்ஸ்பக் 70 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களையும், ஜோ பேர்ண்ஸ் 28 பந்துகளில் 33 ஓட்டங்களையும், கிறிஸ் லைன் 9 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மெல்போர்ண் ரெனிகேட்ஸ் அணி சார்பாக டரன் பற்றின்சன், முத்தையா முரளிதரன், ஆரோன் ஃபின்ச் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினர்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மெல்போர்ண் ரெனிகேட்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்குக்காக வேகமான 35 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அதன் பின்னர் அந்த அணியால் இதேவேகத்தில் ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் போனது. பின்வரிசை வீரர்கள் மந்தமாக ஆடியதால் அந்த அணியால் தோல்வியைத் தவிர்க்கமுடியவில்லை.

துடுப்பாட்டத்தில் மெல்போர்ண் ரெனிகேட்ஸ் அணி சார்பாக பென் றோஹர் 22 பந்துகளில் 42 ஓட்டங்களையும், ஆரோன் ஃபின்ச் 23 பந்துகளில் 23 ஓட்டங்களையும், அலெக்ஸ் ஹேல்ஸ் 15 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிறிஸ்பேண் ஹீற் சார்பாக பென் கட்டிங் 3 இலக்குகளையும் , அலிஸ்டர் மக்டேமர்ட், கிறிஸ் லைன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் நேதன் ஹொரிட்ஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக பிறிஸ்பேண் ஹீற் அணியின் லூக் பொமர்ஸ்பக் தெரிவானார். பிறிஸ்பேண் ஹீற் அணி இறுதிப் போட்டியில் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அல்லது மெல்போர்ண் ஸ்ரார்ஸ் அணியைச் சந்திக்கவுள்ளது.[ந]

# காயத்தோடும் வென்றார் செரினா

ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் செரினா வில்லியம்ஸ், முதல் சுற்றில் ருமேனியாவின் எடினா காலோவிட்ஸ் என்பவருடன் மோதினார்.


ஆக்ரோஷமாக ஆடிய செரினா தன்னுடன் போட்டியிட்ட எடினாவை ஒரு புள்ளிகூட எடுக்க விடாமல் திணறடித்தார்.

அப்போது செரினாவின் வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பின்பு வலியுடன் தொடர்ந்து ஆடிய அவர் 6-0, 6-0 என்ற நேர்செற்களில் வெற்றி பெற்று ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

அவரது காலில் வலி மற்றும் வீக்கம் இருப்பதால் எக்ஸ்ரே எடுக்கப்பட உள்ளது. ஆனாலும் அடுத்த சுற்றில் தன்னால் சிறப்பாக ஆட முடியும் என்ற நம்பிக்கையில் செரினா இருக்கிறார்.

அச்சுறுத்தும் அளவுக்கு ஏதாவது காயம் இருந்தால் போட்டியில் பங்கேற்காமல் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை. அதேசமயம் நான் நன்றாக இருப்பதாகவே உணர்கிறேன் என்று செரினா கூறினார்.

முன்னதாக நடந்த ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் உலக தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, நெதர்லாந்தின் ராபின் ஹாசை 6-3, 6-1, 6-3, என்ற செற்கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.[ந]



# வென்றார் ஆனந்த்

டாடா ஸ்டீல் சதுரங்கத் தொடரின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் வெற்றி பெற்றார்.

நெதர்லாந்தில் உள்ள விஜ் ஆன் ஜீ நகரில், 75ஆவது டாடா ஸ்டீல் செஸ் தொடர் நடக்கிறது. இதில் உலக சதுரங்கச் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த், அமெரிக்காவின் கார்ல்சன், ஆர்மேனியாவின் ஆரோனியன் உள்ளிட்ட 42 முன்னணி வீரர்கள், மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றனர்.

''ஏ' பிரிவில் நடந்த மூன்றாவது சுற்று போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், இத்தாலியின் காருனா பேபியானோவை சந்தித்தார். வெள்ளை நிறக் காய்களுடன் விளையாடிய ஆனந்த், 41ஆவது நகர்த்தலின் போது வெற்றி பெற்றார். தவிர, புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்துக்கும் முன்னேறினார்.

மற்றொருபோட்டியில்இந்தியாவின்ஹரிகிருஷ்ணா, ஆர்மேனியாவின் ஆரோனியனைச் சந்தித்தார். வெள்ளை நிறக் காய்களுடன் விளையாடிய ஹரி கிருஷ்ணா, 57ஆவது நகர்த்தலின் போது போட்டியை சமநிலை செய்தார். [ந]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் திறமைகளை அறிந்திருந்தோம்

– மக்ஸ்வெல்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் திறமைகளைப் பற்றி ஆஸ்திரேலிய வீரர்கள் அறிந்திருந்ததாக ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் கிளென் மக்ஸ்வெல் தெரிவித்துள்ளார். ஆகவே இலங்கைக்கெதிராகத் தாங்கள் கவனவீனமாக விளையாடியிருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட்



சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி முதலாவது போட்டியில் தோல்வியடைந்திருந்த போதிலும், இரண்டாவது போட்டியில் 8 விக்கெட்டுக்களால் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருந்தது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்ற நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த கிளென் மக்ஸ்வெல், அந்தப் போட்டியின் மைதான ஆடுகளமும் இலங்கைக்கு உதவியிருந்ததாகத் தெரிவித்ததோடு, இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் மிகச்சிறப்பாகப் பந்துவீசியிருந்ததாகத் தெரிவித்தார்.

குறிப்பாக அஞ்சலோ மத்தியூஸ் மிகச்சிறப்பாகப் பந்து வீசியிருந்ததாகத் தெரிவித்த கிளென் மக்ஸ்வெல், துடுப்பாட்டத்துக்குச் சாதகமான ஆடுகளங்களில் அவரை எதிர்த்தாடுவது இலகுவானதென்ற போதிலும், இரண்டாவது போட்டி இடம்பெற்ற ஆடுகளத்தில் அவர் கணித்து ஆடப்பட முடியாத ஒருவராகக் காணப்பட்டதாகத் தெரிவித்தார்.

இரண்டாவது போட்டி நாளை மறுதினம் இடம்பெறவுள்ள நிலையில் ஆஸ்திரேலிய அணியால் இத்தோல்வியிலிருந்து மீண்டு வெற்றிபெற முடியும் எனத் தெரிவித்த கிளென் மக்ஸ்வெல், அதற்கான திறமை ஆஸ்திரேலிய அணியிடம் காணப்படுவதாகத் தெரிவித்தார். (ந)

# பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் பாகிஸ்தான் வீரர்கள் இல்லை

பங்களாதேஷ் பிறிமியர் லீக் தொடரில் பாகிஸ்தானைச் சேர்ந்த வீரர்கள் பங்குபெறமாட்டார்கள் என உத்தியோபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று வழங்கப்பட்டிருந்த இறுதிக் காலக்கெடுவுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பதிலளிக்காததையடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கு பாகிஸ்தான் வீரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனுமதியை வழங்குவதற்கான இறுதி நாளாக இன்றைய தினமே அமைந்திருந்



தது. எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வீரர்களுக்கான அனுமதியை வழங்கியிருக்கவில்லை.

பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் சபை சம்மதித்தால் மாத்திரமே பங்களாதேஷ் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றுவதற்குத் தங்களது வீரர்களை அனுமதிக்க முடியும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தொடர்ந்தும் தெரிவித்து வந்தது.

இதற்கான சமரசத்தை எட்டுவதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை முயற்சித்து வந்த போதிலும், தற்போதைய நிலையில் பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடியாது என்பதில் உறுதியாகக் காணப்பட்டது. இந்நிலையிலேயே பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய முடிவு காரணமாக பாகிஸ்தான் வீரர்களுக்குப் பதிலாக புதிய வீரர்களை ஒப்பந்தம் செய்யுமாறு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை ஒவ்வொரு அணிகளுக்கும் அறிவித்துள்ளது. (ந)

# எதிர்ப்பும் சிக்கலும்...

சர்வதேச கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் மகளிர் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மும்பை பயங்கரவாத தாக்குதலுக்குப் பின்பு, ஐந்து ஆண்டுகள் கழித்து சமீபத்தில் தான் பாகிஸ்தானுக்கெதிரான கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடந்தது.

இது முடிந்த சில நாள்களில், எல்லைப் பகுதியில் இரு இராணுவ வீரர்கள் பாகிஸ்தான் இராணுவத்தினால் கொடூரமாக கொல்லப்பட்டனர். இதனால், பாகிஸ்தானுக்கெதிரான எதிர்ப்பு மீண்டும் வலுப்பெற்றுள்ளது. குறிப்பாக இந்தியன் ஹொக்கி லீக் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் வீரர்களுக்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், பாகிஸ்தான் ஹொக்கி வீரர்கள் தங்களது தங்குமிடத்தை மும்பையிலிருந்து மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனிடையே வரும் 31ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை 8 அணிகள் பங்கேற்கும் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் மும்பையில் நடைபெறவுள்ளது.

இதற்கான பாகிஸ்தான் மகளிர் அணி ஜனவரி 26இல் இந்தியா செல்லவுள்ளது. இதன்போது இந்தியாவில் எதிர்ப்பு அதிகமாகும் எனத் தெரிகிறது. இதனால், பாகிஸ்தான் அணி பங்கேற்கும் போட்டிகளை எங்கு நடத்துவது என சர்வதேச கிரிக்கெட் சபை ஆலோசித்து வருகிறது. (ந)


**விசேட போட்டிப் பரீட்சை வகுப்பு**

27ஆம் திகதி நடைபெறவுள்ள
★முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை
★கிராமசேவகர் போட்டிப் பரீட்சை
★பதிவாளர் சேவை போட்டிப் பரீட்சை
நாள்-19.01.2013 சனி
காலை 9.00 - 5.00மணி வரை
விரிவுரையாளர்கள்
P.[illegible], P.[illegible]
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
T.P- 0774696695

**SPOKEN ENGLISH**

**யாருக்காக ?**

- அரச,தனியார் அலுவலர்கள்
- பல்கலை,உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர்,யுவதிகள்
- வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள்
- வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12வயதிற்கு மேல் ஆங்கிலம் பேசவிரும்பும் அனைவரும்

3 மாத சனி ,ஞாயிறு பயிற்சி நெறி-19.01.2013

1) காலை 8.00-10.00 2) மு.ப 10.00-12.00
3) பி.ப 1.00-3.00 4) மாலை 3.00-5.00

குறிப்பு: எமது பயிற்சியில் இணைந்து எவராவது 3 மாதமுடிவில் ஆங்கிலத்தில் ஏனையவர்களுடன் சரளமாகப் பேச முடியாதிருந்தால் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்

SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். TEL.0776214567

**A/L பொருளியல் நூல்**

**உற்பத்தி & செலவுக் கோட்பாடுகள்**

ஆசிரியர்: வே.கருணாகரன்
யாழ். இந்து மகளிர் கல்லூரி

(28453)

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

**கிளி /எடிசன் கல்லூரி**

வலயக்கல்விப் பணிமனை முன்பாக - கிளிநொச்சி.
● முகாமைத்துவ உதவியாளர்.
● கிராமசேவகர்
விசேட கருத்தரங்கு 19.01.2013 சனி 1.00 மணிக்கு யாழ்.பிரபல ஆசிரியர்
BY.தவசேகர்
தொடர்பு- 0775483470

**விற்பனையாகின்றது**

முகாமைத்துவ உதவியாளர் சேவை -250ரூபா
கிராமசேவகர் போட்டிப் பரீட்சை -350 ரூபா
P.காந்தரசன்
கிடைக்குமிடம்
யாழ்ப்பாணம் - பூபாலசிங்கம், அன்னை
வவுனியா- சுஜன், KPK, இராமசந்திரன்
மன்னார்- ஜோதி புக்

**HOTEL வேலைக்கு ஆள்கள் தேவை.**

வவுனியாவில் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள உணவகத்துக்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

- பிரதான சமையல்ஆள் (Chief Cook, Local & Chinese Foods)
- உதவி சமையல் ஆள் (Local & chinese Foods)
- கொத்துரொட்டி தயாரிப்பாளர்.
- உணவு பரிமாறுபவர்கள் (Waiters)
- சமையல் உதவியாளர் (Helping for cooking)

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 7585913
077 4918748
இல.3, 6ஆவது ஒழுங்கை, வைரவர் கோயில் வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

19.1.2013(sat)
aat(SriLanka)
FOUNDATION, INTERMEDIATE, FINAL
Medium : Tamil, English
க.பொ.த(சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

External degree
GAQ BA1, BA(Final)
1st incom B.Com (part I), B.Com (part II)
B.Com (Final)

Further Details
JAFFNA COLLEGE
UNDERGRADUATE DEPT,
464, Hospitel Road, Jaffna.
021 2223382

**Offer 9 Course fee**
கணினி மையம் கல்வியங்காட்டில்
Duration 1-2 Month only
Ms office, Multimedia, Hardware, Networking
Web Design, DTP, English, Singalam, Accounting
மேலதிக விபரங்களுக்கு நேரில்
Management Computer and Accounting Institute (MCAI CAMPUS)
243, Adiyapatham Road, Near Kalviyankadu Junction


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.